கல்கி

KALKI
14.1.2001
ரூ. 5.00

V2 புத்தகங்கள்

இளமைச் சிறப்பிதழ்

5 நொடிகளில் முடிக்காமல், ஏன் 5-10 நாட்கள் அவதிப்படுகிறீர்கள்?

ஜலதோஷத்தை அலட்சியப்படுத்தாதீர்கள். அவதிப்படாதீர்கள். அவதியோடு சேர்த்து அன்றாட வாழ்வில் பல தர்மசங்கடங்களை கொடுக்க கூடியது ஜலதோஷம். இண்டெர்வியூ, மீட்டிங், சபரிமலை, பூஜை போன்ற முக்கியமான தருணங்களில்தான், ஜலதோஷம், அழையா விருந்தாளியாக வந்து தொந்தரவு செய்யும். தும்மல், மூக்கில் நீர் வடுதல், கண்களில் நீர் வடுதல், தொண்டை கரகரப்பு இவை ஜலதோஷம் வருவதற்கான முதல் அறிகுறிகள். உடனே, ஒன்று அல்லது இரண்டு சாஷேக்கள் சமஹன் எடுத்து கொண்டால், ஜலதோஷத்தை நொடிப் பொழுதில் கிள்ளி எறியலாம்.

சமஹனில் உள்ள தீர்கடுகம் (சுக்கு, மிளகு, திப்பிலி) மூலிகைகளின் சாறுத்தை உடனே ரத்தத்தில் சேர்த்து, நொடிகளில் செயலாற்றும்.

ஜலதோஷத்தை முதல் அறிகுறியிலேயே தடுத்து நிறுத்தும் சக்தி

உடனடி ஆயுர்வேத பாதுகாப்பு

லிங்க் சமஹன்

நுகர்தோல், நுகர்தோல் கூடிய இருமல் மற்றும் சளிகோளாறுகளுக்கு (சளி)

14 மூலிகைகளின் சாரம்

100% இயற்கை 0% பக்கவிளைவு

காலேஜ் ரூ - வீலர்கள் -1

டி.வி.எஸ்.
சுசுகி ஃபியரோ
(4 ஸ்ட்ரோக்)

+ ஸ்பீடோ ஸ்பீடு ஓட்ட லாம்
+ அந்த ஸ்பீடிலும் ஸ்திர மாக ஓடும்
— அம்மாடியோவ், இவ் வளவு விலையா?
(வண்டி வாங்கினப்புறம் கையில காதில போட்டுக்க ஏதாவது மிஞ்சும்களா?)
எக்ஸ்-ஷோரூம் விலை:
ரூ. 52,145

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ✉ மெயில் : kalkiweekly@vsnl.com

சமத்துவபுர

தேர்தல் களத்தில் திமுக வீசப்போகும் டாப்டென் அஸ்திரங்களில் சமுத்துவபுரத்திற்கே முதலிடம் என்பது உறுதியாகிவிட்டது. மத்திய அரசே முன்வந்து ஊக்கத் தொகை தர, அடடே... அப்படியா! என்று மற்ற மாநிலங்கள் சமத்துவபுர கான்செப்டைப் பார்த்துக் கைகுலுக்கி பாராட்டாத குறை. உண்மையில் சமத்துவபுரங்கள் வேறுபாடுகளைக் களைந்திருக்கின்றனவா? முதல் சமத்துவபுரத்தில் வாழ்க்கைமுறை எப்படி? நூறாவது சமத்துவபுறத்தில் என்ன நடந்திருக்கிறது. இதோ நமது சமத்துவபுர யாத்திரை.

* தங்கம்மாள்

* சேகர்

* போலி ரசீது?

மதுரை திருமங்கலத்திற்கு அருகே மேலக் கோட்டையில் அமைந்திருக்கிறது முதல் சமத்துவபுரம். மதுரை விருதுநகர் சாலை என்பதால் அறை மணிக்கொரு நகரப் பேருந்து அங்கே நிற்கிறது. சுற்றுவட்டாரத்தில் ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்குக் குடியிருப்புகள் எதுவும் இல்லாததால், சமத்துவபுரம் தனியொரு ஊராய்த் தெரிகிறது. பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற எழுத்துகள் பொறித்த கம்பீர நுழைவாயில் வரவேற்க, சாரி சாரியாய் வீடுகள்.

மொத்தமுள்ள நூறு குடியிருப்புகளில் ஆதிதிராவிடருக்கு நாற்பதும் எஞ்சிய அறுபது, மிகவும் பிற்பட்ட, பிற்பட்ட, முற்பட்ட வகுப்பு களைச் சார்ந்த பதினேழு சமுதாயத்தினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு இஸ்லாமியரும் பிராமணரும் கூட உண்டு. தெருக்களின் வழியே வலம் வந்ததில் மொத்தம் பதினோரு வீடுகள் நெடுநாட்களாகப் பூட்டிக் கிடப்பது தெரிந்தது. ஐம்பத்து ஏழாம் எண்ணுள்ள வீட்டில் கதவு உடைந்து உள்ளே நாய்களும், ஆடுகளும் தோழமையோடு படுத்திருந்தன. எழுபத்து ஒன்பதாம் எண்ணுள்ள வீட்டிலிருந்து சேகர் எதிர்ப்பட்டார்.

"சமத்துவபுர வாசம் எப்படியிருக்கிறது?"

"எனக்குச் சொந்த ஊர் பக்கத்துல இருக்கும் காமாட்சிபுரம். வாடகை வூட்டுலதான் இருந்தேன். இப்போ கலைஞரு புண்ணியத்துல சொந்தவூடு கிடைச்சிருக்கு. குடியேறின புதுசுலே எல்லோரும் பேசிப் பழகவே ஆறுமாசம் புடிச்சது. இப்போ தாயும் புள்ளையுமா ஆயிட்டோம். இங்கே எல்லா வசதியும் இருக்கு. ஆனா விருதுநகர், திருமங்கலத்துக்குதான் வேலை தேடிப் போறோம். சரியான பொளப்பு பக்கத்துல இல்லே. இதனாலே பத்து பேருக்கு மேல வீட்டைப் பூட்டிப் போட்டுட்டு வெளியூர் போயிட்டாங்க. நாங்க இங்கயே இருந்து தொழில் செய்யணும்னுதான் கறவைமாடு லோன் குடுத்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் தொடங்கினாங்க. ஆனா கறந்த பாலுக்கு மாசாமாசம்தான் பணம் கொடுத்தாங்க. இதனாலே மாட்டுக்குத் தீவனம் வாங்கிப் போட பணத்துக்குக் கஷ்டமாயிடுச்சி. கறவை குறைஞ்சு போயி எல்லோரும் மாடுகளை வித்துட்டோம். கடனையும் கட்ட முடியலே." என்று பூட்டிக் கிடக்கும் பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடத்தைக் காட்டினார்.

செயல்படாமல் பூட்டிக் கிடக்கும் பட்டியலில் அடுத்த இடம் நூலகத்திற்கு. ஐயாயிரத்திற்கும் அதிகமான புத்தகங்கள், வார, மாத இதழ்கள் என்று ஒரு முழுமையான நூலகமாக இருந்தாலும், நூலகர் என்று தனியாக யாரும்



* யாருமில்லாத வீடு

இல்லாததால் எப்போதும் பூட்டியே கிடக்கிறது என்கிறார்கள். மருத்துவமனைக்கு எப்போதாவது ஒரு நர்சு வந்து ஹாய் சொல்லிவிட்டுப் போய் விடுவாராம். இங்கே செயல் படாமல் போய்விட்ட பொதுத் தொலைபேசியை நினைத்துதான் ஆள் ஆளுக்கு வருந்துகிறார்கள்.

வணிக வளாகத்தில் மூன்று கடைகள் இருந்தும், முறைப்படி ஏலம்விட்டு நடத்தாததால் சமத்துவ புரத்திற்கு வெளியே கடைகள் முளைத்திருக்கின்றன.

சமத்துவபுரத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம்தான் ரொம்ப பிஸியாக இருந்தது. எண்பது குழந்தைகள் படிக்கும் இந்தப் பள்ளிக்கு ஒரு தலைமை ஆசிரியர், ஓர் இடை நிலை ஆசிரியர். 'பாரதியார் பாட்டுப் பாடுங்க' என்று தலைமை ஆசிரியை சித்தாய் அம்மாள் சொன்னதும், 'வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர்' பாடலை ராகத்தோடு பாடி அசத்தி விட்டார்கள்.

கடனாளிகள்!

அங்கிருந்து நகர்ந்து வளையாபதி தெருவுக்கு வந்தோம். தெருவில் நெல்லைக் கொட்டி காய வைத்துக் கொண்டிருந்தார் ஒரு மூதாட்டி. அவர் தங்கம்மாள். தம் மகனோடு வசிப்பதாகக் கூறிய அவர், காமாட்சி அம்மாள் பற்றிச் சொன்னதும் மனசு கனத்தது. இங்கே காமாட்சி என்ற ஆதரவற்ற பிராமணப் பெண்மணிக்கும் வீடு ஒதுக்கியிருக்கிறார்கள். சமத்துவபுரம் பள்ளிக் கூடத்தில் மிட்டாய் கடை வைத்து வாழ்ந்து கொண்டிருந்த அவர், கலகலப்பாகப் பழகியதால் 'மாமி மாமி' என்று எல்லோரும் அன்பாக அழைத்திருக்கிறார்கள். ஒரு நாள் மாலை, மிட்டாய், பிஸ்கட்டுகள் வாங்கிவர அருகிலிருந்த நிருமங்கலத்திற்குச் சென்றவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டிருக்கிறது. உடன் அங்கிருந்த தமது உறவினர் வீட்டுக்குப்போன அவர், தாம் இறந்துவிட்டால் சமத்துவபுற மக்களுக்கு மறக் காமல் சொல்லி அனுப்பும்படி சொல்லி விட்டு கொஞ்ச நேரத்தில் உயிர்விட்டிருக் கிறார். சமத்துவபுறத்திற்குச் செய்தி வந்ததும் ஒரு வீடு பாக்கியில்லாமல் இரண்டு லாரி பிடித்து துக்கத்திற்குப் போய்விட்டு வந்திருக் கிறார்கள்.

அதேபோல் முதல் சமத்துவபுற சமுதாயக் கூடத்தில் நடந்த முதல், திருமணம், காது குத்து இரண்டிலும் ஒருவர் பாக்கியில்லாமல் கலந்து கொண்டார்களாம்.

"சமத்துவபுறத்திற்கு உள்ளே கோவில் கட்டக் கூடாது, கட்சிக் கொடி கட்டக் கூடாது என்று பேசி முடிவு எடுத்திருக்கிறோம். இதுதவிர சாதி பற்றி யாரும் பேச மாட்டோம் என்று வெள்ளை பேப்பரில் எழுதிக் கொடுத் துட்டுத்தான் இங்கே குடி. ஏழைக்கு ஏது சார் ஜாதி?" என்கிறார் தங்கம்மாளின் பேரன் ஜெயராம். அவரிடம் சமத்துவபுறத்தில் முதல் காதல் ஏதாவது உண்டா என்று குறும்பாகக் கேட்க, "இப்போதைக்கு இல்லே..." என்றார்.

அங்கிருந்து புறப்படும் முன் ஒரு குட்டி கருத்துக் கணிப்பு நடத்தினோம். பூட்டியிருந்த

* உறவினர்களுடன் ஜாகீர் உசேன்

* "...கடன் வாங்கி, பணம் கட்டினோம்"

பதினோரு வீடுகளைத் தவிர்த்து மிச்சமிருந்த எண்பத்து ஒன்பது வீடுகளுக்கும் விசிட் அடித்து யாருக்கு உங்கள் வோட்டு என்றோம். முப்பத்தாறு பேர் தி.மு.கவுக்கும் பதினெட்டு பேர் அ.தி.மு.கவுக்கும் வாக்களிப்போம் என்று அடித்துச் சொன்னார்கள். எஞ்சிய முப்பத்தைந்து பேர் இப்போது எதையும் சொல்ல முடியாது என்று மீன்போல் நழுவினார்கள். நாமும் அங்கிருந்து நழுவி நூறாவது சமுத்துவபுறம் நோக்கிப் புறப்பட்டோம்.

LD துரை, மேலூர் அருகே இருக்கும் திருவாதவூர், மாணிக்கவாசகர் பிறந்த ஊர். இங்கே குன்றுகள் சூழ்ந்த மேடான பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது நூறாவது சமத்துவபுறம். வீடுகளின் கூரை ஏழுவனைவுகளோடு நவீன மாடலில் டிசைன் செய்யப்பட்டு கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பிரதான கூடம், சமையலறை, கூடுதலாக ஒவ்வொரு வீட்டிற்கும் நவீன கழிப்பறை.

ஜனவரி பதினைந்து தேதிக்குள் திறப்பு விழா நடைபெறும் என்று சொல்லி, சமத்துவபுரவாசிகள் யாரும் வீட்டை விட்டு எங்கேயும் போகக்கூடாது என்று காலை, மாலை இரண்டு வேளையும் கையெழுத்து வாங்குகிறார்களாம்! 'நாங்கள் என்ன கைதிகளா, வேலைக்குக்கூட போகவிடாமல் எங்களை இப்படி கையெழுத்துப் போடச் சொல்லுகிறார்கள்' என்று வருத்தப்படுகிறார்கள்.

நாம் சென்றிருந்தபோது, ஜாகிர் உசேன் உறவினர்கள் புடை சூழ ஒரு சின்ன புதுமனை புகுவிழா நடத்திக் கொண்டிருந்தார்.

"இவ்வளவு நவீன வீடுகள் கிடைச்சது சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால் இங்கே வீடு கிடைச்ச பலபேர் இன்னும் குடி வரமுடியலே" என்று எதையோ சொல்ல வந்து, பாதியோடு எச்சில் விழுங்கினார். அவர் சொல்ல விரும்பாததை பல பெண்கள் முன் வந்து தைரியமாகச் சொன்னார்கள். ஒரு பெரிய கூட்டமே கூடிவிட்டது.

"தினசரி கூலி வேலை செஞ்சுதான் வயித்த கழுவிக்கிட்டிருந்தோம். வீடு கிடைச்சிடுச்சின்னு சொன்னப்போ ரொம்ப சந்தோஷப்பட்டோம். இப்போ ஏன் கிடைச்சிதுன்னு நினைக்கத் தோணுது. ஏன்னா, வீடு கிடைச்ச ஒவ்வொருத்தரும் ஆறாயிரத்து இருநூறு ரூபா கட்டினாத்தான வீட்டுக்குக் குடி வரலாம்னு சொல்லிட்டாங்க. எதுக்குன்னு கேட்டோம். கழிப்பறை, மின் இணைப்பு இது ரெண்டுக்கும் எங்களோட பங்குத் தொகைன்னு சொன்னாங்க. கைக்கு எட்டுனது வாய்க்கு எட்டாம போயிடுமேன்னு காதுல, மூக்குல கிடந்தது, எல்லாம் கழற்றி வித்தும் பத்தாமல், பத்து வட்டிக்குக் கடன் வாங்கிக் கட்டினோம். அந்தப் பணத்தைக் கட்ட முடியாத பதினோரு பேரு இன்னும் இங்கே குடி வரலே" என்றவர்களிடம் இந்தப் பணத்தை யார் வசூலிக்கிறார்கள்? மாவட்ட ஆட்சியர் நிர்வாகமா என்றால், இல்லை என்கிறார்கள். "அடிக்கடி கலெக்டர் இங்கே வந்தாலும் நாங்க யாரும் அவரைப் பார்த்துப் பேச முடியாதபடி செய்துடறாங்க" என்கிறார்கள். கொடுத்த பணத்திற்கு ரசீது கொடுத்தார்களா? என்று கேட்டதும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ரசீதைக் காட்டினார்கள். அதை வாங்கிப் பார்த்த நமக்கு அதிர்ச்சி. 'கட்டட மையம், மதுரை' என்று மொட்டையாக அச்சிடப்பட்டிருந்தது. அந்த அலுவலகம் எங்கே செயல்படுகிறது எந்த துறையின் கீழ் வருகிறது, வசூலித்த அதிகாரியின் பெயர், பதவி, கையொப்பம் எதுவும் இல்லை!

"இவ்வளவு பணத்தைக் கட்டுற அளவுக்கு வசதியிருந்தா நாங்க ஏன் சமத்துவபுர வீட்டுக்கு மனு போடப் போறோம். முதல்வர்கிட்டே இதை எடுத்துச் சொல்லி எங்க பணத்தைத் திரும்பக் கொடுக்கச் சொல்லுங்கய்யா. இல்லேன்னா, வாங்கின கடனுக்கு வட்டி கட்ட முடியாத கடனாளிகளாத்தான் சமத்துவபுரத்துலே எங்க வாழ்க்கை தொடங்கும்" என்று பொருமுகிறார்கள்.

முதல்வர் விழித்துக் கொள்வாரா?

- சுட்டு

படங்கள் : ராஜன்

காலேஜ் டூ - வீலர்கள் - 2

கைனடிக் Y2k (2ஸ்ட்ரோக்)

+ ஆட்டோ-ஸ்டார்ட், பட்டனைத் தட்டி ஸ்டார்ட் செய்து விடலாம்
+ ஆட்டோ-கியர், கியர் மாற்றத் தேவையில்லை
+ பிரேக்குகளை காலால் இயக்க வேண்டாம், ஆதலால் லெக்-ஸ்பேஸ் தாராளம் (ஆறடி ஆணழகர்களுக்காகவே பிறந்த பொண்ணு-சாரி-வண்டிங்க இது!)
— ஸ்கூட்டருக்கு இவ்வளவு விலையா?

எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ. 40,200

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி—10

பொங்கல் வேலை மும்முரத்தோடு அமெரிக்கப் பயணத்துக்கும் தயாராகுங்கள். முந்தைய வாரங்களில் செய்ததைப் போல விடைகளை கூப்பனில் எழுதி மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்திஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா—சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

குவிஸ் கூப்பன்—10

1) ''இளமை ஊஞ்சலாடுகிறது'', ரஜினி, கமல் இருவரும் நடித்த படம். இதை இயக்கியவர் யார்?

2) ''இளைய பாரதத்தினாய் வா வா வா'' என்ற கவிதை வரியை எழுதியவர் யார்?

3) கர்னாடக இசைத்துறையில் இளம் கலைஞர்களை ஒருங்கிணைக்கும் அமைப்பு ஒய்.ஏ.சி.எம். செயல் படுகிறது. இது எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?

4) இளைய தலைமுறைக்காக ஹிந்து நாளிதழ் வெளியிடும் இணைப்பு இதழின் பெயர்...?

5) சமீபத்தில் சான்டியாகோவில் நடைபெற்ற உலக ஜூனியர் நடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் தங்கத்தை வென்றார் நம் நாட்டைச் சேர்ந்த சீமா அந்தில். எந்த விளையாட்டுப் பிரிவில் இவர் இந்த சாதனையைச் செய்தார்?

6) தமது சிகாகோ உரையால் உலகப்புகழ் பெற்ற அவர் இளைஞர்களின்மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த இந்தியர் யார்?

விடைகள்:

1).....

2).....

3).....

4).....

5).....

6).....

இண்டியன் ஏர்லைன்ஸ் Indian Airlines

ஏர்-இண்டியா AIR-INDIA

ரூ.510/- விலை மதிப்புள்ள இங்கிலீஷ் கோர்ஸ் ரூ.150/- மட்டுமே!

3 டிவிஷன்களின் பேக்கேஜ்

டிவிஷன்-1	டிவிஷன்-2	டிவிஷன்-3	ரூ. 510/-
ரூ. 130/-	ரூ. 170/-	ரூ. 210/-	

டிவிஷன் -1 ABCD முதற்கொண்டு இங்கிலீஷில் படிக்கவும் எழுதவும் கற்றிருந்து நல்லொருவருக்குத் தேவையான நிலையில் ஸ்டாண்டர்டு இங்கிலீஷ் கற்றிக்கப்படுகிறது. இந்த கோர்ஸின் :.மீன் ரூ. 130/-

டிவிஷன் -2 சிலருக்கள் இன்றி ஆங்கிலம் எனது தேவையான இங்கிலீஷ் இலக்கணம் முழுமையாக, சுலப ஆத்திரங்களால், எளியாக கற்றிக்கப்படுகிறது. இந்த கோர்ஸின் :.மீன் ரூ. 170/-

டிவிஷன் -3 வெகு சுலபமாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தடுமாறாமல், பிறழ்களின்றி, மிகவும் சுலபமாக பேச கற்றிக்கப்படுகிறது. இந்த கோர்ஸின் :.மீன் ரூ. 210/-

12 மொழிகளின் கோர்ஸ்கள்
(12 இன் 1 பாக்கெட் சைசில்) FREE

1. ஹிந்தி ஸ்பீக்கிங் கோர்ஸ் 2. தெலுங்கு ஸ்பீக்கிங் கோர்ஸ் 3. கன்னடம் ஸ்பீக்கிங் கோர்ஸ் 4. மலையாளம் ஸ்பீக்கிங் கோர்ஸ் 5. பெங்காலி ஸ்பீக்கிங் கோர்ஸ் 6. மராத்தி ஸ்பீக்கிங் கோர்ஸ் 7. பஞ்சாபி ஸ்பீக்கிங் கோர்ஸ் 8. குஜராத்தி ஸ்பீக்கிங் கோர்ஸ் 9. அரபிக் ஸ்பீக்கிங் கோர்ஸ் 10. உருது ஸ்பீக்கிங் கோர்ஸ் 11. ஒரியா ஸ்பீக்கிங் கோர்ஸ் 12. சான்ஸ்கிரிட் ஸ்பீக்கிங் கோர்ஸ்

8 பர்சனாலிட்டி கிஃப்ட் கோர்ஸ்கள்
(8 இன் 1 பாக்கெட் சைசில்) FREE

1. ரிச் மனி எர்னிங் கோர்ஸ் *(சுலபமாக பணம் சம்பாதித்தல்)*
2. சீக்ரெட் மேஜிக் கோர்ஸ் *(நீங்களும் சேர்ந்து செய்யலாம்)*
3. மெண்டல் ஸ்மார்ட்னெஸ் கோர்ஸ் *(மூன்மனிச் சுறுசுறுப்பு அதிகரிக்க)*
4. பியூட்டி ஃபிட்மெண்ட் கோர்ஸ் *(அழகைத் தோற்றவைப்பது எப்படி)*
5. சக்சஸ்புல் சொசைட்டிவேஷன் கோர்ஸ் *(சிறந்தவருக்கு நான் அரும்பி கோர்ஸ்)*
6. யோகா கோர்ஸ் *(வெல்வேறு யோகாசனங்களின் விபரங்கள்)*
7. "பாசிட்டிவ்" கோர்ஸ *(உங்களது வாழ்வை வழும் எதிர்காலம்)*
8. கிச்சன் ஃபிட்மெண்ட் கோர்ஸ் *(சமையலறைக்கு வெண்மை வருந்தல்)*

4 கோர்ஸ் கிஃப்ட் புத்தகங்கள்
(4 இன் 1 பாக்கெட் சைசில்) FREE

1. **வர்டு பவர்**
(ஆங்கில சொற்களின் அற்புத சக்தி)
2. **லெட்டர் ரைட்டிங் பிராக்டீஸ்**
(இங்கிலீஷில் கடிதம் எழுதும் முறை)
3. **அப்ரிவேஷன்ஸ் டிக்ஷனரி**
(டெக்னிகல் சொற்களின் முக்ஷனரி)
4. **வெர்ப்ஸ் டிக்ஷனரி**
(வினை சொற்கள்- அதன் ரூபாய்கள்)

புத்தாண்டுப்பரிசு
ஒரு டைரி இலவசம்!
+ 24 மினி கோர்ஸ்கள்



இக்கூப்பனை பூர்த்தி செய்து உடனே அனுப்பவும்

STUDENTS' ENGLISH INSTITUTE 1431

15/1, Parthasarathipuram Extn. T. Nagar, Chennai - 600 017.

எனக்கு, *டிவிஷன் 1, டிவிஷன் 2, டிவிஷன் 3, (மொத்தம் 3 டிவிஷன்கள்)* தற்பொழுது ரூ. 510/- விலை மதிப்புள்ள இங்கிலீஷ் கோர்ஸ் இவைச பாக்கெட்சைஸ் புத்தகங்கள் அனைத்தும் (8+12+4) மற்றும், புது வருட டைரியையும், அனைத்து புத்தகங்களையும் சேர்த்தது 150/- கான வி.பி.பி அனுப்பவும். போஸ்ட்மேனிடம் பணம் தந்து எனது பேக்கேஜை பெற்றுக்கொள்கிறேன்.

Name .....

Address .....

.....

..... Pin Code

காலேஜ் டூ - வீலர்கள் - 3

டி.வி.எஸ். ஸ்கூட்டி

+ ஆட்டோ-கியர், கியர் மாற்றும் தலைவலி இல்லை
+ அடக்கமான சைஸ், பெண்களுக்கு ஃபேவரட்
+ குட் மைலேஜ், 50 கி.மீ/லி
— ரோட்-கிரிப் சுகமில்லை, வழுக்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(இந்தியப் பெண்களாவது, வழுக்கி விழுவதாவது, இல்லீங்க?)

எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ. 25,460

காயமா, சுவாதியைக் கேளுங்கள்!

• பி. கலீலா

காயம் பட்ட இடத்துக்கு எத்தனையோ therapy இருக்கின்றன. மருந்துகள் a dime a dozen. ஸ்வாதிக்கு அதெல்லாம் தெரியவில்லை. 'வான்மதி' படத்தில் அஜித் வில்லன்களுடன் மோதி, புஜத்தில் அடிபட்டுக் கொண்டதும்... (வேண்டாம் சொன்னால் சுவாரஸ்யம் போய்விடும்)

ஆகவே தேவ்யோ ஒளர் ஸஜ்னோ, அடுத்தமுறை அந்தப் பாடல் காட்சி ஏதாவதொரு சேனலில் வரும்போது ஸ்வாதி என்ன வைத்தியம் செய்கிறாரென்பதை நீங்களே பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

'எல்லாம் அந்தப் பொண்ணு வந்த வேளை! பாவம், குழந்தைக்கு எத்தனை கஷ்டம் பார்!' என்றாள் சோமுப் பாட்டி.

'எந்தப் பெண் வந்த வேளை? எந்தக் குழந்தைக்குக் கஷ்டம்?' என்று கேட்டதும் எதிரேயுள்ள டீ.வி பெட்டியைக் காட்டினாள். ஸன் நியூஸில், நேபாளத்தில் போலீஸ் தடியடி, கண்ணீர்ப் புகை, கடையடைப்பு முதலிய காட்சிகள் ஓடிக்கொண்டிருந்தன.

'இந்தக் கார்த்திக் ரோஷக்காரன் – அவன் பேரே வாயில் நுழையலே – அவன் பாட்டுக்குப் பேரும் புகழுமாய் இருந்தான். இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டப்பறம் பார். ஒரே கலாட்டா. இதுக்குத்தான் குலம் கோத்திரம் நாள் நட்சத்திரமெல்லாம் பார்த்துக் கல்யாணம் பண்ணணும்னு பெரியவா சொல்றா!' என்றாள் பாட்டி.

'அவர்கள் இரண்டு பேர்

சிமோட்

வினோத்

• சூசன் காள்

குடும்பத்திலுமே இந்து மருமகள், முஸ்லிம் மாப்பிள்ளை, முஸ்லிம் மருமகள், இந்து மாப்பிள்ளை இதெல்லாம் சகஜம் பாட்டி.' என்று சொன்ன பின்னரும் – 'இந்தப் பொண்ணு வந்தவேளை...' என்று மறுபடியும் கோமுப் பாட்டி ஆரம்பித்தாள். Give a dog a bad name and hang him என்று பிடிவாதம் பிடிக்கிற ரகம் இந்தப் பாட்டி. இவர்களைத் திருத்தவே முடியாது.

'உன்னைக் கண் தேடுதே பாட்டை பானுமதியம்மா பாடியிருக்க வேண்டியது...' என்று சொல்ல ஆரம்பித்த பி. சுசீலா, உடனே, 'அவங்க ரொம்பப் பெரியவங்க. இப்படி அவங்க பேரைச் சொல்றதே தப்பு. மன்னிக்கணும்' என்றார்.

பானுமதி என்றில்லை, பின்னணிப் பாடகர், பாடகியர் எல்லாரிடமுமே அவர் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் (விஜய்) பேட்டி நெடுக வெளிப்பட்டன. Never a wrong note. குறிப்பாக எஸ். ஜானகியின் versatile திறமையை மிக உயர்வாகச் சொன்னார். 'உன்னைக் கண் தேடுதே' பாட்டைப் பானுமதி ஏதோ காரணத்தால் பாடவில்லை என்றும் அதனால் தமக்கு அந்தச் சான்ஸ் கிடைத்துப் புகழ் தேடித் தந்தது என்பதைத் தெரிவித்தவர், 'அது ஒரு விக்கல் சீஸன். பல விக்கல் பாட்டு அது போல வந்தது' என்றார்.

அவருக்கு மிகவும் பிடித்த பாட்டு 'ஆலயமணியின் ஓசையை நான் கேட்டேன்' என்று கூறி, அதிலிருந்தும் வேறு சில பாடல்களிலிருந்தும் சிற்சில அடிகளைப் பாடிக் காட்டினார் சுசீலா. குரலில் முதுமை தெரிந்தாலும் இனிமை குறையவில்லை. அந்த touch of tenderness அப்படியே இருந்தது.

பழைய பொற்காலத்துக்கு நிறையவே அழைத்துப் போனவர், இறுதியில், 'உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்' என்று புதிய வருடத்தை வரவேற்றார். Doubly sweet.

தொடரில் ஒரு திடீர்த் திருப்பம் கொடுக்க நினைத்தார் போலிருக்கிறது 'சித்தி' டைரக்டர். பார்ப்பவர் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்த நேர்மையான பாத்திரம் கிருஷ்ணாவைக் குத்திக் கொலை செய்துவிட்டார். அது அவர்கள் இஷ்டம். Death, with impartial step, knocks at the poor man's cottage and palace of the kings என்றார் ஒரு கவிஞர். எனவே, எப்படிப்பட்ட பாத்திரத்துக்கும் ஒரு முடிவு வரத்தான் செய்யும். ஆனால் அதன் பின்?

இறந்தவரின் ஈமச் சடங்குகளை அவ்வளவு விலாவாரியாகவா காட்ட வேண்டும்? அதுவும், வெள்ளிக்கிழமையில், புத்தாண்டுக்கு ஒருநாள் இருக்கும்போது? சிதையில் வரட்டி மேல் வரட்டி அடுக்கியது, சட்டியில் ஓட்டை போட்டது, தண்ணீர் சொட்டச் சுற்றி வந்தது – இதையெல்லாம் கூட மன்னிக்கலாம். ஆனால் அந்தச் சுடுகாட்டு ஊழியர், 'அரிசி! யாருங்க இன்னும் அரிசி போடணும்? அரிசி போடறவங்க வாங்க! அரிசி! அரிசி!' என்று நூறு நடவை திரும்பத் திரும்பக் கூவிக்கொண்டேயிருந்தது realism அல்ல revulsion.

ஆசியாநெட்டில் ஒரு மலையாளத் திரைப்படம். டூரிஸ்ட் பஸ்ஸில் போகிறவர்களை வைத்துக் கதை – பழைய 'மெட்றாஸ் டு பாண்டிச்சேரி' படம் மாதிரி.

ஒரு கோவிலில் சிற்ப அதிசயங்களைக் காட்டுகிறார் கைடு. நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட ஒரு சிற்பம். ஒரு மெல்லிய கம்பியை அதன் ஒரு காதில் விட்டு மறு காது வழியே எடுக்கிறார். அற்புதம்தான். அடுத்து, அதே கம்பியை அதன் மூக்கிலே நுழைத்ததும் –

ஐயோ! அந்தக் கருங்கல் சிற்பம் ஒரு கருங்கல் தும்மல் போட்டால்...! It scares you to death. கடவுள் காப்பாற்றினார்.

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும் டெபாசிட் திரட்டும் முகாம்கள்

உள்ளூர் காசோலை ஏற்றுக் கொள்ளப்படும்.

நாள் : 21 & 22 ஜனவரி, 2001.
ஆசீர்வாத்
ஆசீர்வாத் ஜங்ஷன், 30, செயின்ட் மார்க்ஸ் ரோஸ் சாலை (Opp. to SBI),
பெங்களூர் - 560 001. ✆ : 2997154, 2210154.

நாள் : 26 & 27 ஜனவரி, 2001.
நவி மும்பை தமிழ் சங்கம் ஹால்,
செக்டார் 9A, வாஷி (ரயில் நிலையம் அருகில்), நவி மும்பை - 400 703. ✆ : 7662434

நாள் : 28 & 29 ஜனவரி, 2001.
பம்பாய் ஆர்ய வைஷ்ய சங்கம் ஹால்,
கன்யகா பரமேஸ்வரி கோயில் வளாகம், 403, வாசி நிலையம்,
டெளங் சாலை, மாதுங்கா, மும்பை - 400 019. ✆ : 4021709.

நாள் : 9, 10 & 11 பிப்ரவரி, 2001.
டெல்லி தமிழ் சங்கம்
தமிழ் சங்கம் மார்க், செக்டார்-5, R.K. புரம்,
புதுடெல்லி - 110 022.
✆ : 6193966 / 6174217.

நாள் : 22, 23 & 24 பிப்ரவரி, 2001.
ஸ்ரீ வாசவி சுபிக்ஷா ஹால்,
மேட்டுத் தெரு (ஸ்ரீ சுகவனேசுவரர் கோயில் தெரு),
சேலம் - 636 001. ✆ : 416494.

நாள் : 26 & 27 பிப்ரவரி, 2001.
அஜந்தா ஹோட்டல்,
ஜங்ஷன் சாலை, திருச்சி - 620 001.
✆ : 415501

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

பவர்ஃபின்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)
பதிவு அலுவலகம் : எண் 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ∴பேக்ஸ் : 044-4982894.

30-9-2000 தேதியிட்ட எனையில் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முதலீடு விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com

காலேஜ் டூ-வீலர்கள் - 4 & 5

டி.வி.எஸ் சூப்பர்XL (மொபெட்)

+ கிக்-ஸ்டார்ட், பெடல் செய்ய வேண்டாம்
+ சாமான்களை வைக்க அகலமான பிளாட்பாரம்
+ டக்கர் பிக்-அப் (ஸிக்னலில் பின்னாடி இருக்கறவனோட வ.எ. கொட்டிக்க வேணாமுங்களா?)
— பராமரிப்பு செலவு சற்று அதிகம்

எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ. 19,981

டி.வி.எஸ். மாக்ஸ் 100R (2-ஸ்ட்ரோக்)

+ 2 ஸ்ட்ரோக் பைக்குகளில் இது குறைச்சலான விலை
+ பராமரிப்பு செலவு சரா சரிக்கும் கீழே (குடும்பப் பராமரிப்பு செலவு... ஹூம் அது எங்கேயோ நிக்குது)
— சுமாராகத்தான் ஸ்பீடு எடுக்கிறது. எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ. 38,100

யமஹா RX-135 (2 ஸ்ட்ரோக்)

+ செமை பிக்-அப்
+ சூப்பரா ஸ்பீடு எடுக்கும் (கடன்காரனிடம் இருந்து சுளுவா தப்பிச்சிடலாங்கறீங்க..)
+ கையாள்வது எளிது
— தம்மாத்தூண்டு மைலேஜ், 30-35 கி.மீ/லி.

எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ. 47,640.



காலேஜ் டூ - வீலர்கள்- 6

வருமுன் காப்போம்!

பீரோவை உடைத்து நூறு சவரன் மற்றும் ஒரு லட்சம் கொள்ளை, லாக்கரை உடைத்து இருநூறு சவரன் அபேஸ், மணப்பெண்ணின் தாய் புலம்பல். நாளிதழ்களில் அடிக்கடி இடம் பெறும் செய்தி இது. இதற்கு வீட்டில் உள்ளோரின் அஜாக்கிரதை மட்டுமே காரணம் அல்ல, வீட்டில் உள்ள லாக்கரும் ஒரு காரணம். தரமான லாக்கர் பொருத்தப்பட்டால் பல கொள்ளைகளைத் தவிர்க்கலாம் என்கிறார் **வி. ராம கிருஷ்ணன்.** சென்னை லிங்கிச் செட்டித் தெருவில் UMA & Co என்ற பெயரில் தரமான லாக்கர்களை ஆர்டரின் பேரில் பல வருடங்களாகச் செய்து வருகிறார். Safety Locker செய்வதில் முன் அனுபவம் உள்ள இவரது குடும்பம் பரம்பரை பரம்பரையாக இரும்பு சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டு வருகிறது. ஆரம்பத்தில் இரும்பு பெட்டிகள் மட்டுமே



தயாரித்து வந்த இவர், வாடிக்கையாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க Safety Locker தயாரிப்பில் இறங்கியிருக்கிறார். அதே சமயம் பத்திரிகைகளில் வரும் கொள்ளை போன்ற சுவலை தரும் செய்திகளும் இவருக்கு இத்தொழிலில் ஈடுபட ஆர்வத்தைத் தூண்டியிருக்கிறது.

சரி உங்கள் தயாரிப்பு லாக்கரை மட்டும் உடைக்க முடியாதா எனக் கேட்டால் பலமாக மறுத்து அதற்கான காரணமும் கூறுகிறார்:

1) எங்கள் தயாரிப்புகள் அனைத்தும் தேர்ந்த கலைஞர்களால் பூட்டுக்குப் பேர்போன திண்டுக்கல்லில் தயாரித்து, பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

2) அனைத்து லாக்கர்களிலும், அரசுடைமை வங்கிகளில் உள்ளது போல் டபுள் லாக் சிஸ்டம் பொருத்தப்பட்டுள்ளது.

3) அதே சமயம் சாவி திருடப்பட்டு, அல்லது தொலைக்கப்பட்டு, பூட்டை உடைத்து விட்டால், மறுபடியும் பழைய சாவியால் பூட்டைத் திறக்க முடியாது. இதன் மூலம் பழைய சாவி யாரிடமாவது கிடைத்தால் கூட பூட்டை உடைக்க முடியாது.

பல முன்னணி தயாரிப்பாளர்களோடு உங்களால் எப்படி போட்டி போட முடிகிறது?

ஆரம்பத்தில் நான் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. இத் தொழிலில் நிலையான இடத்தைப் பிடிக்க என் பழைய தொழிலான பெட்டித் தயாரிப்பைக்கூட உதவியாளர்களிடம் விட்டுவிட்டேன். பல ஊர்களுக்குச் சென்று கண்காட்சிகளில் ஸ்டால்கள் பிடித்து விளம்பரம் செய்தேன். இதற்காக பல லகரங்களையும் இழந்திருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம் இத் தொழிலில் நிலையான இடத்தைப் பிடிப்பேன் என்று நம்பியதால் தான். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. இன்று வசந்த் பில்டர்ஸ் போன்ற முன்னணி பில்டர்களும், மெக்ரென்னட் போன்ற புகழ் வாய்ந்த வாடிக்கையாளர்களும் எங்களுக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

அதே சமயம் விலையைப் பற்றியும்

இங்கு குறிப்பிட்டாக வேண்டும். லாக்கர் செய்ய பல ஆயிரம் வேண்டும் என நினைத்து ஒதுங்கிய வாடிக்கையாளர்களுக்கு எங்கள் விலை ஓர் ஆறுதலைத் தந்தது. எங்களின் ஆரம்பகட்ட விலையே ரூ.3,750தான். பல நூறு சவரன்களைப் பாதுகாக்க ஒரு சவரன் மதிப்புள்ள லாக்கரை பொறுத்திக் கொள்ள யாரும் தயங்க மாட்டார்கள். மேலும் வாடிக்கையாளர் தேவைக் கேற்ப அனைத்து அளவுகளிலும் தயாரித்துத் தருகிறோம். பங்களாக்கள், அடுக்குமாடி கட்டடங்கள், அலுவலகங்கள் போன்றவற்றின் அளவிற்கேற்பவும், தேவைக்கேற்பவும் செய்து தருகிறோம். இதற்கு மேல் லாக்கர் பதித்த இடத்தை யாரிடமும் தொலைபேசி மூலம் சொல்லாமல் ரகசியமாகப் பாதுகாக்கவும் செய்கிறோம்.

வாடிக்கையாளர்களின் ரெஸ்பான்ஸ் பற்றி?

மிகவும் திருப்தியாக இருக்கிறது. எங்களின் ஒவ்வொரு வாடிக்கையாளரின் மூலமும் பலர் தினமும் தொலைபேசி மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்கின்றனர். இது எங்களின் சர்வீஸ் பற்றிய கஸ்டமரின் திருப்தியைக் காட்டுகிறது. வியாபாரம் முடிந்த பின்பும் சரியான விதத்தில் சர்வீஸ் அமைந்து இருப்பதால்தான் டி.வி.எஸ். கம்பெனிகள் சொந்தமாக எடுத்து நடத்தும் அனைத்துக் கோயில்களுக்கும் உண்டியல் மற்றும் லாக்கர் செய்யும் பணி எங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது.

எதிர்கால லட்சியம்?

தற்போது திருநெல்வேலி, பாண்டிச்சேரி, தூத்துக்குடி, கும்பகோணம் போன்ற ஊர்களில் Dealership கொடுத்து இருக்கிறோம். இதை மேலும் விரிவுபடுத்த வேண்டும். அதே சமயம் பல வாடிக்கையாளர்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கும் Digital Locker மற்றும் எலக்ட்ரானிக் டைப் லாக்கர் இரண்டையும் சீக்கிரத்தில் அறிமுகப்படுத்த வேண்டும் என்றார் தன்னடக்கத்துடன்.



தங்கள் தேவைக்கு அணுகவும்

UMA & CO.

274, LINGHI CHETTY STREET, CHENNAI - 600 001. PHONE: 5244511, MOBILE: 9840034334 PAGER: 9632707295 E-Mail: umasafechennai@Yahoo.com

Dealer: ALFA AGENCIES, Tuticorin. Ph: 330982, 330983 ● **YOGALAKSHMI ENTERPRISES,** Pondicherry. Ph : 346439, Mobile : 9843079749 ● **SREE VISALAM & CO.,** Karaikudi. Ph : 436925, 435925 ● **UMAYAL,** Banadurai Main Road, Kumbakonam-1 Ph : 429966 / 430766 ● **THIRUPATHI AGENCIES,** Thirunelveli. Ph:339645 ● **SRI DEVI SAFETY SYSTEM,** Coimbatore. Ph:807892 ● **MARUTHI ENTERPRISES.** Pallikaranai. Chennai. Ph: 2460819

லாக்கர் பொருத்தும் இடம், உபயோகிக்கும் விதம் மற்றும் பல முக்கிய குறிப்புகள் பாதுகாப்பை முன்னிட்டு லாக்கர் வாங்குபவர்களுக்கு மட்டுமே தெரிவிக்கப்படும்.

DEALERSHIP ENQUIRIES SOLICITED

Advt

டிசம்பர் மத்தியிலயே பொங்கலுக்கு ஒரு கவிதை அனுப்பியிருந்தார் சக்தி அருளானந்தம். அதை இப்போ ஞாபகமா சூப்பர் மார்க்கெட்ல டிஸ்ப்ளே பண்றேன்:

கர்னாடகம் கண் திறக்குமா?
காவேரி மண் நனைக்குமா?
என்று எதிர்பார்த்து
இடைத்த நீரில் குறுவை, சம்பா
வெள்ளாமை செய்து
புயல், பூச்சி, வெள்ளம்
எலி, லெவி, கூலி
வாங்கிய கடன்
எல்லாம் போக,

கண்டு முதலைக்
கணக்கிட அஞ்சி
'உழவன் கணக்கு பாத்தா
உழக்கு மிஞ்சுமா' என்று
உள்ளம் தேறி

பொங்குலோ பொங்கல்
என்று வாய் குலவையிட்டாலும்
ஆடி விதைப்பை அறுக்கும்வரை
'பத்தாய நெல் பத்துமா?'
என்று புத்தி யோசிக்கும்.

விஷயம் பழசுன்னாலும் கொஞ்சம் மாடர்ன் டச்சோட எழுதி, பத்தாயம் எப்படியிருக்கும்னு டயக்ரம்லாம் போட்டு, 'தஞ்சாவூர்க்காரனின் பொங்கல்'னு தலைப்பு வைச்சு அனுப்பியிருக்கார் சேலத்துக்காரரான அருளானந்தம்.

அப்புறம் 'பென்சில்' கவிதை (31.12 கல்கி) நடிகர் பார்த்திபன் எழுதினதுன்னும் கல்கி ஆசிரியர் எழுதினதுன்னும் தப்புத் தப்பா மன்றத்து உறுப்பினர்கள் 'கண்டுபிடிச்சு' கார்டு போட்டிருக்காங்க. இங்கிலீஷே கலக்காம எழுதிட்டதால என் ஸ்டைலை அடையாளம் கண்டுபிடிக்க முடியாம போயிருக்கு! இட்ஸ் ஆல் ரைட். எனக்கொண்ணும் வருத்தமில்லே. ஆத்தூர் ஹரி வேற எக்கச்சக்கத்துக்குப் பாராட்டி இந்த 'காலம்'மைத் தூக்கி எங்கியோ வெச்சிருக்கார். (கல்லில தலையங்கத்துலயும் கேள்வி பதில்கள்லயும் இருக்கற கூர்மையான சமூக பொறுப்புணர்ச்சிதான் அதோட பலம். அதே கூர்மை உன்னோட உரிமையுள்ள நடைக்குள்ளேயிருந்தும் எட்டிப் பாக்கறபோது... எக்செட்ரா...).... மார்கழி குளிர்ல இப்படி. ஐஸ் வேற...

மார்கழி மியூசிக் ஃபெஸ்டிவல் முடியறதுக்குள்ள ஒரு இலக்கிய ஃபெஸ்டிவல் ஆரம்பிச்சடுச்சு.. புக் ஃபேரைச் சொல்றேன்!

இந்த வருஷம் சென்னை புக் ஃபேர்ல நிறைய எக்ஸைடிங் ப்ரோக்ராம்ஸ். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் டெய்லி பேசறாங்க. எழுத்தாளருக்கான விருது அ.ச.ஞாவுக்கு. சிறந்த தமிழ்ப் பதிப்பாளர் பழனியப்ப செட்டியார்; சிறப்புப் பரிசு அல்லயன்ஸ் கம்பெனிக்கு. அல்லயன்ஸுக்கு இது செண்டினரி இயர் வேறயாம்...

கண்காட்சிக்குப் போகறதுக்கு முந்தியே ஆவலைத் தூண்டற மாதிரி இருக்கறது நடனம் சார் போட்டிருக்கற கார்டூன். (பிராமிஸாச் சொல்றேன் என் படம் போடறார்ன்றதுக்காக ஐஸ் வைக்கலை) ஒரு ஃபாமிலி ஒடிக்கிட்டே புக் படிக்குது! லைஃப் எத்தனை ஃபாஸ்டா யிருந்தாலும் ரீடிங் ஹாபிட் தொடரும்னு சொல்றா மாதிரி இருக்கு...

இன்னொரு ஆடட் அட்ராக்ஷன் மியூசிக் அகடமியிலேருந்து டென்டு தூக்கற அறுகலை நடராஜன் அதை புக் ஃபேர்ல திரும்பவும் இறக்கறார்!

குக்கரி புக்ஸ் மட்டும்தான் நல்லா விக்குதுன்ற நிலைமை சேஞ்ச் ஆனா சரிதான்!

— சுமி

24th CHENNAI BOOK FAIR

ஓடினாலும் படிக்கலாம்!

சுமி சூப்பர்மார்க்கெட்



2001 ஜனவரி 14
விக்ரம தை 1
மலர் : 59
இதழ் : 24

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

பிரதமரின் ஹாலிடே ஹோம்வொர்க்!

குமரகத்தில் விடுமுறை கொண்டாடச் சென்ற பிரதமர், ஓய்வினிடையிலும் நாட்டையும் அதனை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளையும் மறந்துவிடவில்லை. அவரது சிந்தனைகள் இரு பகுதிகளாக ஹிந்து நாளிதழில் இடம் பெற்றன.

நீண்ட கட்டுரைகளின் மையக் கருத்து, தேசமே ஒன்றுபட்ட சிந்தனையுடன் செயல்பட்டு வலிமையுற்று உயர வேண்டும் என்பதுதான்.

மறுக்க முடியாத உண்மை. ஆனால், ஒன்றுபட்ட சிந்தனை வளர்க்க வாஜ்பாய் இதுவரை என்ன செய்தார்? இனி என்ன செய்யவிருக்கிறார்..? இது சொல்லப்படவில்லை. இதனை விளக்கிக் கூறுவதுடன் ஒரு செயல்திட்டமும் வகுத்துக் கொடுத்திருந்தால் பிரதமரை மனதாரப் பாராட்டியிருக்கலாம்.

ஆனால், பிரதமரின் கட்டுரை வெளியான தினத்திலேயே அயோத்தி ராமர் கோயிலுக்கான மாதிரி வடிவமைப்பு, ராஜஸ்தானிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு உ.பி.யில் கும்பமேளா நடக்கவிருக்கும் தலம் நோக்கிப் பயணம் தொடங்கியிருக்கிறது.

'பிரதமர் பேச்சைக் கேட்கமாட்டோம். ராமர் கோயில் கட்டுவது குறித்து விச்வ ஹிந்து பரிஷத்தின் சாதுக்களும் தர்மாசார்யர்களும் முடிவு செய்வார்கள்' என்று வி.எச்.பி.



தரப்பிலிருந்து அறிக்கை வெளிவருகிறது.

'அயோத்தி பிரச்னையில் நீதிமன்றத் தீர்ப்புப்படி நடப்போம்' என்று பிரதமர் தமது கட்டுரையில் எழுதியது முழுக்க முழுக்க புறக்கணிக்கப்படுகிறது.

நாட்டின் பிரதமர், கொந்தளிப்பான அயோத்தி பிரச்னையைத் தணிக்க பெருமுயற்சி மேற்கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தில் அவரது முயற்சிக்கு நேரெதிரான திசையில் செல்ல வி.எச்.பிக்கு எது தைரியம் அளிக்கிறது? பி.ஜே.பி.யைத் தலைமையாகக் கொண்ட கூட்டணி, ஆட்சியில் இருக்கும் தைரியம்தான். இது நாள்வரை அரசும் பி.ஜே.பி. தலைமையும் ஹிந்து அடிப்படைவாதத்தைக் கண்டித்ததேயில்லை என்கிற துணிச்சல்தான்.

பிரதமரின் குமரகம் சிந்தனைகளிலும்கூட, நாட்டின் ஒற்றுமையைக் குலைக்க முயற்சி செய்யும் சக்திகள் குறித்து ஜாடை மாடையான குறிப்பு இருக்கிறதே தவிர, கண்டனம் இல்லை; ஒற்றுமைக்கு அரைகூவல் விடுக்கும் உணர்ச்சிபூர்வமான எழுச்சி இல்லை.

குமரகம் கிளம்பும் முன் பிரதமர் நாடாளுமன்றத்தில் (ராஜ்ய சபையில்) சந்தித்த கண்டனத் தீர்மானம், அத்தீர்மானம் நிறைவேறியதால் ஏற்பட்ட இமேஜ் வீழ்ச்சி, அச் சம்பவம் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளிடையே ஏற்படுத்திய அதிருப்தி- இவையெல்லாவற்றையும் சமனப்படுத்தும் முயற்சியாகத்தான் தோன்றுகிறது குமரகம் டைரிக் குறிப்பு.

கூட்டணி கட்சிகளையும் மகிழ்வித்து, ஹிந்து அமைப்புகளையும் முறைத்துக் கொள்ளாமல் மீனுக்கும் தலையாகி, பாம்புக்கும் வாலாகி எழுதியிருக்கிறார் வாஜ்பாயி.

காத்திருந்ததுபோல், எதிர்க்கட்சிகள் பிரதமரின் முரண்பட்ட சிந்தனைகளையும் பேச்சுகளையும் கடுமையாக விமர்சிக்கின்றன.

'உப்புப் பெறாத சர்ச்சைகளைக் கைவிட்டுவிட்டு வளர்ச்சிப் பணிகள் நோக்கி திசைதிரும்புவோம். சமச்சீரான சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு முயற்சி செய்வோம்'



என்று வாஜ்பாய் நாட்டுக்கே இலக்கு நிர்ணயம் செய்வது அழகான விஷயம்தான். அதே நேரத்தில்தான் வடமாநிலங்கள் பலவற்றில் ஒரே சமயத்தில் மின் உற்பத்தி - வினியோகம் பாதிக்கப்பட்டு, பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேல் மின்தடை நிலவியிருக்கிறது!

இதனால் உற்பத்தி எவ்வளவு பாதிக்கப்பட்டது, தேசத்துக்கு எவ்வளவு நஷ்டம் என்று கணக்கு பார்த்தால் பிரமிப்பாக இருக்கும். மெத்தனமும் அலட்சியப் போக்கும் செயல்திறன் இன்மையும் நமது தேசியப் பண்புகளாகி வருகின்றன.

இந்த நிலையை மாற்றும் நோக்கில் குமரகம் சிந்தனையில் பல நல்ல சீர் திருத்தங்களின் அவசியத்தையும் பட்டியலிட்டிருக்கிறார் பிரதமர். உலகின் இளமை சக்தியின் பெரும்பகுதி இந்தியாவில்தானிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தொழில், விவசாய, வர்த்தகத் துறைகள் எழுச்சி கொள்ள வேண்டும் என்கிறார்.

பிரதமர் எதிர்பார்ப்பது போன்ற சீர்திருத்தமும் வளர்ச்சியும் நிகழ வேண்டுமானால் வெறும் அரசு ஆணைகளால் அது சாத்தியமே ஆகாது.

மக்களை முன்னுதாரணத்தாலும் எழுச்சியூட்டும் சக்தி வாய்ந்த தலைமைப் பண்புகளாலும்தான் தூண்ட முடியும். சரியான காரணங்களுக்காக, சரியான அளவில், சரியான திசையில் அவர்கள் செலுத்தப்பட வேண்டும்.

சுதந்தரத்துக்கு முந்தைய காலகட்டத்தில் இத்தகைய உணர்வுபூர்வமான ஒருங்கிணைப்பு சாத்தியமாயிருந்தது என்று சுட்டிக்காட்டுகிறார் பிரதமர்.

இப்போதும் அதை சாத்தியமாக்க வாஜ்பாயால் முடியும். அதற்கு அவர் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற ரீதியில் பேசாமல், அச்சமின்றி ஒரே குரலில் மக்களுக்கு எழுச்சியூட்டுகிற முறையில் பேச வேண்டும்.

அத்தகைய முயற்சிக்குக் கூட்டணி கட்சிகளின் ஆதரவு மட்டுமின்றி மக்கள் ஆதரவும் பெருவாரியாக நிச்சயம் கிடைக்கும். ○

வேட்டைநாய்

ஊர்க்கியில் விஜயாவும் நானும் காலெடுத்து வைத்த மறுநாளே, 'சிறிசு'களான எங்களுக்கு வழி காட்டும் பொறுப்பை வலிய வந்து ஏற்றுக் கொண்டனர் 'உதவப் பிறந்த உத்தம சிங்கும்', அவர் தர்மபத்தினி சங்கீத் கௌரும்.

'மதராசி'கள் விரும்பிக் குடிக்கும் காப்பியை 'விஷம்' என்று பழித்து, பதிலுக்கு சங்கீத் கௌரின் சொந்தக் கண்டுபிடிப்பான தும்பைப் பூ ஜூஸைச் சிபாரிசு செய்ததுடன், வலுக்கட்டாயமாகப் பருகவும் வைத்தனர். ஜலதோஷத்தால் அவதியுற்ற விஜயாவுக்கு, மேல் நாட்டு மருந்து கூடாது என்று சொல்லி தான் கைபடத் தயாரித்த, வேப்பிலை மணக்கும், கோகர் ஜான் கஷாயத்தைத் தாயன்புடன் புகட்டினார் கௌர்.

முடி வெட்டிக் கொள்ள சலூனுக்குக் கிளம்பிய என்னைத் தடுத்து நிறுத்தி, வீட்டுக்கு வரும் நாவிதர் மக்கோலிடம் தலையைக் கொடுக்கச் சொன்னார் சிங். சிப்பாய்க் கலகம் நடந்தபோது வாங்கின சிப்பு கத்திரியினால் என் தலை



கல்கி – ரமணி Vs ரமணி இணைந்து நடத்திய 'தம்பதி தமாஷ்' போட்டியில் ரூ. 2000 மதிப்புள்ள பட்டுப் புடைவையை ஆறுதல் பரிசாகப் பெறும் கட்டுரை.

கட்டிக்கோ!

கொய்யப்படுவதைப் பொறுமையுடன் மேற்பார்வை பார்த்த சிங்கின் கருணைதான் என்னே! முடி அலங்காரம் முடிந்த பின் நான், ஜெயிலிலிருந்து தப்பி வந்த கைதியைப் போலிருப்பதாக விமர்சித்தாள் விஜயா.

கோட்டும், டையுமாக, இளமைத் துடிப்புடன், ஆபீசுக்குக் கிளம்பிய

எனக்கு, எங்கே வட நாட்டுக் குளிர் ஒத்துக் கொள்ளாதோ என்று அஞ்சி, கடைக்கு ஓடி, என் செலவில், தாலு தடிமன் தாத்தா கோட்டு வாங்கி வந்தார் சிங்.

ஐப்பசி, கார்த்திகையில் கருத்தரித்தல் நல்லதல்ல என்று நம்பின சிங் தம்பதி, புதிதாகக் கல்யாணமான எங்களைத் தனித் தனி அறையில் படுக்கும்படி வற்புறுத்தினார். எங்கே 'சிறிசு'கள் ஏடாகூடாமாக ஏதாவது செய்து தொலைத்து விடுமோ என்று பயந்து, சங்கீத் கௌர் விஜயாவுக்குத் துணையாகப் பக்கத்தில் படுத்துக் கொண்டு, கண் விழித்துக் காவல் காத்தாள். பகலிலும் பலமான அன்புக் காவல் போடப்பட்டது.

கார் வாங்கலாம் என்று வாயைத் திறப்பதற்குள், இந்தக் காலத்து வண்டிகள் எல்லாம் டப்பாக்கள் என்று ஒதுக்கிய சிங், 1934 ஆம் ஆண்டு தயாரான 'போர்டு' (Ford) காரை என்னைக் கேட்காமலே வாங்கி வந்துவிட்டார். அதில் நான் ஆபீஸ் போகும் கோலத்தைக் கண்ட விஜயாவின் தோழி, எனக்குத் நியணைப்புப் படையிலா வேலை என்று இரகசியமாக விசாரித்தாளாம்!

வேலைக்காரியாக உத்தம்சிங் தம்பதி எங்களுக்குச் சிபாரிசு செய்த பீரு, ஒரு மன நோயாளி. வானத்தைப் பார்த்து விசிலடிப்பதும், சுவரில் கரியினால் தீற்றுவதும் அவளுடைய பொழுதுபோக்குகள். ஆனால் ஒருபோதும் வன்முறையில் இறங்கினதாகக் குற்றச்சாட்டில்லை. அவளை வேலைக்கு வைத்துக் கொண்டால் ஒரு பெரிய சௌகர்யமுண்டு. மற்றவர்கள் பயந்துகொண்டு அவளைச் சிந்தாத நிலையில், வேலையை விட்டு நிற்கப் போவதாக ஒருநாளும் நம்மைப் பயமுறுத்த மாட்டாள்.

பசும் பால், எருமைப்பால் முதலியன உயிர்க்கொல்லிகள் என்று பேசி வந்த உத்தம்சிங், ஒட்டகப் பாலின் மேன்மையை விளக்குவதுடன் நிறுத்திக் கொள்வார் என்று எதிர்பார்த்த நாங்கள், அவர் ராஜஸ்தானிலிருந்து எங்களுக்காக ஓர் ஒட்டகத்தை வாங்கி குவார்ட்டர்ஸ் வாசலில் கட்டிப் போட்ட போது உண்மையில் வாயடைத்துப் போனோம்!

— ஜி.எஸ். பாலகிருஷ்ணன்

பொங்கல் வாழ்த்துக்கள்

சீருக்கு சிறப்பு

அடையார் ஆனந்த பவன்
அளிக்கும் மங்களகரமான
சீர்வரிசை

பாங்கான பருப்புத் தேங்காய், மொறு மொறுப்பான கைமுறுக்கு, சுவையான அதிரசம், தேன்குழல், தட்டை, சீடை ... மைசூர் பாக், பாதுஷா, மற்றும் லட்டு ... உங்கள் வீட்டுத் திருமணம் என்றுமே நினைவில் நிலைத்து நிற்க அடையார் ஆனந்த பவன் சீர் வரிசை. சுத்தமான நெய் மற்றும் இருமுறை சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெயில் தரமாகத் தயாரிக்கப்பட்டவை!

ஆனந்தமயமான
திருமண வாழ்த்துக்கள்...

AAB

அடையார்
ஆனந்த பவன்

ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் (A/C)
சென்னை

● அடையார் ✆4912047 ● புரசைவாக்கம் ✆6421626 ● ஜார்ஜ் டவுன் ✆5388845
● அண்ணா நகர் ✆6206377 ● வண்ணாரப்பேட்டை ✆5964291 ● தி.நகர் ✆4328550

Visit our website at www.aabsweets.com

நான் உன்னில் என்னையே காண்கிறேன்!

* தி.க.சி.

* ஆர்.நல்லகண்ணு

சிறந்த இலக்கியவாதி, விமர்சகர் என்கிற முறையில் சாகித்ய அகாடமி விருது இந்த ஆண்டு தி.க.சி.க்கு வழங்கப்பட்டிருக்கிறது. இளமை ஸ்பெஷலுக்காக தி.க.சி.யின் இளமைப் பருவம் குறித்து அவரின் நெருங்கிய நண்பரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலப் பொதுச் செயலாளருமான ஆர்.நல்லகண்ணுவிடம் (ஆர்.என்.கே) கேட்டோம்.

"சிறு வயதிலேயே தி.க.சி.க்கு இலக்கிய ஆர்வம் வந்துவிட்டது. அவரது குடும்பச் சூழலும் அதற்குக் காரணம். அவர் தாத்தா ஒரு கவிஞர். தந்தைகூட சில நூல்கள் எழுதியிருப்பதாக என்னிடம் சொல்லியிருக்கிறார். அது மட்டுமில்லாமல் அந்தக் காலகட்டத்தில் அவர் வாழ்ந்த திருநெல்வேலி, இலக்கியச் சூழ்நிலையை அதிகமாகக் கொண்டிருந்தது. இதனால் அதிகமான இலக்கியவாதிகளுடனான அறிமுகம் இயல்பாகவே அவருக்குக் கிடைத்தது. அவர் இலக்கியத்துக்குள் குதிக்க இதெல்லாம் ஒரு காரணம்.

இளம் பருவத்தில் கவிதைகள்தான் எழுதிக் கொண்டிருந்தார். திருநெல்வேலியில் 'தாம்கோஸ்' வங்கியில் (1944 என்று நினைக்கிறேன்) பணியாற்றிக் கொண்டிருந்தபோது முற்போக்குச் சிந்தனையுள்ள கவிதைகளைப் படைத்துக் கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் இயக்கத்துடனும் அதிகமாகத் தொடர்புக் கொண்டிருந்தார். கூடவே வங்கிப் பணியாளர் சங்கம் கட்டுவதில் தீவிரமாக இறங்கினார். அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பது வங்கித் தலைமைக்குத் தெரிய வந்தபோது பல ஊர்களுக்கு அவரை இடமாற்றம் செய்தது. அதைப் பொருட்படுத்தாமல் அவர் இலக்கியத்துக்காகவும், இயக்கத்துக்காகவும் பாடுபட்டார். பிறகு 'சோவியத் நாடு' பத்திரிகை சென்னையில் ஆரம்பிக்கப்பட்டபோது வேலையை ராஜினாமா செய்துவிட்டு இங்கே வந்துவிட்டார். அந்தப் பத்திரிகையில் முற்போக்கான பல கட்டுரைகளை எழுதினார்.

'தாமரை' இலக்கிய இதழ் பொறுப்பாசிரியராக அவர் வந்தபோது எனக்கும் அவருக்குமான நெருக்கம் அதிகமாகியது. கலை இலக்கியத் துறையில் ஒரு பரந்து விரிந்த ஜக்கிய முன்னணியை அமைப்பது, அதை வைத்து நசிவு இலக்கியத்தை எதிர்த்துப் போராடுவதுதான் அவரது இலட்சியமாக இருந்தது. அப்போது பல புதிய எழுத்தாளர்களை இனம் கண்டு ஊக்குவித்தார். பிரபஞ்சன், பூமணி, பா. செயப்பிரகாசம், சி.ஆர். ரவீந்திரன், கவிஞர்கள் சிற்பி, நா. காமராசன், தமிழ்நாடன் போன்றவர்கள் எல்லாம் தி.க.சியால் வளர்க்கப்பட்டவர்கள்.

இன்னொரு விஷயம் தி.க.சி., புதுமைப்பித்தனால் பாராட்டப் பெற்றவர். தி.க.சி.யின் ஒரு கதையைக் கேட்டுவிட்டு, 'ரகுநாதா நான் உன்னில் என்னையே காண்கிறேன்' என்று சொன்னாராம் புதுமைப்பித்தன். அதைத் தமது இலக்கிய வாழ்வில் பெற்ற பெரும் வெற்றியாகச் சொல்வார்.

அவரிடம் எல்லோருக்கும் பிடித்த விஷயம் ஒரு நூலின் சிறந்தத் தன்மையை எடுத்து சிறப்பாக விமர்சனம் செய்வதுதான். சுருக்கமாகச் சொன்னால் அவரது இளமைப்பருவம் இயக்கத்தையும் இலக்கியத்தையும் முழுமையாகச் சார்ந்தே இருந்தது.

- செ. ஏக்நாத்

முன்கதைச் சுருக்கம்

கேதாரியின் செல்ல மகள் ப்ரீதி. அழகி, புத்திசாலி. அவளுக்கு பாஸ் அஜய் மீது ஒருவித ஈர்ப்பு. அஜய்யும், ப்ரீதியை விரும்புவதாக கேதாரி நம்புகிறார். குழப்பத்தில் இருக்கும் ப்ரீதிக்கு 'அன்புள்ள கண்ணம்மா' என்று ஈமெயில் வருகிறது. அஜய் தன்னைக் காதலிப்பதாக நினைத்து மகிழும் ப்ரீதி, காதலைத் தெரிவித்து ஈமெயில் அனுப்புகிறாள். மெயில் பாக்ஸைத் திறந்து பார்க்கும் அஜய், தான் பெங்களூர் போய்விட்டுத் திரும்பி வந்ததும் கல்யாணம் என்கிறான். ப்ரீதி மீது ஆனந்த மழை பெய்கிறது. இனி...

மீனாட்சிக்கு மகனின் உற்சாகமும், துள்ளலும் புதிதாய் இருக்கிறது. ஆபீசுக்குப் போன சுருக்கிலேயே திரும்பி வந்தவனைப் பார்த்து முதலில் பதறினாள் அவள்.

"என்னடா ஆச்சு? உடம்பு ஏதாவது சரியில்லையா?"

அவன் பதில் சொல்வதற்கு முன்பே, ஈஸ்வரன் நெற்றிச் சுருங்க மனைவியிடம் கடிந்து கொண்டார்.

"ஷ்... சும்மாயிரு... பிள்ளையாண்டான் முகத்தைப் பார்த்தா உடம்பு டபுள் ஓ.கேயா இருக்குன்னுதான் தோணறது. காரை ஷெட்டுல விட்டுட்டு உள்ளே வரட்டுமே.... ஏன் அவசரப்படறே...?"

அவர் கணிப்பு சரிதான். அஜய் மகிழ்ச்சியின் விளிம்பில் ஏதோ ஒரு பாட்டை சிட்டி அடித்துக் கொண்டே வந்தான். அம்மாவைப் பார்த்ததும் செல்லமாக அவளது தோளைப் பிடித்து ஒரு சுற்று சுற்றி விட்டு, விழிகளை இடுக்கிக் கொண்டு சிரித்தான்.

"ஏம்மா, பையன் ஆபீசிலிருந்து உடனே திரும்பி வந்துட்டா, உடம்பு சரியில்லாமத் தான் இருக்கணுமா? வேற நல்ல விஷயமே இருக்கக் கூடாதா?"

இப்பொழுது அந்த உற்சாகம் ஈஸ்வரன், மீனாட்சி இருவரையுமே தொற்றிக் கொண்டது. மகனின் மகிழ்ச்சிக்குக் காரணம்

கனிமேல் ஆரம்பம் 12

என்னவென்று தெரியாவிட்டாலும் அவனது சந்தோஷம், அவர்களுக்கும் சந்தோஷம் தானே. மீனாட்சிதான் ஆர்வத்தை அடக்க மாட்டாமல் கேட்டாள்.

"அப்படி. என்னடா விஷயம்?"

அவன் அதற்குப் பதிலளிக்காமல் அவளது கரத்தைப் பிடித்தபடி சொன்னான்.

"அம்மா, மைசூர்பாகும், மகிழம்பூ தேன் குழலும் உன் கையால செஞ்சு கொடு..."

"தாராளமா... யாருக்குன்னு சொல்லாமோ இல்லயோ..."

அவன் கன்னம் குழிய சிரித்தான். அப்பாவை ஓரக்கண்ணால் பார்த்தபடியே கூறினான்.

"உன்கிட்ட சொல்லாமலா? சுஜா கிட்டே யிருந்து மெயில் வந்திருக்கு. நேத்து ராத்திரி அவளுக்கு மெயில் பண்ணினேன். சோம் பேறி. எப்பவுமே ஒரு வாரம், பத்து நாள் கழிச்சுத்தான் பதில் அனுப்புவா. இந்தத் தடவை என்னடான்னா நான் காலம்பற



ஆபீசுக்குப் போய் மெயில் பாக்ஸைத் திறந்தா - 'உடனே பெங்களூருக்குப் புறப் பட்டு வா'ன்னு எழுதியிருக்கா. கடைசியில அவளுடைய அப்பா அவளுக்குப் பச்சைக் கொடி காட்டிட்டார் போல..."

அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் மாடிக்கு ஓடினான். கையில் கிடைத்த துணி மணிகளை எடுத்து சூட்கேஸில் திணித்துக் கொண்டான். திடீரென சுஜாவுக்கு ஏதேனும் பரிசுப் பொருள் வாங்கிக் கொண்டு போனால் என்ன என்று தோன்ற - அதே சமயம், "அடடா... ப்ரீதியிடம் சொல்லியிருந்தால் பிரமாதமான ஐடியாவைக் கொடுத்திருப்பாளே என்றும் நினைத்தான்... அந்தக் கணமே ப்ரீதிக்கு ஃபோன் செய்ய அவனது

அனுராதா ரமணன்

கரம் அலுவலக எண்களை செல்லுலாரில் தட்டியது. எதிர்முனையில் தொடர்பு கிடைக்கவில்லை. உடனே தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு வேகமாய் மீனாட்சியைத் தேடி ஓடுகிறாள்.

"அம்மா, சுஜாவுக்கு என்ன பாங்கிட்டுப் போகலாம்?"

"ஆமாண்டா... என்னைக் கேளு..."

"என்னம்மா... அஞ்சு வருஷத்துக்கு முன்னால பார்த்தது. அப்போ அவளுக்கு, சின்னச் சின்ன விஷயங்களிலெல்லாம் ரொம்ப ஆசை. 'சர்தார்ஜி வீட்டு தோட்டத்தில பூத்திருக்கற பன்னீர் ரோஜாவைத் திருட்டுத்தனமா பறிச்சுட்டு வா'ன்னு சொல்வா. 'பாதி ராத்திரியில எழுந்து, ஊர்க் கோடியில இருக்கற மயானத்திலிருந்து மண்டை ஓடைப் பொறுக்கிட்டு வா'ன்னு சொல்வா. ஸ்கூல் ப்ரின்ஸ்பாலுக்கு ஊர் பேர் தெரியாதபடி மொட்டையா லவ் லெட்டர் எழுதி அவர் டேபிள்ள கொண்டு போய் வைக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துவா. நவராத்திரி சமயத்துல அர்ச்சனாவும் இவளுமா சேர்ந்து காலனில இருக்கற ஆம்பள பசங்களையெல்லாம் கொலுவுக்குப்

பாடணும்னு வற்புறுத்தி பாடச் சொல்லி கிண்டல் பண்ணுவா..."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மீனாட்சி பெருமூச்செறிந்தாள்.

"வில்லங்கமான ஆசை; வில்லத்தனமான அப்பா... என்னமோ போ... உனக்கெது பிடிக்கறதோ அதை வாங்கிக் கொடு..."

அவள் பதிலில் அத்தனை உற்சாகமில்லை. அதைப் பொருட்படுத்துகிற நிலையிலும் அஜய் இல்லை. அவன் வெளியில் பறந்தான்.

மைசூர்பாகை கிளறிக் கொண்டிருந்த மனைவியின் அருகில் வந்து நின்ற ஈஸ்வரன் புருவங்கள் முடிச்சிட சொல்கிறார்.

"கேசவ் இவங்க கல்யாணத்துக்குச் சம்

"நூறு வேலி நிலம் இருந்தும் தலைவர் ரொம்ப சிம்பிளா அலுமினியத் தட்டுலேதான் சாப்பிடுறாரா.... எங்கே இருக்காரு?"

"ஜெயில்லே!"

– தஞ்சை தாமு

மதிச்சிருப்பான்னு நினைக்கறயா? எனக் கென்னவோ சந்தேகமா இருக்கு..."

"சும்மா அபசகுனம் பிடிச்சாப்பல பேசாதீங்கோ. ஒருகாலத்துல கொஞ்சமாவா பழகினேள்? நடுவுல புத்தி பேதலிச்சுடுத்து. மனுஷனுக்கு, காசு கண்ணை மறச்சுடுத்து. இப்ப நல்ல புத்தி வந்திருக்கலாமில்ல?"

"சான்ஸே இல்லை..."

பெருமூச்செறிந்தார் ஈஸ்வரன்.

கேசவ்ராம் பற்றி அவருக்குத் தெரியாதா? பணம் என்றால் படுபாதகமான செயலை செய்யக் கூடத் தயங்க மாட்டார் அவர். இப்படிப்பட்ட மனிதரை நண்பராக நினைத்து அவருக்குச் சகலமான வசதிகளையும் செய்து கொடுத்து, தமது நிறுவனத்திலும் பங்குதாரராக்கி...

ஈஸ்வரனின் வாழ்க்கையிலும் கசப்பான தொரு அனுபவம் உண்டென்றால் அது கேசவராமுடன் அவர் பழகிய காலம்தான்.

ஆனாலும் சிப்பிக்குள் முத்து விளைவது போல; சேற்றில் தாமரை பூப்பது போல இப்பேர்ப்பட்ட மனிதனுக்குத்தானே சுஜாதா பெண்ணாக பிறந்திருக்கிறாள்.

நினைக்கும்போதே ஈஸ்வரனின் மூக்குக் கண்ணாடியையும் மீறி கண்ணீர் வழிந்தது. மனைவிக்குத் தெரியாமல் நாசூக்காகக் கண்களை ஒத்திக் கொண்டவர், மறுபடியும் அவளருகில் வந்து நின்று சொன்னார்.

"மனசுக்குள்ள கசப்பை வச்சுண்டு மைசூர்பாகுல சர்க்கரையையும், நெய்யையும் குறைச்சுடாத மீனாட்சி.. அவன் எப்படி இருந்தா என்ன... குழந்தை பாவம், நம்ம மேல உசிரையே வச்சிருந்தது. பூத்துக் குலுங்கற செடியை வேரோடு பிடுங்கற மாதிரி பிடுங்கிண்டு போய்ட்டான். ஆனாலும் அஞ்சு வருஷம் நம்ம பையனும் அவளும் ஒருத்தர ஒருத்தர் பார்க்காம இருந்தது எனக்கே மலைப்பா இருக்கு..."

நீண்ட பெருமூச்சு விட்டவர், மெதுவான குரலில் சொல்கிறார்.

"அஜய்ய என் பிள்ளைன்னு சொல்றதுக்கு எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு மீனாட்சி.. பாரு, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மாதிரி சொன்ன சொல்லை அப்படியே காப்பாத்தியிருக்கான். அவனுக்கு அப்பன் நான், எனக்கே வெட்கமா இருக்கு. கல்யாணமான ஆறாம் மாசம்; உன்னை மறுவீட்டுக்காக உங்கப்பா வந்து அழைச்சுட்டுப் போனாரே, ஞாபகமிருக்கா... அதுக்கு அடுத்த ரெண்டாவது நாளே ஆபீஸ் வேலை, அது இதுன்னு சொல்லிண்டு பாதி ராத்திரிக்கு மேல உங்க ஊருக்கு வந்து அசடுவழிய உங்க வீட்டுக் கதவைத் தட்டினேனே..."

மீனாட்சியின் முகத்திலும் இப்போது இறுக்கம் தளர்ந்து இதமான புன்னகை பரவியது. நுரைத்து வந்த மைசூர்பாகை நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி பரத்திய படி தன் காரியத்திலேயே கவனமாய் இருப்பது போல போக்குக் காட்டிக் கொண்டு, கணவரைத் திரும்பிப் பார்க்காமலேயே பதிலளித்தாள்.

"போஷா... மறந்துடுமா என்ன... பாதி ராத்திரியில நீங்க வந்து நின்னதும், எங்க அம்மா பழையதுல தயிரை ஊற்றி பிசைஞ்சுட்டு, மாப்பிள்ளைக்கு எடுத்த எடுப்புல எப்படி பழைய சாதத்தைப் போடறதுன்னு, அவசரமா ஒரு ரஸ்தாளி பழத்தை உரிச்சு இலைல வச்சு அந்த சாதத்தைப் போட்டதும், நீங்களும் ஊறுகாயைக் கூட லட்சியம்

பண்ணாம அந்த வாழைப்பழத்தைத் தொட்டுண்டு பழையதைச் சாப்பிட்டதும்...''

ஈஸ்வரன் சிரித்தார்.

''அது என்னமோ தெரியலை... அன்னிக்கு அந்த காம்பினேஷன் போல தேவாமிருதம் வேற எதுவுமேயில்லை. ஆனா அத்தனை பூஞ்சையான மனசுள்ள எனக்குப் போய் இப்படியொரு திடசித்தமான பையன் எப்படித்தான் பிறந்தானோ...''

மீனாட்சி இப்பொழுது மகிழம்பூ தேன் குழலுக்குப் பாசிப் பருப்பை வறுத்துக் கொண்டே சொன்னாள்.

''ரொம்பத்தான் பெருமையடிச்சுக்க வேண்டாம்.... அந்த சுஜா ஊருக்குப் போன துக்கப்புறம் கிட்டத்தட்ட ஆறு மாசம் போல உங்க பையன் முனியடிச்சாப்பல உட்கார்ந்திருந்தது அத்தனை சீக்கிரம் மறந்து போற விஷயமா என்ன? அவனும் மனசு மாறி மறுபடியும் படிப்புல கவனம் செலுத்தி, இன்னிக்கு இத்தனை பெரிய உத்யோகத்துல இருக்கான்னா, அது நாம செஞ்ச புண்ணியம்தான்...''

ஈஸ்வரன், மனைவிக்கு உதவியாக வறுத்த மாவை மிக்ஸியில் போட்டு அரைத்தபடி கூறினார்.

''இந்தத் தடவை இவன் சுஜாவைப் பார்க்கப் போற வேளை நல்லபடியா முடிஞ்சா, கேசவராம் மேல எனக்கு இருக்கற பகையைக் கூட மறந்துடுவேன் மீனாட்சி. நம்ம குழந்தைகளோட எதிர்காலத்தை விடவா இந்தக் கோபமும், ஆங்காரமும், முக்கியம்?''

மீனாட்சி இப்போது கணவனைப் பார்த்த பார்வையில் கனிவு கசிந்தது. 'சின்னக் குழந்தை மாதிரி எத்தனை நிர்மலமான மனசு இவருக்கு... இவரைப் போய் ஏமாற்ற, எவனுக்கு மனசு வரும்...'

அவளது மனக்கண் முன் சுறுப்பு வெள்ளை சினிமா போல பழைய சம்பவங்கள் வேகமாய் வந்து போயின.

மும்பையிலிருந்து - தவறு - அப்போது பம்பாய்தானே-அங்கிருந்து கேசவ்ராம், அவரது மனைவி கல்பகம், மகள் சுஜாதா மூவரும் ஈஸ்வரனின் அழைப்பின் பேரில் அந்தக் காலனியில் குடியேறிய நாள் - மறக்க முடியுமா அதை.

அப்பொழுதெல்லாம் கேசவ்ராம் விசுவாசமுள்ள பொமரேனியன் நாய்க்குட்டி மாதிரி ஈஸ்வரனின் காலைச் சுற்றி சுற்றி வருவாரே..

மறந்து விட முடியுமா அதை?

இழுத்துப் போர்த்திய புடைவையும், மருண்ட விழிகளுமாய் ஒதுங்கியே இருந்த கேசவின் மனைவி கல்பகம்.

இவளைப் பார்த்ததும் மீனாட்சி முதலில் நினைத்தது 'கொஞ்சம் ராங்கிக்காரி போல இருக்கே...' என்பதுதான்.

ஆனால் அது, ராங்கியோ, கர்வமோ இல்லையென்பதும், கணவரின் சுபாவம் தெரிந்ததினால் ஏற்பட்டிருந்த கலக்கம் என்பதும் பின்னாலேதானே தெரிந்தது.

மீனாட்சியை மேலும் யோசிக்க விடாமல் அஜய்யின் ஆர்ப்பாட்டமான வருகை...

''அம்மா எல்லாம் முடிச்சாச்சா... இன்னும் அரைமணி நேரத்துல நான் இளம் பறேன்...''

''இப்ப ஃப்ளைட் கூட இல்லையேடா...''

''நிதியமைச்சரின் முக்கியமான மூன்று பணிகள் யாவை?''

''கடன் வாங்குவது... மேலும் கடன் வாங்குவது... மேலும் மேலும் கடன் வாங்குவது!''

- உ. ராஜாஜி

ஈஸ்வரன் கவலையுடன் கேட்டார் -

''நான் கார்லயே இளம்பறேம்பா. நாளைக்குக் காலம்பற ஃப்ளைட்டுல இளம்பி அங்க போய்ச் சேர்றதைவிட இப்பவே கார்ல இளம்பினா விடிகாலம்பற பெங்களூர்ல இருப்பேன்...''

அவனுடைய ஆர்வமும், பரபரப்பும் அந்தக் கிழத் தம்பதிக்கு உள்ளூர அச்சத்தை உண்டுபண்ணுவதாய்...

'கடவுளே, அந்தப் பொண்ணு சுஜா, இவனுக்கு நல்ல பதிலைத் தரணுமே...'

மீனாட்சியின் பிரார்த்தனை கடவுளின் காதில் விழுந்ததோ இல்லையோ, அவர் பாட்டுக்கு அமர்த்தலாக, சட்டம் போட்ட கண்ணாடிக்குள்ளிருந்து தனது வழக்கமான சிரிப்பை உதிர்த்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

ஆண்டுக்கொரு முதல்வர் என்கிறாரே ராமதாஸ்?

• நேபாள 'ரோஷம்'!

• அவசர...

• ...அறிவிப்பு

• சலிப்பும் விருப்பும்...

● கே. பட்டு, கும்பகோணம்

? புலிகளுக்கெதிரான போரை திறுத்த இலங்கை அரசு ஒப்புக் கொள்ளாதது குறித்து...?

! இலங்கை அரசு சந்தேகத்துடனேயே போர் நிறுத்தத்தை ஏற்க மறுக்கிறது. முன் அனுபவம் காரணம்! இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அமைதியும் பிரச்னைக்குத் தீர்வும் ஏற்படுவது நார்வே முயற்சியைத்தான் பொறுத்திருக்கிறது.

● இரா. நல்லகண்ணு, பாளையங்கோட்டை

? ஹ்ரித்திக் ரோஷனின் நேபாள அவதாரம் குறித்து...?

! நேபாளத்துக்கு எதிராக எதுவுமே பேசவில்லை என்று ஸ்டார் டீ.வி. மூலம் ஹ்ரித்திக் சத்தியம் செய்தபோதும் அங்கே அனல் பற்றிக் கொண்டது. அங்கேயும் அரசியல் ஆதாயம் தேடி, எதிர்க்கட்சி விஷயத்தை ஊதிப் பெரிதாக்கி விட்டது.

● கே. ஏ. ராஜேஸ்வரி, காட்டுக்கானூர்

? புரியாத பாஷையைப் பேசி, சாதனை புரித்த யாகவா முனிவரின் மறைவு பற்றி...?

! "2005ல் இறப்பேன்" என்று சர்வ நிச்சயமாகச் சொல்லிக் கொண்டிருந்தவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டார். மரணம் என்பது அவருக்கு விடுதலை ஆயினும் அவரை குருவாக ஏற்றவர் களுக்கு வருத்தமே தரும் என்னும்போது, அவர் இறந்த பிறகும் 'எஸ் ஆர் நோ' நிகழ்ச்சியில் சிவசங்கர்பாபா யாகவாவைக் கிண்டலடித் துக் கொண்டிருந்தார். ஆன்மிகவாதி என்று சொல்லிக் கொள்ளும் சிவசங் கர்பாபாவுக்கு அது அழகல்ல.

● வீ. முத்தையா, திருநெல்வேலி டவுன் *

? வாக்களிப்பது குடிமக்கள் கடமை, ஆனால் அனைத்து வேட்

பாளர்களும் சுயநலம் படைத்த, தான் தோன்றித்தனமான, குறுகிய மனப் பான்மை உடை யவர்களே! இப் படிப்பட்டவர் களுக்காக நான் ஏன் கியூவில் நின்று வாக்களிக்க வேண்டும்!

! அறுசுவை விருந்து இல்லை; சாதப் பொட்டலம், ஊசிப் போன உப்புமா, கஞ்சி, கூழ், பழஞ்சோறு-ஏதாவது ஒன்று தான் உள்ளது என்ற நிலை யில் பசிக்கு ஏதாவது ஒன் றைத் தேர்ந்தெடுக்காமல் விடுவீர்களா?

● கருப்பம்புலம் சித்ர வேலு, நெய்வினக்கு

? நமது பொறுமையை மிகவும் சோதிக்கிறதே பாகிஸ்தான்?

! பாகிஸ்தானைக் காட்டிலும் சோதிப்பது ஐ.ஈரியத் அமைப்பின் பல்வேறு பிரிவு களுக்கிடையேயான குடுமிப் பிடி! பாகிஸ்தானுக்கு பேச்சு வார்த்தை நடத்த ஒரு குழு தேர்வாகிப் போய் வருவதற் குள் ஏகப்பட்ட உரசல்கள்! ஐம்பது ஆண்டுகள் தாம தத்தினால் காஷ்மீர் பிரச்னை சிக்கல்-சிடுக்குகள் நிறைந்ததாகிவிட்டது.

● செ. ஜனனி, சென்னிமலை

? 2000ம் ஆண்டின் டாப்-10 நிகழ்வுகளை வரிசைப்படுத் துங்களேன்...?

! நிகழ்காலம் குறித்தும் எதிர்காலம் பற்றியும் சிந்தித் துச் செயல்படவே விரும்பு கிறேன். கடந்த காலம் ஓர் அனுபவ படிப்பினையாக இருக்க வேண்டுமே தவிர மகிழ்ந்து நினைவுகளில் மிதப்பதற்கு மட்டும் அல்ல.

● எஸ். அப்துல்லா அஹ்மது, நாகூர்

? இன்று தொலைக்காட்சி

* ரூ. 25 பரிசு பெறுபவர்: வீ. முத்தையா, 35, பாரதியார் தெரு, திருநெல்வேலி டவுன், 627006.

களும் நாளிதழ்களும் போட்டி நடத்துவது பற்றி...?

! லேட்டஸ்ட் நியூஸ்: மக்களுக்கு அலுத்துப்போன தாக்க்(!)காரணம் கூறி குரோர்பதி விடுப்பிலே போகிறாராம்.

● அவ்வை. கே. சஞ்சீவிபாரதி,கோபி

? பா.ம.க. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கொரு முதல்வர் என்ற முறையைக் கொண்டு வருவோம் என்கிறாரே டாக்டர் ராமதாஸ்...?

! இந்த ஒரு அபத்தக் கருத்துக்காகவே அவர்கள் பதவிக்கு வந்துவிடக் கூடாது!

● கே. இளங்கோ, கல்யாண ஓடை

? கதை எழுத தேவை சிறந்த சிந்தனைத் திறனா? நிறைய புத்தகங்கள் படித்த அனுபவமா?

! சொல்லாட்சிக்குப் புத்தக அறிவு உதவலாம். ஆனால் வாழ்க்கை அனுபவம் அவசியம்; அதை அசைபோடும் சிந்தனையும் அவசியம்; அழகூட்ட கற்பனையும் மிக அவசியம்.

● கு. சரவணன், பாளையங்கோட்டை

? நடிகர் கமலஹாசனுக்கு 'நடிகர் திலகம் சிவாஜிகணேசன் விருது' வழங்கப்பட்டுள்ளது குறித்து...?

! ஆஸ்கார் பரிசுக்குச் சிவாஜி பொரி!

● டி.என்.சத்யா முருகவேல், சூரம்பட்டி

? காந்தி காலத்து இளைஞர்களிடம் இருந்த தேசப் பற்று இக்கால இளைஞர்களிடமும் இருக்கிறதா?

! காந்தி காலத்தில் சட்டியில் இருந்தது அகப்பையில் வந்தது. இந்தக் காலத்துச் சட்டிகளைப் பற்றி முதலில் கவலைப்படுவோம்; அகப்பைகளைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம். தலைவர்கள்: 'ச'; இளைஞர்கள்: 'அ'.

● பி.கொ.நி. முருகேசன், கோபி

? 'கல்கத்தா' 'கோல்கத்தா' ஆகிவிட்டதே?

! 'மெட்ராஸ்' சென்னையாக மாற்றப்பட்டதும் அடேயப்பா! எவ்வளவு வளர்ச்சி, எத்தனை சாதனை, என்னென்ன முன்னேற்றம்... கோல்கத்தாவுக்கும் நிகழாமலா போகும்!

● டி.எஸ். சேகர், தென்கடப்பந்தாங்கல்

? அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சைக் கேட்டால் உங்களுக்கு என்ன தோன்றும்?

! சரியாள தமாஷ் பார்ட்டி!

● கு. கணேசன், பனங்காட்டூர் ❐

? பாளையங்கோட்டை மருதி கொலைச் சம்பவம் பிரதமருடைய அயோத்தி பேச்சின் எதிரொலி என்று மூப்பனார் விமர்சித்தார். முதல்வர் சக அமைச்சரைத் தவத்துக்கு அனுப்பி, கொலையுண்டவரின் மகனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகை அறிவித்தார். கடைசியில் பார்த்தால் மகனே தந்தையைக் கொலை செய்ததாகத் தெரியவருகிறது. நம் தலைவர்கள் இப்படிச் செய்வது எதைக் காட்டுகிறது...?

! என்னதான் 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று வள்ளுவர் கூறியிருந்தாலும் அவசர அரசியல் அறிவை மயங்கச் செய்கிறது என்பதைத்தான்!

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்-1

? அரசுத் துறைகளில் இனி இரண்டாண்டுகளுக்குப் புதிய ஊழியர்களை நியமிக்கப் போவதில்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளதே. படித்து விட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்காலம் என்னாவது...?

! அறிவிப்பு வேறு; சட்டம் வேறு; உத்தரவு வேறு.. அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு அரசும் ஊழியர் பட்டாளத்தை அதிகரித்துக் கொண்டுதான் போகிறது. நிற்க; அப்படி ஒரு சட்டம் தப்பித் தவறி வந்தால், படித்த இளைஞர்கள் அரசு வேலைக்காகக் காத்திருக்காமல் சுயமாக முன்னேற வழி தேடுவது தான் நல்லது.

❐ கு. கணேசன்,
150, தரணி ஸ்டோர்ஸ்,
பனங்காட்டூர் அஞ்சல்,
மறைமலைநகர்-603209

நீங்கள் கேட்டவை - தராசு

'இளமை ஸ்பெஷல்'க்காக கல்கி வாசகர்கள் அனுப்பியிருந்த ஏராளமான 'இளமை கலாட்டா' கட்டுரைகளிலிருந்து பிரசுரத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டது!

'ஜிஞ்சுட்' மாஸ்டர்கள்

நாங்கள் படிக்கும் கல்லூரி வழியாகச் செல்லும் ஒரு குறிப்பிட்ட பேருந்தில் எங்கள் மாணவர்களை அடிக்கடி பார்க்கலாம். அதில், ஒரு குழாமுக்கு கண்டக்டர், டிக்கட் போன்றவை எல்லாம் பாகற்காய் விஷயங்கள். இவர்களைப் போன்றவர்களால்தான் அரசு இயந்திரமே நஷ்டத்தில் இயங்குகிறது என்று கண்டக்டரும் டிரைவரும் பெரிதாய்ச் சலித்துக் கொள்வார்கள், சற்றே நல்ல மாநிரியாகத் தெரியும் எங்களிடம். நாங்களும் முகத்தை உலக மகா பரிதாபமாக வைத்துக்கொண்டு கேட்டுக் கொள்வோம்.

ஒருநாள் வழக்கம் போல் போய்க் கொண்டிருந்த பேருந்து திடீரென்று தன் பாதையை விட்டு விலகிச் செல்ல ஆரம்பித்தது. எல்லோருக்கும் பரபரப்பு. பஸ் எங்கேயோ போகிறது என்று ஒரே களேபரம். அப்போதுதான் சற்றே தூரத்தில் நின்றுகொண்டிருந்த இரண்டு டிக்கட் பரிசோதகர்களைக் கவனித்தோம். குழப்பங்கள், கூச்சல்கள் குறைந்துபோய் பேருந்தில் ஒரு பயம் கலந்த அமைதி நிலவியது.

டிக்கெட் எடுத்திருந்த மாணவர்கள் வாழ்வில் மகோன்னத நிலையை அடைந்துவிட்டதாகக் கருதி பூரிப்படைந்தார்கள். டிக்கட் எடுக்காதவர்கள் ஒரு அசட்டுச் சிரிப்பால் தங்கள் நடுக்கத்தை மறைக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

பஸ் நின்றது. நின்றதுதான் தாமதம், ஒரு மாணவன் தொபீரெனக் குதித்து பஸ்ஸைச் சுற்றி ஓட ஆரம்பித்தான். இதைக் கொஞ்சமும் எதிர் பாராத அந்தப் பரிசோதகர்கள் அவனைத் துரத்த ஆரம்பித்தனர்.

சற்று நேரம் அங்கே இங்கே ஒடி போக்குக் காட்டியவன், சடாரென்று பஸ் 'டாப்'பில் ஏறிக்கொண்டு விட்டான். கண்டக்டர், டிரைவர் மற்றும் அந்த இரண்டு பரிசோதகர்கள் எல்லோரும் வீரப்பனைப் பிடிக்கிற அதிரடிப்படை கணக்காக பஸ்ஸைச் சுற்றி வியூகம் அமைத்துக் கொண்டுவிட்டனர்.

அவன் பரிதாபமாக அவர்களைப் பார்த்தவாறு, "சார், எதுக்கு சார் என்னைத் துரத்தறீங்க?" என்றான்.

"கீழே வாடா ராஸ்கல்! டிக்கட் எடுக்காததுமில்லாம, ஒடி தப்பிக் கலாம்னா பார்க்கறே?" என்றார் மூத்த பரிசோதகர்.

"டிக்கட்டா...? தோ எடுத்திருக்கேனே!" என்று சட்டைப் பையிலிருந்து டிக்கட்டை எடுத்துக் காண்பித்தான்.

கீழே நின்றிருந்த அத்தனை பேருக்கும் ஏமாற்றம்!

"பின்னே ஏண்டா எங்களைப் பார்த்து ஒடினே?"

"உங்களைப் பார்த்து ஓடலை சார்! என் நண்பன் டிக்கட்



வாங்கலையாக்கும்னு நினைச்சுக்கிட்டு இன்ஸ்பெக்டர்கிட்டே காட்டிக் குடுக்கப் போறேன்னு அவனை விளையாட்டாச் சீண்டினேன், அவன் கோபத்தில் அடிக்க வந்துட்டான். அவன்கிட்டேயிருந்து தப்பிக்கத்தான் ஓடினேன். யதேச்சையாகத் திரும்பிப் பார்த்தா நீங்களும் துரத்தறீங்க... டென்ஷனில் மேலே ஏறிட்டேன்!"

கதை நம்பும்படி இல்லை, ஆனால் டிக்கட் வைத்துக் கொண் டிருப்பவனை என்ன செய்ய முடியும்?

"லொள்ளு பண்ணாம கீழே வந்து தொலை!" என்று நாலு திட்டு திட்டிவிட்டு ஒரு பொது அட்வைஸை வழங்கிவிட்டு 'டிக்கட் செக்கிங்'கைத் தொடர்ந்தது பரிசோதனைக் குழு. எல்லா ஃபார்மாலிட்டீஸும் முடிந்து பரிசோதனைக் குழு போனபின்தான் கவனித்தேன், நடந்த களே பரத்திற்குள் எங்கள் கல்லூரியைச் சேர்ந்த அந்த 'வித் அவுட்' மாஸ்டர்கள் நைஸாக எஸ்கேப் ஆகியிருந்ததை! பிற்பாடு விசாரித்தபோதுதான் தெரிந்தது, எல்லாமே "ப்ரீ-ப்ளாண்டு" டிராமா என்று!

— டி.ஆர்.வி. ஸ்டாலின்

இளைஞர்களை ஆக்கபூர்வமான வழியில் செலுத்த வேண்டும் என்பதில் ஸ்ரீ விஜயேந்திரருக்கு என்றுமே ஆர்வம் அதிகம். இவரை எந்நேரமும் சூழ்ந்துகொண்டிருக்கும் மாணவர்கள் கூட்டமே அதற்கு சாட்சி. லீவு என்றால் உடனே புறப்பட்டு மடத்துக்கு வந்துவிடும் இவர்களுடன் நிறைய நேரம் செலவிடுகிறார் பால பெரியவர். இளமை ஸ்பெஷலுக்காக காஞ்சிபுரம் சென்று ஸ்ரீ விஜயேந்திரரை பிரத்யேகமாகச் சந்தித்துப் பேசினோம். "கல்கியின் இளம் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?" என்று கேட்டபோது அவர் சொன்ன கருத்துகள் இதோ...

இளைஞர்களுக்குச் சில

● இன்று பள்ளிக்கூடத்திலும் சரி கல்லூரியிலும் சரி, படிப்பு அதிகம், போட்டியும் அதிகம். பலன், உங்களுக்குப் பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் இவற்றைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லை. இந்த நிலை நீடிக்கக் கூடாது. இவற்றைப் பற்றி எல்லாம் உங்கள் ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுங்கள்! (ஆனால் அதற்கு முன்பு, இவ்விஷயங்களைப் பற்றி அவர்கள் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்வது அவசியம்; அதற்காகத்தான் விடுமுறை காலங்களில் இங்கு ஆன்மிக வகுப்புகள் நடத்தப்படுகின்றன; இதில் உங்களைப் போன்ற இளைஞர்களும் ஆசிரியர்களும் ஒன்றாகக் கலந்து கொள்கிறார்கள்.)

● இராமாயணம், மகாபாரதம்... நமது இரு மாபெரும் காவியங்கள். இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருப்பது தவறு. விரைவில் திருப்பதி தேவஸ்தானம் இவற்றைக் கற்க விருப்பமுள்ளவர்களுக்குத் தபால் மூலம் வகுப்புகள் நடத்தப் போகிறார்கள். இந்தக் கோர்ஸில் சேர்ந்து எல்லோரும் பயனடையுங்கள்.

● உத்யோகத்துக்காக கல்வி என்று நின்றுவிடாமல் உத்தியோகத்துக்குப் போனாலும் தொடர்ந்து நிறையப் படியுங்கள், சத்தான விஷயங்களைப் படியுங்கள்! தமிழில் பேசத்

தெரியவில்லை என்பது ஒரு பெருமைக்குரிய விஷயமாக ஆகிவிட்டது. இது தவறு. ஆங்கிலம் படியுங்கள், ஆனால் தாய்மொழியை அவசியம் கற்க வேண்டும். தமிழில் இல்லாத நூல்களா?

● பணத்தாலோ, உங்கள் அறிவாலோ, இல்லை சரீரத்தாலோ – உங்களுக்குப் பிடித்த வழியில் சேவை செய்யுங்கள்! உதாரணத்திற்கு, மடத்துக்கு வந்துபோகும் இளைய தலைமுறையினர் பலர் தங்கள் பகுதியில் உள்ள ஏழை குழந்தைகளுக்கு இலவச டியூஷன் சொல்லித் தருகிறார்கள்; சிலர் வழிபாட்டு மன்றங்கள் மூலம் பக்தியைப் பரப்புகிறார்கள்; இன்னும் சிலர் மடத்தின் பிடி அரிசி திட்டத்துக்காக அரிசி வாங்கி வந்து தருகிறார்கள். (இந்த அரிசி மடத்தின் மூலமாக, கோவில்கள், ஏழை இல்லங்கள், பாட சாலைகள் இவற்றுக்கு விநியோகிக்கப் படுகிறது.)

● டெலிவிஷனில் நல்லதும் வருகிறது, நல்லது இல்லாததும் வருகிறது. நல்லதைப் பார்த்துப் பயனடைய பழகிக் கொள்ளுங்கள்!

● நாகரிகம் என்பது வெளி விஷயங்களில் இல்லை. பேச்சு, சிந்தனை, பழக்க வழக்கம், பக்தி போன்ற அம்சங்களில் ஈடுபாடு கொள்வதுதான் உண்மையான நாகரிகம்!

● தேச பக்தி ரொம்ப முக்கியம். தேசத்திற்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் பதறி எழுங்கள். யாரும் சொல்லாமலே தானாக முன்வந்து உதவுங்கள்! ஆனால் அரசியல் பக்கம் மட்டும் போகவே போகாதீர்கள் – வன்முறை, ஸ்டிரைக் போன்றவற்றை நினைத்துக்கூட பார்க்கக் கூடாது!

● ஆன்மிகத்தை அடித்தளமாய்க் கொண்டு அறிவினை வளர்த்து ஆக்கபூர்வமாய் சேவை செய்து மனநிறைவோடு வாழுங்கள்!

வார்த்தைகள் – ஸ்ரீ ரவிசங்கர்

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**

நடந்தவற்றை பற்றி கவலைப்பட்டீர்கள் நடக்கப் போவதை பற்றி உடன் தெரிந்து கொள்ளுங்கள்!

உங்கள் பிரச்சனை எதுவாயினும் இனி கவலை வேண்டாம். தார்மீக ஜோதிஷ சித்தாந்த அடிப்படையில் விளக்கங்கள், பரிகாரங்கள் தனது அமானுஷ்ய சக்தியால் உடன் துல்லிய மாகக் கூறும் ஒரே ஜோதிட நிபுணர்.

உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கும் பிரச்னைகளுக்கும் முடிவுகாண முன் அனுமதி பெற்று நேரில் வரவும்.

உங்கள் அபிமான ஜோதிடர் தேதியூர்

வி. மஹாதேவன்

M.A.R.P.(Cal.) M.M.H.Sc.A.,
INDIAN OCCULTIST OF RARE POWERS
DIVINE ASTROLOGER, THANTHRIC HEALER.
Email: thethiyur_mahadevan@hotmail.com

மணமக்கள் தேவை

உங்கள் பையன்/பெண் கல்யாணம் ஆகவில்லையே என்ற கவலை இனி வேண்டாம். ஏற்ற மணமக்களை எளிதாகத் தேர்ந்தெடுக்க உடன் ரிப்ளை கவருடன் தொடர்பு கொள்ளவும். **'ஸ்வயம்வராலயா'** இது அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம். நம்பிக்கை இல்லமும் கூட. தரகர்கள் அல்ல நாங்கள்! அங்கத்தினர்கட்கு மணமக்கள் தேவை விளம்பரங்கள் அதிகம் வரும் ஸ்வயம்வரம் பிரதிகள் இலவசம்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம்/தமிழ்	:	ரூ. 60/-
எதிர்கால கணிப்புடன் (ஆங்கிலம்)	:	ரூ. 150/-
கல்யாண பொருத்தம்(தமிழ்/ஆங்கிலம்)	:	ரூ. 60/-

ஆகம சாஸ்திர சித்தாந்த முறையில் தயாரிக்கப்பட்ட யந்திரங்கள்/சக்கரங்களுக்கு உடன் அணுகவும்
(RATES ON REQUEST)

ஸ்வயம்வராலயா

(GOVT REGD)
49/27, லேக்வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.
☎ 4746427/4742756 (R) 4897241
7A, சாந்தி விஜயா காம்ப்ளக்ஸ், சென்னை - 4
☎ 4984278
88/1, 16th Cross, 6th Main, Malleswaram, Bangalore - 55 ☎ 3340146

எளிதாகச் செல்லலாம். சுலபமாக வாங்கலாம்.

சென்னைக்கு அருகில் நல்ல வீட்டுமனைகள்

ஸ்ரீரங்கா நகர் DTCP அங்கீகாரம் பெற்ற மனைகள் 904/90
திருவள்ளூர் (ஹிந்துஸ்தான் மோட்டார் அருகில்)

சிறப்பம்சங்கள்

• உடனே வீடு கட்டலாம். • மனைப்பிரிவை ஒட்டி நிறைய வீடுகள் • தாராளமான ரயில் மற்றும் பஸ் வசதி • நேர்த்தியான அகலமான தார் ரோடு. • 60' மற்றும் 40' சாலைகள். • அவையான நிலத்தடி நீர் • மெயின் ரோடுக்கு அருகில் • வேகமாக உயரும் நில மதிப்பு. • சத்தமான பத்திரம், நம்பகமான நிறுவனம். • 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

2400 ச.அடி 60,000/-

Ph : 4357721/31 Fax.4353183 . Cell : 98400-44018 E-mail: blbestmail@vsnl.net
http://business.vsnl.com/blbestates

BLB Estates (P) Ltd.

S-3,"Ramana Flats" 27, Rathna Nagar, Off Anna Salai,
(Behind Apollo Cancer Hospital), Teynampet, Chennai - 18.

நம்பி முதலீடு.

பூண்டு சாப்பிட்டால் அமிபியாஸிஸ் வராது!

மூலிகை மணி
டாக்டர் க. வேங்கடேசன்
டாக்டர் க.வே. அபிராமி

பழங்கால சமஸ்கிருத ஸ்லோகங்களில் பூண்டு பற்றிய செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. பண்டைய சீனாவில், கடவுளுக்கு ஆட்டுக் குட்டிகளை பலியிடுகிறபோது, அதற்கு நிறைய பூண்டு கொடுத்து, பலிக்குத் தயார் செய்வார்களாம். பூண்டு சேர்த்தால், கடவுளுக்கு இஷ்டம் என்பது அவர்களுடைய நம்பிக்கை! எகிப்து நாட்டில், பதினைந்து பவுண்டு பூண்டை விலையாகக் கொடுத்தால், ஒரு பலசாலியான ஆளை, அடிமையாக வாங்கிவிட முடியுமாம்! கிரேக்க வரலாற்று ஆசிரியரான ஹெரடாடஸ், எழுதி வைத்துவிட்டுச் சென்றதிலிருந்து, அந்தக் காலத்தில், பிரும்மாண்டமான பிரமிடுகளைக் கட்டுகிற பணியில் ஈடுபட்டிருந்த அடிமைகளுக்குத் தரப்பட்ட உணவில் பிரதானமாக இடம் பெற்றிருந்த ஐட்டங்கள் வெங்காயமும், பூண்டும்தான் என்று தெரிய வருகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த வெங்காயமும், பூண்டும் நிறுத்தப்பட்டபோது அந்தப் பணியாட்கள் "எக்காரணம் கொண்டும், எங்களுக்கு வழங்கப்பட வேண்டிய வெங்காயத்தையும், பூண்டையும் நிறுத்தக் கூடாது என்று வேலை நிறுத்தம் செய்ததாகக்கூட தகவல்கள் உண்டு! சுமேரிய நாகரிகத்தைப் பற்றிய குறிப்புகளிலும், பூண்டு பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. சீனாவின் தத்துவ மேதை கன்பூஷியஸ்கூட, பூண்டு பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டிருக்கிறார். எட்டாவது நூற்றாண்டில், பாபிலோனிய அரசர்களது தோட்டங்களில் பூண்டு வளர்ந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. கடல்வழி கண்டுபிடிக்கப் புறப்பட்ட மார்க்கோபோலோவின் பயணக் குறிப்புகளில், பூண்டுக்கு இடமுண்டு.

மருத்துவ குணங்கள் கொண்டது பூண்டு என்பது ஒருபுறமிருக்க, பூண்டுக்கு நம் உணவிலும் முக்கியமான ஓர் இடமுண்டு. மேற்கத்திய நாடுகளில் மக்கள் உண்ணும் பிரெட்களில் பூண்டு சேர்த்து தயாரிக்கப்படும் 'கார்லிக் பிரெட்'டும் ஒன்று.

சித்த மருத்துவத்தில் பூண்டை 'ஒரு ஆல் ரவுண்டர்' என்றே சொல்லுவார்கள். ஆனால் பலருக்குப் பூண்டு என்றாலே பிடிக்காது. காரணம் அதன் வாசனை. பாகற்காய் கூடத்தான் கசக்கிறது. அதற்காக அதனை ஒதுக்கித் தள்ளி விடக் கூடாதில்லையா? பூண்டும் அதுபோலத்தான்.

இன்று பலரும், சதா சர்வ காலமும் ஏதாவது நோய் நொடியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அடிப்படையான ஒரு காரணம், இவர்களுடைய உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாக இருப்பதுதான். பூண்டு சாப்பிடுவதால், உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி பல மடங்கு

பெருகும் என்பது விஞ்ஞானபூர்வமாக நிரூபணமான ஓர் உண்மை.

ஸ்பெயின் நாட்டில் கூறப்படும் மரபு வழிக் கதையொன்று, பூண்டின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில், ஸ்பெயின் நாட்டின் பல முக்கிய பகுதிகளிலும் பிளேக் நோய் வந்ததாம். மக்கள், தங்கள் உடமைகளை எல்லாம் வீட்டில் போட்டதுபோட்டபடி விட்டுவிட்டு, உயிருக்குப் பயந்து, வேறு ஊர்களுக்கு ஓடிக் கொண்டிருந்தார்களாம். இப்படி இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் புகுந்து, நாலைந்து திருடர்கள், எல்லா விலையுயர்ந்த பொருட்களையும் திருட ஆரம்பித்தார்களாம். அரசரின் காதுக்கு இந்த விஷயம் போனது. காவலர்களை அந்தப் பகுதிக்கு அனுப்பி வைத்தார் அரசர். காவலர்களும், அந்தத் திருட்டுக் கும்பலைக் கையும் களவுமாகப் பிடித்து, அரசர் முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்களாம்.

விசாரணை ஆரம்பித்த மன்னர், முதல் கேள்வியாக, "பிளேக் வியாதிக்கு பயந்து, அத்தனை மக்களும் ஊரை விட்டு ஓடி விட்டார்கள். ஆனால், நீங்கள் அங்கேயே தங்கி திருடினீர்களே. உங்களுக்கு பிளேக் நோய் வந்துவிடப் போகிறதே என்கிற பயம் இல்லையா?" என்று கேட்டாராம்.

"எங்களை பிளேக் நோய் அண்டவே அண்டாது. காரணம், அது எங்களைத் தாக்காமல் இருக்க நாங்கள் போதிய தற்காப்பு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்றார்கள் அந்தத் திருடர்கள்.

"அது என்ன தற்காப்பு நடவடிக்கை?" - இது மன்னனின் கேள்வி.

"தினமும் பூண்டை நன்றாக அரைத்து, அதை மதுவில் கலந்து குடித்து விடுகிறோம்" என்பது திருடர்களின் பதில். பிளேக் நோய் என்பது, மிக வேகமாகப் பரவி, நூற்றுக் கணக்கான மக்களை ஒரே நேரத்தில் பலி வாங்கி விடும் பயங்கரமான தொற்று நோய் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட பிளேக் நோயையே வராமல் தடுக்கும் அளவுக்கு நோய் எதிர்ப்பு ஆற்றலை ஏற்படுத்துகிற சக்தி பூண்டுக்கு உண்டு என்பது ஆச்சரியமான நிஜம். பூண்டை, கிச்சனில் இருக்கிற 'பென்சிலின்' என்று சொன்னால் அது மிகையில்லை.

பூண்டை தினசரி சாப்பிட்டு வந்தால் மூட்டுகள் பலப்படும். மூட்டுவலி, வீக்கம் ஆகியவற்றால் அவதிப்படுகிறவர்கள் பூண்டை சாப்பிடுவதன் மூலமாக அவற்றிலிருந்து நிவாரணம் பெறலாம்.

நெப்போலியனுக்குக்கூட அமீபியாசிஸ் வியாதி இருந்தது என்று சொல்லுவார்கள். இன்று மிகப் பரவலாக உள்ள வியாதி இந்த அமீபியாஸிஸ். இதற்குக் கை கண்ட மருந்து பூண்டு. பூண்டை உரித்து, நசுக்கி, பாலில் போட்டு அதில் தேன் கலந்து சாப்பிட்டால், நிவாரணம் கிடைக்கும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், எந்த மருந்து சாப்பிட்டாலும், அமீபியாசிஸ், உடனடியாகப் போய் விடாது. அது நான்பட்டுதான் நிவாரணமடையும் என்பார்கள். ஆனால் பூண்டைப் பொறுத்தவரை சட்டென்று பலன் கிடைக்கும்.

மேற்கத்திய மருத்துவ நூல்களில் பூண்டு பற்றிக் குறிப்பிடுகிறபோது, "ஒரு துண்டு பூண்டு மிகச் சிறந்த டாக்டர்" என்கிறார்கள். தெலுங்கில், ஒரு பழமொழி உண்டு. "பத்து தாய்க்கு ஈடானது ஒரு பூண்டு."

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவப் பேராசிரியர் ஒருவர். "பூண்டை சாதாரணமான ஒன்றாக எடுத்துக் கொண்டு விடக் கூடாது. பூண்டு ஆராய்ச்சி பலவித பரிமாணங்கள் கொண்ட ஒரு பன்முக ஆராய்ச்சி" என்று கூறுகிறார். சாதாரண தலைவலி முதல், கேன்சர் வரை எந்தெந்த நோய்க்கெல்லாம் பூண்டை, மருந்தாகப் பயன்படுத்தலாம் என்ற ஆராய்ச்சி அங்கே பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பூண்டிலிருந்து அந்த துர்வாசனையைப் போக்கிவிட்டு, அதனைச் சாப்பிட ஏதாவது வழி இருக்கிறதா? இது பலரும் என்னிடம் கேட்கிற கேள்வி, அதற்குப் பதிலை அடுத்த வாரம் சொல்கிறேனே!

படம் : யோகா

பூண்டை, கிச்சனில் இருக்கிற 'பென்சிலின்' என்று சொன்னால் அது மிகையில்லை.

INDIAN INSTITUTE OF MANAGEMENT & TECHNOLOGY

25, Mada Church Road, Mandaveli,
Chennai - 600 028. INDIA Phone : 4956036
Fax : 495 2692 e-mail : icolam@hotmail.com

in association with

ALL INDIA COUNCIL FOR MANAGEMENT STUDIES

29, Lazarus Church Road, R.A. Puram,
Chennai - 600 028. INDIA Phone : 4933210
Fax : 493 3259 e-mail : aiicas@hotmail.com

IIMAT and **AICOMAS** jointly offer the following **One Year** and **Six Months** Diploma Courses by correspondence

Eligibility : No formal qualification (Open Education System). **For Application and Prospectus send Rs. 10/- Postage stamp** to any one of the Institute.

ONE YEAR DIPLOMA COURSES

- ★ BUSINESS MANAGEMENT
- ★ BUSINESS ADMINISTRATION
- ★ MARKETING MANAGEMENT
- ★ TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000 / QS 9000
- ★ MATERIALS MANAGEMENT
- ★ EXPORT & IMPORT MANAGEMENT
- ★ HOTEL MANAGEMENT
- ★ CATERING MANAGEMENT
- ★ BANKING & INSURANCE MANAGEMENT
- ★ TRAVEL & TOURISM MANAGEMENT
- ★ MECHANICAL ENGINEERING
- ★ CIVIL ENGINEERING
- ★ ELECTRICAL ENGINEERING
- ★ ELECTRONICS & COMMUNICATION ENGINEERING

SIX MONTHS DIPLOMA COURSES

- ★ BUSINESS MANAGEMENT
- ★ BUSINESS ADMINISTRATION
- ★ OFFICE ADMINISTRATION
- ★ SALES & MARKETING
- ★ FINANCIAL MANAGEMENT
- ★ RESEARCH & DEVELOPMENT
- ★ INDUSTRIAL RELATIONS & PERSONNEL MANAGEMENT
- ★ HUMAN RESOURCES DEVELOPMENT
- ★ EXPORT & IMPORT MANAGEMENT
- ★ FOREIGN TRADE MANAGEMENT
- ★ MATERIALS MANAGEMENT
- ★ PRODUCTION MANAGEMENT
- ★ FOOD & BEVERAGE MANAGEMENT
- ★ FOOD PRODUCTION MANAGEMENT
- ★ COMPUTERS IN OFFICE MANAGEMENT
- ★ COMPUTER APPLICATION
- ★ HOTEL MANAGEMENT
- ★ BANKING MANAGEMENT
- ★ TEACHER TRAINING EDUCATION
- ★ LABOUR LAWS
- ★ QUALITY CONTROL & ISO 9000
- ★ ADVERTISING & PUBLIC RELATIONS
- ★ NURSING MANAGEMENT
- ★ ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
- ★ INTERNATIONAL BUSINESS MANAGEMENT
- ★ BUSINESS INFORMATION SYSTEM
- ★ MANAGEMENT INFORMATION TECHNOLOGY
- ★ HEALTH & HOSPITAL MANAGEMENT
- ★ HOSPITAL ADMINISTRATION
- ★ EDUCATIONAL MANAGEMENT
- ★ TOTAL QUALITY MMANAGEMENT & ISO 9000
- ★ NETWORKING & INTERNET APPLICATION
- ★ QUALITY ASSURANCE & QS 9000 / ISO 9000
- ★ SOFTWARE CAPABILITY MATURITY MODEL (guidelines for improving software process)
- ★ INTERNATIONAL AIRLINES MANAGEMENT (Affiliated/Recognised by Westwind Aviation Academy, Arizona, USA)
- ★ E-COMMERCE APPLICATION
- ★ WEB DESIGNING APPLICATION
- ★ WEB APPLICATION DEVELOPMENT
- ★ INTERNET & INTRANET SECURITY

We offer Post-Graduate Diplomas also. (Duration - 18 months). Kindly write to any one of the above institute for more information.

பாதை காட்டுது பத்மஶ்ரீ ஜெம்ஸ்!

ஓம் ஆதித்யாய சோமாயா
அங்கரா காய புதாயா
குரு தேவாய சக்ராய.
சனீஸ்வராய ராகு
கேதுவாய நமோ... நம ஹ!

நாளும் கோளும் உதவா விட்டால் நல்லவனும் பொல்லாதவன் ஆவான் என்று ஒரு பழமொழி இருக்கிறது. ஒருவனது ஜனன காலத்தில் நவகிரகங்களும் எந்தெந்த நிலையிலிருக்கின்றனவோ, அதை அடிப்படையாக வைத்து ஒருவரது ஜாதகம் கணிக்கப்படுகிறது. மனிதனின் வாழ்க்கை முழுவதும் நவகிரகங்களின் நடமாட்டத்தை ஒட்டித்தான் அமைகின்றன. நல்ல தசா புத்தி நடக்கும் போது தொட்டதெல்லாம் பொன்னாகும். 'நூறு ரூபாய் கிடைக்குமா?' என்று சந்தேகத்துடன் செல்லும்போது ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆனால் அதே சமயம் நம் ஜாதகப்படி மோசமான தசாபுத்தி நடக்கும் போது நாம் எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், ஒரு காரியமும் நடக்காது. உப்பு விற்கப் போனால் மழை பெய்யும்; தவிடு விற்கப் போனால் காற்றடிக்கும். ஜாதகத்தில் லக்ன கட்டத்தில் அமர்ந்திருக்கும் கிரகாதிபதியை, மற்ற கிரகங்கள் பார்க்கும் பார்வைக்கு ஏற்ப ஒவ்வொருவருக்கும் பலா பலன்கள் மாறுபடுகின்றன.

நமக்குக் கிரகங்கள் சாதகமான நிலையில் இருக்கும் போது கிடைக்கும் நற்பலன்களை அதிகப்படுத்திக் கொள்ளவும், பாதகமான பலன்களைக் கொடுக்கும் கிரக சஞ்சாரங்களின்போது தற்காத்துக் கொண்டு அந்த கெடு பலன்களையும் குறைத்துக் கொள்ள முடியுமா? என்றுகேட்டால், முடியும் என்று உறுதியாக பதில் சொல்ல முடியும். இந்த வகையில் கடவுள் நமக்காக படைத்தவை தான் நவரத்தினங்கள் என்னும் நவமணிகள். இப்போது பரவலாக அதிர்ஷ்டக் கற்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. தெய்வத்திற்கு நவரத்தினங்கள் சூட்டப்படுகின்றன. இவைகள் கிரகங்களுடன் தொடர்பு கொண்டவை. நவரத்தினங்களில் உள்ள தாதுக்களும், கிரகங்களில் உள்ள தாதுக்களும் ஒரே தன்மை கொண்டவை. எனவே கிரகங்களின் கதிர் வீச்சையும் அதிர்வுகளையும் மண்ணுக்கு ஏற்றவாறு மாற்றி வெளியிடும் வேலையை நவரத்தினக் கற்கள் செய்கின்றன. இந்த நவரத்தினக் கற்கள் ஒவ்வொன்றும் ஒரு நிறம். இந்தக் கற்களை, மோதிரத்திலோ, நெக்லஸ் போன்ற அணிகலன்களிலோ அணிந்திருந்தோமானால் கிரகங்களின் பார்வையால் ஒருவருக்கு ஏற்படும் நல்ல பலன்களை கூடுதலாக்கிக் கொள்ளலாம்; கெடு பலன்களை குறைத்துக் கொள்ளலாம்.

இந்த நவரத்தினங்களைத் தேர்ந்தெடுத்து அணியும்போது, அவற்றின் குணங்களையும், குற்றங்களையும் கண்டறிவது அவசியம். கற்கள் உள்ளே வெடிப்பின்றி நல்ல நிறம் பெற்று இருக்க வேண்டும். குற்றமற்ற (தோஷ மற்ற) கற்கள் மட்டுமே நல்ல பலன்களைக் கொடுக்கும். ஒரு கல் உண்மையா, செயற்கையா என்பதை அதன் ஒளிவிடும் தன்மையின் மூலம் அடையாளம் காண முடியும். அதிர்ஷ்டக் கற்கள் விவகாரத்தில் சிலர் அரைகுறை அறிவோடு செயல்பட்டு கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள், ராசியை அடிப்படையாக வைத்து கற்கள் அணிவது சரியான முறையல்ல. சிலர் அவ்வப்போது



நடக்கும் தசாபுத்தியின் அடிப்படையில் அதிர்ஷ்டக் கற்களை அணிகிறார்கள். இதுவும் தவறு. இன்னமும் சிலர் நவரத்தினங்களைக் கொண்ட மோதிரத்தை அணிந்து கொள்கிறார்கள். இதன் மூலம் நவகிரகங்களின் சாதகமான பலன்களைப் பெறலாம் என்கிறார்கள். இது சரியான அணுகுமுறை கிடையாது. ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு சமயத்திலும், சில கிரகங்கள் சாதகமாக இருக்கும்; சில பாதகமாக இருக்கும். எனவே நாம் அணியும் கற்கள் மூலம் சாதகங்களை அதிகரிக்க வேண்டும்; பாதகங்களை குறைக்க வேண்டும். இதற்குச் சிறந்த வழி ஜாதகத்தை அடிப்படையாக வைத்து அதிர்ஷ்டக் கற்கள் அணிவது தான். உங்களுக்கு வாழ்வில் ஏற்றம் கொடுக்கக் கூடிய கற்களை தேர்ந்தெடுக்க வேண்டுமானால் இதற்கென இருக்கும் நிபுணர்களை நாட வேண்டும். அப்படிப்பட்ட நிபுணரான **திரு. ராஜசேகர்ராவ்** அவர்கள் நடத்தும் நிறுவனம் தான் **பத்மஸ்ரீ ஜெம்ஸ்.** ராஜசேகர் அவர்களின் குடும்பத்தினர் மூன்று தலைமுறைகளாக நவரத்தினக் கற்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள். உங்கள் ஜாதகத்தை எடுத்து வந்தால், அதில் உள்ள கிரகங்களின் நிலைப்பாட்டை அடிப்படையாக வைத்தும், அப்போது நடக்கும் தசாபுத்தியை கவனத்தில் கொண்டும் உங்களுக்கேற்ற அதிர்ஷ்டக் கற்களை விற்கும் நிறுவனம் தான் பத்மஸ்ரீ ஜெம்ஸ். International Gemologists Association சான்றிதழ் பெற்றுள்ள நிறுவனம் பத்மஸ்ரீ ஜெம்ஸ். ஜாதகமே இல்லாதவர்கள் கவலை பட வேண்டாம். பத்மஸ்ரீ ஜெம்ஸ் நிறுவனத்திலேயே உள்ள அனுபவம் மிக்க ஜோதிடர் மூலம் ஜாதகம் கணிக்கப்பட்டு அதிர்ஷ்டக் கற்கள் அடையாளம் காட்டப்படும். இதற்கு நீங்கள் பிறந்த நேரம்; நாள்; வருடம்; பிறந்த ஊர் ஆகியவற்றைச் சொன்னால் போதும். பத்மஸ்ரீ ஜெம்ஸ் நிறுவனத்தினர் சிபாரிசு செய்த அதிர்ஷ்டக் கற்களை அணிந்து கொண்டதால் பலரது கஷ்டங்கள் குறைந்திருக்கின்றன; பிரச்னைகள், தீர்வு காணப்பட்டிருக்கின்றன. வாழ்க்கையில் ஏற்றம் உண்டாகியிருக்கிறது.

"என் மகளுக்குப் பல வருடங்களாக திருமணம் தடைபட்டுவந்தது. பத்மஸ்ரீக்கு விஜயம் செய்தேன். அவர்கள் அளித்த ஜெம்ஸ் அணிந்த மூன்றே மாதத்தில் திருமணம் நடந்தது. இந்நிறுவனத்தினரின் சேவையை என்னைப் போலவே மற்றவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறார் சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த ராமநாதன்.

*** குடும்பப் பிரச்னை * குழந்தை இல்லையா * கல்வித் தடையா * பணப் பிரச்னையா * வேலை கிடைக்கவில்லையா * உடல்நிலை கோளாறா * வியாபாரத்தில் சிக்கலா**

எந்தப் பிரச்னையானாலும் பத்மஸ்ரீ ஜெம்ஸ் நிறுவனம் பூஜித்துக் கொடுக்கும் அதிர்ஷ்டக் கற்கள் மூலம் தீர்வு காணலாம்.

ஜாதகத்துடன் நேரில் வருபவர்களுக்கு எந்த கற்கள் அணிய வேண்டும் என்று கூறுவதற்கு ரூ.101/- மட்டுமே. வெளியூர் நபர்கள் ரூ.250/-துடன் ஜாதகத்தின் நகலையோ(அ)பிறந்த தேதி, நேரம், இடம் போன்ற விவரங்களை உங்கள் பிரச்னையுடன் D.D/M.O.வை PADMASHRI GEMS என்ற பெயரில் எடுத்து அனுப்பவும். இந்த சேவையில் உங்களுடைய பதில்களை E-mail மூலம் பெறலாம். மூன்று கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்.

பத்மஸ்ரீ ஜெம்ஸ்

53-A, North Usman Road, T. Nagar, Chennai - 17.
Opp. Arihant Towers, Adj. to Sundari Silks. Phone : 823 4060, 822 6128.

Web site :
www.padmashrigems.8m.com

Advt



சென்னை டு சைனா!

பத்து வாரப் பயணக்
கட்டுரை
தொடங்குகிறது!

சாருகேசி

இரவு பதினோரு மணி. அண்ணா இன்டர்நேஷனல் ஏர்போர்ட். இந்தியன் ஏர் லைன்ஸ் செக்-இன் கவுன்ட்டர் ஒன்றில் 'பாங்காக்' என்று சங்கிலி கோக்காத போர்டு மாட்டப்பட்டதும், வரிசையில் நின்று லக்கேஜை செக்-இன் பண்ணி அனுப்பினேன். டிக்கட்-பாஸ்போர்ட் அடங்கிய வாலட்டைக் கையில் சுழற்றிய படி, குடிக்க ஒரு வாய் தண்ணீர் குளிர்ச்சியாகக் கிடைக்குமா என்று பார்த்தபோது இமிக்ரேஷன் செல்லும் அடைப்புக்கு முன்னால் இருந்த வாட்டர் கூலர் தென்பட்டது.

டிஸ்போசபிள் தம்ளரை அதன் வரிசையிலிருந்து ஓர் உருவு உருவி எடுத்து, தண்ணீர் பிடித்து, மடக் மடக் என்று விழுங்கிவிட்டு, நகர்ந்தேன்...

ஹா! பாஸ்போர்ட், டிக்கட் உள்ள வாலட்? வலது கையில் இருந்தது எங்கே போயிற்று? இடது கையும் வெறுங்கையாக இருக்கவே, அதற்கும் தெரியாது! (வலது கையால் தர்மம் செய்தால்தான் இடது கைக்குத் தெரியக் கூடாது. வலது கை தொலைத்தால் கூடவா இடது கைக்குத் தெரியக் கூடாது? என்ன (அ)நியாயம் இது!)

சைனா பயணம் மீனம்பாக்கத்திலேயே முடிவடைந்துவிடுமோ என்று பயம் பிடித்துக் கொண்டது.

"அங்க்கிள்!"

பின்னாலிருந்து ஓர் இனிமையான குரல்.

இளம் குஜராத்தி தம்பதி நின்று கொண்டிருந்தார்கள். கூப்பிட்டது அந்தப் பெண் மணிதான்.

"உங்கள் பாஸ்போர்ட்-டிக்கட் வாலட்!" என்று சாம்பல் நிற வாலட்டை நீட்டியதும், பாய்ந்து போய் வாங்கிக் கொண்டேன். "தாங்க்ஸ், மெனி மெனி தாங்க்ஸ்!"

''நீங்கள் தண்ணீர் குடித்த பிறகு, பக்கத்தில் வைத்த வாலட்டை எடுத்துக் கொள்ளாமலே நகர்ந்து விட்டீர்கள்!

விமானம் ஏறுவதற்கு முன்பே ஹைஜாக் ஆகியிருக்கக்கூடிய சீனப் பயணத்தைக் காப்பாற்றித் தந்த குஜராத்தி தம்பதிக்கு மீண்டும் நன்றி.

பன்னிரண்டு மணிக்கு இமிக்ரேஷன்-செக் அழைப்பு வந்ததும், பத்திரமாக வைத்திருந்த பாஸ்போர்ட்டை கவுன்ட்டரில்

நீட்டியபோது, பிரித்துப் பார்த்த அதிகாரி, "சைனா?" என்றார். வியப்பு, முகச்சுளிப்பு, நம்பிக்கையின்மை எனப் பல பாவங்களை உள்ளடக்கியபடி வந்தது கேள்வி. "வாட் பர்ப்பஸ்?" என்று இரண்டாவது கேள்வி.

''உறவுக்காரர்களைப் பார்க்கப் போகிறேன்!" என்றதும் "ஓகோ!" என்றார் அதிகாரி.

நல்ல வேளையாக, "உறவு என்றால் யார்? சின அதிபர் ஜியான் ஸமீனா? பிரதமர் ஸொவ் ரோன்ஜியா?' என்றெல்லாம் கேட்க வில்லை.

இரவு என்றும் சொல்ல முடியாத, அதி காலை என்றும் சொல்ல முடியாத அதி, அதி, அதி, காலை இரண்டு மணிக்கு IC 979 இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் பாங்காக் புறப்பட்டது.

இமிக்ரேஷன் அதிகாரியின் முகபாவம் நினைவுக்கு வந்தது. அமைச்சர் ஜார்ஜ் பெர் னான்டஸ் ஒருமுறை ஆற்றிய உரையை ஞாப கப்படுத்தியது அது. தேசிய மாணவர் படை எனப்படும் என்சிசியின் 52ஆவது ஆண்டு விழாவில்,சைனாவைப் பற்றிப் பேசியிருந்தார்.

"வரப்போகும் மில்லெனியத்தில் உலக நாடுகளிலேயே தலைமை இடத்தைப் பிடிக் கப் போகிறது இந்தியா என்ற நம் நினைப் பிற்கு சைனா சவால்விடுகிறது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் சைனா அடைந்திருக்கும் முன்னேற்றம் அசா தாரணமானது.

"சமீபத்தில் நடந்த ஸிட்னி ஒலிம்பிக்ஸில் 28 தங்கம் உட்பட மொத்தம் 59 பதக்கங்கள் பெற்றிருக்கிறது சைனா. நாம் பெற்றதோ ஒரே ஒரு வெண்கலப் பதக்கம். அந்த நாட்டின் தனிநபர் வருமானம் 900 டாலர். நம்முடையதோ 500 டாலரைக்கூட எட்ட வில்லை.

"அவர்கள் ஏற்றுமதி 182 பில்லியன் டாலர்கள். நம்முடையதோ 30 பில்லியன் டாலர்கூட இல்லை!

"அவர்களுடைய உணவு தானிய உற் பத்தி 508 மில்லியன் டன்கள் என்றால், நம் முடையது 205 மில்லியன் டன்கள்.

"இத்தனைக்கும், மக்கள் தொகையில் நமக்கும் அவர்களுக்கும் இருக்கிற வித்தி யாசம் 10-15 சதவீதம்தான்! நாம் ஏன் இத் தனை பின்தங்கி இருக்கிறோம்! சிந்திக்க வேண்டும். நமக்குள் விவாதிக்க வேண்டும். நம்முடைய குறைகளைக் கண்டுபிடித்துக் களைய முனைய வேண்டும்!

"எல்லாவற்றுக்கும் முன்னால் உழைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். சைனா ஒன்றும் ஒரே நாளில் இப்படி மிகச் சக்தி வாய்ந்த நாடாக உருவாகிவிடவில்லை. அவர்கள் பல் லாண்டுகளாக உழைத்த கடுமையான உழைப்புத்தான் இதற்குக் காரணம்!"

இத்தனை அப்பட்டமாக நம் நிலைமையை புட்டுப் புட்டு வைத்த ஜார்ஜ் பெர் னான்டஸுக்கு மறுபடியும் ஒரு ஜே போட வேண்டும் என்று ஃபிளைட்டில் தோன்றியது.

காலை 6.45க்கு, பளிச்சென்ற, பிரம் மாண்டமான, பாங்காக் விமான நிலை யத்தில் கால் வைத்தபோது, IST நேரம் 5.15. ஆக, ஒன்றரை மணி நேரம் வித்தியாசம்.

பெய்ஜிங் விமானம் 10.40க்குத்தான். அதுவரை பொறுமை காக்க வேண்டும்!

லவுஞ்சில் உட்கார்ந்து கொண்டேன். சுற்றிலும் ட்யூடி-ஃப்ரீ ஷாப்புகள். (தேங் காயைக்கூட அழகாகச் சீவிச் சிங்காரித்து வைத்திருந்தார்கள் பழக்கடையில்)

சீனர்கள், கொரியர்கள், மற்றும் ஜப்பானி யர்களுக்கு மத்தியில் சொற்பொழிவு செய் வதற்காக சீனா செல்லும் ஒரு வயதான இந்தியப் பேராசிரியை நட்பான புன்னகை செய்தார். இன்னோர் இளைஞர், ரமேஷ்குமார், மங்கோலியா போவதாகச் சொன்னார். "மங் கோலியா பார்க்கப் போகிறீர்களா, என்ன?" "மூணு வருஷமா அங்கதான் இருக்கேன்!" என்றார். (மங்கோலியாவில் வசிக்கும் ஒரே தமிழர் அவராகத்தான் இருக்க முடியும்!)

பெய்ஜிங் விமான கூடத்தில் இறங்கும் போது மாலை மணி நான்குதான். ஆனால் ஏதோ ஏழு-ஏழரை மணி ஆகிவிட்ட மாதிரி இருந்தது.

கஸ்டம்ஸ்-இமிக்ரேஷன் கடந்து, பெட்டி யுடன் வெளியே வந்தபோது, வரவேற்புத் தளத்தில் என் உறவினர் கோபால் பிரமிப் புடன் என்னைப் பார்த்துவிட்டுக் கையசைத் தார். அவரோ ஸ்வெட்டர்கள், பிரம்மாண்ட கோட்டு, தலை-காது எல்லாம் மூடுகிற தொப்பி என்று ஆள்பாதி-ஆடை பாதியாக வந்திருக்கையில், நானோ வெறும் ஸ்வெட் டருடன்!

"என்னது இது! இதானா உம்ம டிரஸ்?" என்று கோபம், ஆத்திரம் எல்லாம் கொப் பளிக்க, வெடியாக வெடித்தார்.

"ஏர்போர்ட்டுக்கு வெளியே வாருங்கள். அப்போது தெரியும். மைனஸ்-5. இன்னும் வேறு ஸ்வெட்டர், மஃப்ளர் ஏதாவது கொண்டு வந்திருக்கிறீரா? இல்லை உம்மை இங்கேயே விட்டு விட்டுப் போகட்டுமா?"

ஓம்

அதிர்ஷ்டபிள்ளையார் / LUCKEY GANESHA

அதிர்ஷ்டபிள்ளையார் கைக்குவந்த பதினைந்து நாட்களில் குடும்பத்தில் நிறைந்த சந்தோஷத்தையும், அதிர்ஷ்டத்தையும், கொடுக்கிறது. இந்த அதிர்ஷ்ட பிள்ளையார் கையினால் "கார்னிங் கிளாஸ்" என்ற உயர்தர கண்ணாடியினால் வடிவமைக்கப்பட்டது. எல்லா பிள்ளையாரும் அதிர்ஷ்ட பிள்ளையார்தான். "லக்கி கணேசா" என்ற இந்த பிள்ளையார் இந்த 2001 ஆண்டு ஒவ்வொரு குடும்பத்திலும் சுபிட்சத்தை உண்டாக்குவார். மாணவ-மாணவிகளுக்கு நிறைந்த கல்விச் செல்வத்தை தருவார்.

இதன் சிறப்பம்சம் முதன்முதலில் வடிவமைத்த இப்பிள்ளையார் காஞ்சிமடத்தின் மாமுனிவர் மகாபெரியவாளின் ஆசிபெற்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், அதிர்ஷ்டபிள்ளையாருக்காக விசேஷ பூஜை நடத்தப்படுகிறது.

அதிர்ஷ்டபிள்ளையார் ஒவ்வொரு இல்லகளின் பூஜை அறை, அலுவலக அறையில் இருக்க வேண்டும்.

அதிர்ஷ்டபிள்ளையார்

சிறியது	(1.5")	ரூ.30/-
	(2")	ரூ60/-
பெரியது	(3")	ரூ.90/-

தபாலில் அனுப்ப உள்ளூர் ரூ.15 வெளியூர் ரூ.30 சேர்த்து அனுப்ப வேண்டும். உங்களின் தேவையான அளவை குறிப்பிட்டு கணேஷ் கிளாஷ் ஒர்க்ஸ் என்ற பெயரில் M.O/ D.D.யாகவோ அனுப்பலாம்.

எங்களுக்கு எங்கும் கிளைகள் இல்லை. மொத்த வியாபார விசாரணைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

LUCKY GANESHA Small (1.5")- Rs.30/-
Medium (2") - Rs.60/- Big (3") - Rs.90
Courier Charges Rs.15/- for Tamilnadu and Rs.30/- for other states in India.
For your requirements you could send the M.O./D.D. favouring Ganesh Glass Works.
For exclusive franchise in your locality, contact us for more details (IN CHENNAI WE HAVE NO BRANCHES)

Manufactered by P.Ganesh, G.Tech.

Ganesh Glass Works
No.87, Ramakrishna Nagar, (Near Ernavoor Bridge)
Ernavoor, Chennai - 600 057.
Phone : 573 4851.
ganeshglassworks@yahoo.com

"கொஞ்சம் பொறுங்கள். இன்னொரு ஸ்வெட்டர் போட்டுக் கொண்டு விடுகிறேன். மஃப்ளர் இதோ கைப்பையிலேயே இருக் கிறது. கழுத்தில் சுற்றிக் கொண்டு விடுகிறேன்!"

"போதாது. இதையும் போட்டுக் கொள்ளும்!" என்று வழவழ வென்று பச்சை நிறத்தில் ஒரு ஜெர்கின்னைப் போட்டு கழுத்து வரை 'ஸிப்'பை இழுத்துவிட்டார். "கழுத்துப்பட்டையோடு குல்லா மாதிரி ஒன்று இருக்கிறது பாருங்கள், அதைத் தூக்கி, தலையை மூடிக் கொள்ளுங்கள். காதும் கவர் ஆகிவிடும்!"

மங்கோலியா போகும் ராம்குமார் இடையே புகுந்து, "ஒகே, நாளை நான் பெய்ஜிங்கிலிருந்து கிளம்பிவிடுவேன். முடிந்தால் இரவு ஓட்டலிலிருந்து பேசுகிறேன்!"என்று விடை பெற்றுச் சென்றார்.

"இது என்ன ஏர்போர்ட்டா, இந்திர லோகமா! மார்பில் தரையில் இப்படியா இழைப்பார்கள்!" பேச்சை திசை திருப்பி னேன்.

"பேசாதீர் நீர்! உங்கள் ஊர் மார்கழி மாதக் குளிர் என்று நினைத்தீர்களோ? அசாத்தியக் குளிர் இங்கே என்று இமெயி லில் எழுதியிருந்தேனே, படித்தீரா இல்லையா?" என்று அதட்டி னார் கோபால்.

வாயிலைத் தாண்டி வெளியே வந்ததும் ஊசி முனையால் குத்துவது மாதிரி குளிர் துளைத்தது. விரல்கள் தாளம் போட் டன.

வாயைத் திறந்தால் முதலில் புகைதான் வந்தது. அப்புறம் தான் பேச்சு!

டாக்சி வந்து எங்களருகே நின்றது.

பெட்டியோடு எங்களையும் திணித்துக் கொண்டோம். அப் பாடா! உள்ளே ஹீட்டர் வசதி இருந்ததோ பிழைத்தேனோ!

"ஹோட்டல் ஹார்பர் பிளாஸா!" என்றார் கோபால்.

"ஏர்போர்ட்டிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தூரம். பெய்ஜிங் நகரத்தைப் பாருங்கள்!"

நாலு மணிக்கே இப்படி. இருந்தால், இரவு எப்படி இருக் கும்!... என் கவலை எனக்கு.

அறைக்குப் போய் ஆசுவாசம் செய்து கொண்டு நாற்காலி யில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தபோது-

"இளம்புங்கள்! நான் முதலில் டியனான்மன் ஸ்கொயரைக் காண்பித்து விடுகிறேன். உட்கார்ந்திருந்தால் அப்படியே உட் கார்ந்திருக்க வேண்டியதுதான்!"

வெளியே இருக்கிற குளிரை நினைத்தால் உடம்பே நடுங்கி யது. டியனான்மன் ஸ்கொயராவது, போவதாவது!...

"நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே..."

"மணி என்ன தெரியுமா? இன்னும் ஆறுகூட ஆகவில்லை. இன்று இந்த இடத்தைப் பார்த்துவிட்டால், நாளை உங்களுக்குப் பார்க்க வேண்டிய இடங்களுக்கு டூரிஸ்ட் வேனில் சென்று கொள்ளலாம். நாளை நான் ஷாங்காய் போயாக வேண்டும்!" என்றார் கோபால்.

"ஐயையோ, என்ன இது!"

"ஆமாம் சுவாமி. நான் இங்கு வந்த வேலை முடிந்து விட்டது. நாளை உம்மை வேறு ஓட்டலில் விட்டுவிட்டு நான் என் வேலையை முடித்துக் கொண்டு, பிற்பகல் பிளேனைப் பிடித்து ஷாங்காய் போய்ச் சேர்ந்துவிடுவேன்!"

– அடுத்த வாரம்

பிரசார மேடை

இன்றைய நிலையில் கொள்கையற்ற அரசியல்தான் கட்சி பாகுபாடற்று நாட்டையே ஆட்டிப் படைக்கிறது. குறிப்பிட்ட கொள்கைகளைச் செயல்படுத்த ஏற்படுத்தப்படுகின்ற ஓர் அமைப்புதான் கட்சி என்பது. அந்தக் கொள்கைகளைச் செயல்படுத்த, தொடர்ந்து உழைப்பது, போராடுவதுதான் கட்சியின் வேலைத் திட்டமாக இருக்க வேண்டும். ஆனால் இன்று கட்சி அறிவிக்கும் கொள்கைகளுக்கும் செயல்களுக்கும் தொடர்பே இல்லாத நிலைதான் இருக்கிறது.

எந்த முறையைக் கையாண்டேனும் அதிக இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் கட்சிகளின் நோக்கமாகி விட்டது. அதனால்தான் சில கட்சிகள் எந்தக் கூட்டணி அதிக இடங்களை ஒதுக்குகிறதோ அவர்களோடு கூட்டு என

ஜி.ஏ.வடிவேலு

தலைவர்,

தமிழ்நாடு ஜனதா தளம் (எஸ்)

பகிரங்கமாகவே அறிவிக்கின்றன.

இந்திய அரசியலில் தேர்தல் கூட்டு என்பதனை முதல் முதலாக அறிவித்தவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன். காங்கிரஸ் மிருக பலத்துடன் நாட்டை ஆண்டபோது அதற்கு எதிர்ப்பே இல்லை என்ற நிலை நிலவியது. ஜனநாயகத்தைக் காக்க காங்கிரசுக்கு எதிராக வலிமையான எதிரணி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தம்முடைய சோஷலிஸ்ட் கட்சி கொள்கைக்கு ஓரளவு ஒத்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு காண வேண்டும் என்றார். அன்று இக்கருத்து நாட்டையே உலுக்கியது. ஆயினும் இத்தகைய கூட்டால் எதிர்க்கட்சிகள் கணிசமான இடங்களில் வெற்றி பெற்றன. காங்கிரசுக்கு எதிர்ப்பு வலுவாக ஏற்பட்டதால் அது சரியான பாதையில் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் எந்த ஒரு கட்சியும் தனியாகப் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது என்ற நிலை இப்போது உருவாகிவிட்டது. எல்லா கட்சிகளும் கூட்டுகளுக்கு அலைகின்றன. அதற்கு ஜனதா தளமும் விதிவிலக்கு அல்ல.

தமிழ்நாடு அரசியல் சூழ்நிலை வினோதமானது. ஆண்டாண்டு காலமாக மதவாதத்தை எதிர்த்துப் போரிட்ட பெரியார் மற்றும் அண்ணா வழியில் வந்த தி.மு.க. இன்று தலைகீழாக மாறிவிட்டது. தேர்தல் லாபத்திற்காகவும் மாநில ஆட்சிக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகவும் பாரதிய ஜனதாவுடன் இணைந்து விட்டது. அதனுடைய தவறுகளைக் கண்டும் காணாததுபோல் நடிக்கிறது.

ஆட்டிப் படைக்கும் ஜாதிப் பேயும் பணநாயகமும்!

போதாதற்கு, இன்று ஜாதிப்பேயும், பண பூதமும் தமிழக அரசியலைப் பிடித்தாட்டு கின்றன. ஜாதிக்கொரு இயக்கம். அதன் தலைவர்களோ, 100 தொகுதியில் செல் வாக்கு 150 தொகுதியில் செல்வாக்கு என்று பிரும்மாண்டமாகப் பேசிக் கொண் டிருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்களைக் கண்டு சில பெரிய கட்சிகளேகூட மிரண்டு போயிருக்கின்றன.

நாட்டின் மிகப் பெரிய நிமை மத

வெறியாகும். மதவெறியின் விளைவாக தேச பிதா காந்தியடிகள் உட்பட பல ஆயிரமாயிரம் மக்கள் பலியானது நாம் அறிந்ததே. எனவே, மீண்டும் இந்திய வரலாறு கறைபடியக் கூடாது என்பதற் காக ஜனதா தளம் மதச் சார்பற்ற கூட் டணியுடன் இணைந்து, வரும் சட்டமன்ற தேர்தலைச் சந்திக்கும்.

தி.மு.க. அரசு, சமத்துவபுரம், உழவர் சந்தை போன்ற சில சாதனைகளைப் படைத்திருந்தாலும், அது புரிந்த மக்கள் விரோதச் செயல்கள் பற்பல. குறிப்பாக அடித்தள மக்களின் வாழ்வு உயர அது செய்த பணிகள் மிகக் குறைவு.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளெல்லாம் காற்றில் பறந்து விட்டன. ஆண்டாண்டு காலமாக தாழ்த் தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மலை வாழ் மக்கள் பெற்ற ஒரே விஷயம் இட ஒதுக்கீடு. அதனை ஒழித்துக்கட்ட பாரதிய ஜனதா நிட்டமிடுகிறது. பொதுத்துறை நிறுவனங் களை எல்லாம் தனியார் மயமாக்குகிறது. அதற்குத் துணை போகிறது தமிழக அரசு. தாழ்த்தப்பட்ட, மலை வாழ் மக்கள் அரசுப் பணிகளில் இடம் பெற வழிவகை செய்த ஆணையை, அரசு ரத்து செய்துவிட்டது. ஆண்டு வருமானம் ரூ.50,000 உள்ள வருக்கே கல்வி பயில கடன் என அறி வித்ததன் மூலம், ஏழை மக்கள் படிக்காமல் இருக்க வழி செய்துவிட்டது. எனவேதான், தமிழகத்தில் தி.மு.க. அரசை ஆட்சி பீடத்திலிருந்து இறக்க வேண்டும் என்று ஜனதா தளம் கருதுகிறது.

அடித்தளத்திலுள்ள மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீங்கி, எல்லோரும் எல்லா நலன்களும் பெற்று சரி நிகர் சமமாக வாழ வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்.

நாட்டில் மதவாதத்திற்கும், வகுப்பு வாதத்திற்கும் இடம் இருக்கக்கூடாது. அனைவருக்கும் வேலை, உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் முதலியவை அளிக்கப்பட வேண்டும். நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பாகமுள்ள விவசாயிகளின் வாழ்வில் வளம் ஏற்படுத்த வேண்டும். பயிர் இன்சூரன்ஸ், உரம், விதைகளுக்கு மானியம், விளைச்சலுக்குக் கட்டுபடியாகும் விலை முதலியவற்றை விவசாயிகள் பெற வேண்டும். அனை வருக்கும் வேலை, சிறு தொழில் வளர்ச்சி முதலியவற்றை முன் வைத்து, வரும் சட்டமன்றத் தேர்தலை மதச்சார்பற்ற ஜனதாதளம் சந்திக்கும்.

இந்தத் தேர்தலில் முப்பது தொகுதி களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் போட்டியிட கட்சி திட்டமிட்டுச் செயல் பட்டு வருகிறது. வரும் தேர்தலில் தமிழகத் தில் அனைத்து மக்களும் இன்புற்று வாழும் நல்லதோர் ஆட்சி அமையும். மத வெறியர்களுக்குத் தமிழக மண்ணில் என் றுமே இடமில்லை என்பது நிரூபிக்கப்படும்.

படம் : ராஜன்

NEW YEAR & PONGAL GREETINGS TO ALL OUR VALUED CUSTOMERS



BRING THIS ADVERTISEMENT AND GET 10% EXTRA DISCOUNT

DEALERS IN: HYDERABAD PEARLS (BLACK, PINK, WHITE, ROUND, MIKIMOTO, OVEL, BUTTON, RICE)**REAL ITALIAN CORELS**(ROUND, OVEL, PINK, THALI, FLOWERS, TUBE)**CHINA JADE MALAS, REAL RUBY, EMERALD, SAFFIRE, CUT AND ROUND MALAS, NAVARATNA STONES AND MALAS, LUCKY BIRTH STONES, AMERICAN DIAMOND SILVER JEWELLERY** (BANGLES, TOPS, RINGS, NECKLACE SETS, PENDANT SETS, CHOKER, BRACELETS, RANIHAR SETS, SHAJAHAW SETS, LONG HARAMS), **GOLD RUBY, EMERALD NECKLACE SETS, ONE GRAM AND TWO GRAMS GOLD BANGLES, ANTIQUE IMPORTED 40 COLOUR BEEDS, PEARLS AND GEM WATCHES, SEMI-PRECIOUS STONE MALAS** (GARNET, JADE)

CHUDDIHAR, DRESSMATERIAL, SALWAR KHAMEEZ, GAGRA, MIDI, TOPS, NIGHTIES.

EACH PURCHASER WILL GET FREE ASTROLOGICAL ADVICE.

ALL MASTER, VISA, DINERS CARDS ACCEPTED.
SPECIAL DISCOUNT FOR ALL CREDIT CARD HOLDERS

SPECIAL OFFER AVAILABLE FROM 1.1.2001 TO 31.1.2001

PURCHASE AMOUNT	SPECIAL GIFT
Rs.250/-	ONE CORAL(P) GANESH
Rs.500/-	GUN METAL DRISTI RING
Rs.1000/-	ONE THALI CORAL
Rs.1500/-	AMERICAN DIAMOND SILVER RING
Rs.2500/-	NAVARATNAN STONE SET WITH AD
Rs.5000/- AND ABOVE	REAL CHINA JADE MALA PAIR OF CHINA JADES FOR STUD

ADDITIONAL OFFER : 10% FREE MEMBERSHIP DISCOUNT (5 YEARS VALID) CARD FOR EACH AND EVERY PURCHASER.

LAXMI MUTHU MAALIGAI

SHOP No.8, KASI ARCADE,
GROUND FLOOR,
THYAGARAYA ROAD, T. NAGAR,
CHENNAI -17 Ph: 8220856

SRI SARAVANA MUTTHU MAALIGAI

157/203, RK MUTT ROAD, MANDEIVELI,
CHENNAI. Ph:4617499, 4617655

ஜெயசந்திரன் டெக்ஸ்டைல்ஸின் இனிய புத்தாண்டு
மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

காஞ்சிபுரம் முகூர்த்தப்
பட்டுப்புடவைகளுக்கு தனிப்பிரிவு
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தரம்! ரகம்! பிரமாண்டம்!

ரெடிமேட்
ஆடைகளின்
சங்கமம்

ஞாயிறு
விற்பனை
உண்டு

ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

27, ரங்கனாதன் தெரு
(மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்)
தி.நகர், சென்னை – 600 017.
போன்: 4339971 / 4334660

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

இனிப்பு புடவைகள், இனிப்பு வேஷ்டிகள்

பரிசளிக்க புதுமையானவை!
சீர்வரிசைக்கு சிறப்பானவை!
ரசிக்கலாம்! ருசிக்கலாம்!



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

5, டாக்டர் சிங்காரவேலு வீதி, பாண்டி பஜார், சென்னை-17, போன்: 4343605

4, காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை-20, போன்: 4413805

பஜாஜ் காலிபர் (4 ஸ்ட்ரோக்)

+ திடமான வண்டி., ஸ்திரமான பாலன்ஸ்
+ ஆகப் பெரிய பெட்ரோல் டாங்க்-14.8.லி (ஒரு தடவை யாவது முழு 'டாங்க்'கை ரொப்ப துட்டு சேருமுங்களா?)
+ அகலமான டயர்கள், ரோடு-கிரிப் 'ஒஹோ'
+ உயரமான ஹாண்டில் பார், கூன் போடத் தேவையில்லை

— மைலேஜ் சுமார்

எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ 41, 538/-

பஜாஜ் M80 (2 ஸ்ட்ரோக்)

+ சூப்பர் மைலேஜ், 60 கி.மீ./லி
+ கரடு முரடு ரோடுகளுக்காகவே வடிவமைக்கப்பட்டது (நல்ல ரோட்டிலும் ஓடுமில்லீங்களா?)

— சுமாரான பிக்-அப்

எக்ஸ்-ஷோரூம் விலை: ரூ. 21,363

காலேஜ் டூ - வீலர்கள் - 7&8

தொகுப்பு: சிதம்பரம்

அட்டை, படங்கள் (டிஜிட்டல்): உத்ரா

மாடல்கள்: லதா, சுதா, அனுசுயா, ஷோபிகா, அபிராமி, அர்ச்சனா, கண்ணன், மகேஷ், குஹேந்திரன், கணேஷ், கிருஷ்ணகுமார், ஆதித்யா

1

கிழக்குத் திசை ரங்கோலி கோலம் போட்டுப் பழகிக் கொண்டிருக்க, பாதி நறுக்கிய சிம்லா ஆப்பிளாய் அந்த வெள்ளிக் கிழமை சூரியன்.

வைகறை இருட்டு இன்னமும் ஒரு இருபது சதவீதம் பாக்கியிருந்தது. ஐஸ்வர்யா காலனியில் இருந்த எல்லா மரங்களிலும் பறவைகள் சம்பாஷித்துக் கொண்டிருக்க, பூஜையறையிலிருந்து வெளிப்பட்டாள் யமுனா. ஈரக் கூந்தலில் சுற்றியிருந்த டவலும், நெற்றிக்கு இட்டிருந்த குங்குமமும் அவளுடைய வழக்கமான அழகை அதிகப் படுத்தியிருந்தது.

ஹாலைக் கடக்கும் போது பக்கத்து அறையிலிருந்து ஹரிதா வெளிப்பட்டாள். ஹரிதா யமுனாவின் கணவன் அகிலின் இரண்டாவது தங்கை. பி.எஸ்.ஸி., கணக்கில் முதல் வருடம்.

"அண்ணி..."

யமுனா புன்னகையோடு நின்றாள்.

"என்ன...?"

"ஏதோ ஒரு ஸ்லோகத்தை ஒன்பது தடவை சொல்லிட்டுப் பாடத்தைப் படிச்சா படிச்ச தெல்லாம் மனசுக்குள்ள அச்சு வெல்லம் மாதிரி பதியும்ன்னு சொன்னீங்களே...! அது என்ன ஸ்லோகம்...?"

''போன வாரம்தானே சொல்லிக் கொடுத்தேன்."

"ஸாரி அண்ணி!

...ஜே டிஸ்னி

மூடுபனி நிலவு

மறந்துட்டேன்..."

"எந்த சினிமா பாட்டையாவது இப்படி மறந்திருக்கியா? தூக்கத்துல எழுப்பி கேட்டாலும் வரி பிச காமே பாடுவியே!"

"இந்த ஒரு தடவை மட்டும்... சொல்லிக் குடுங்க அண்ணி. இனி மறக்கவே மாட்டேன்..."

தன் இடதுகையின் ஆட்காட்டி விரலை உயர்த்தினாள் யமுனா.

"நல்லா கேட்டுக்கோ. இன்னொரு தடவை கேட்டா சொல்ல மாட்டேன். யாதேவீ ஸர்வ பூதேஷு வித்யா ரூபேண ஸமஸ்திதா நமஸ்தஸ்யை... நமஸ்தஸ்யை... நமஸ்தஸ்யை நமோ நம..."

ஹரிதா மலர்ந்தாள். "இப்ப ஞாபகம் வந்திடுச்சு... சொல்லிக் காட்டட்டுமா அண்ணி..."

"குளிச்சியா?"

"இல்ல..."

"குளிக்காமே ஸ்லோகம் சொல்லக் கூடாது. ஹீட்டர்ல வெந்நீர் பாய்லிங் ஸ்டேஜ்ல இருக்கு. போய்க் குளி. சௌம்யா எந்திரிச்சுட்டாளா...?"

"இல்லேண்ணி. எழுப்பி விட்டேன். அடிக்க வர்றா. குளிருதாம். என்னோட போர் வையையும் இழுத்துப் போர்த்திக்கிட்டுத் தூங்கறா..."

"சரி... நீ போய்க் குளி. அவளை நான் ஹேண்டில் பண்ணிக்கறேன்..."

யமுனா சமையலறைக்குப் போகும் எண் ணத்தை மாற்றிக் கொண்டு சௌம்யாவின் அறையை நோக்கிப் போனாள்.

சௌம்யா ஹரிதாவுக்கு அக்கா. போன வருடம் பி.எஸ்.ஸி., ஹோம்சயின்ஸ் முடித் தவள். அடுத்த மாதம் இருபத்தி மூணாம் தேதி ராணி மெய்யம்மை ஹாலில் கல்யாணத்தை முடித்துக் கொண்டு கணவனோடு ஒஹையோ பறக்கக் காத்து இருப்பவள். கொஞ்சம் சோம்பேறி.

போர்வைக்குள் ஒரு புஷ்ப மூட்டையைப் போல் தூங்கிக் கொண்டிருந்த சௌம்யாவுக்கு முன்பாய் வந்து நின்றாள் யமுனா.

"சௌம்யா..."

"....."

"சௌ....ம்....யா..."

"ம்..."

"என்ன 'வுட்பி'யோடு டூயட் பாடிக்கிட்டு இருக்கியா...? எல்லாம் அடுத்த மாசம் ஒஹையோவுக்குப் போய்ப் பாடலாம். எந்திரி."

போர்வைக்குள்ளிருந்து குரல் வந்தது.

"ப்ளீஸ் அண்ணி... இன்னும் பத்தே பத்து நிமிஷம்..."

"நோ... நோ... ஆறு மணிக்கு மேல் ஒரு பெண் படுக்கையில் இருக்கக் கூடாது. எந்திரி... எந்திரி..."

"அஞ்சே அஞ்சு நிமிஷம் அண்ணி..."

"சரி...! அஞ்சு நிமிஷம் டயம் தர்றேன். அதுக்குள்ளே நீ எந்திரிச்சு உட்கார்ந் திருக்கணும். இல்லேன்னா ப்ரிஜ்ஜிலிருந்து ஒரு பாட்டில் ஐஸ் வாட்டரைக் கொண்டு வந்து உன் தலையில்..."

"அய்யோ... வேண்டாம்ண்ணி... நான் இப்பவே எந்திரிச்சு உட்கார்ந்துடறேன்..." போர்வை தாறுமாறாய் விலக, அந்த அழகான சௌம்யா எழுந்து உட்கார்ந்து கொட் டாவியைப் புறங்கையால் அடக்கினாள். மரு தாணியில் குளித்த நுனி விரல்கள் தீப்பற்றிக் கொண்ட மாதிரி ஜொலித்தன.

"அண்ணி! காப்பி..."

"போய்ப் பல்லைத் தேய்..."

"நீங்க எனக்கு அண்ணியில்லை. மாமியார்."

"அப்படியே இருக்கட்டும். பல்லைத் தேய்க்காமே இந்த வீட்ல யாருக்கும் காப்பி கிடையாது."

"பொய்க் கோபத்தோடு தரையை உதைத்துக் கொண்டு எழுந்த சௌம்யா அட் டாச்சுட் பாத்ரூமை நோக்கிப் போக, யமுனா குரல் கொடுத்தாள்.

"நில்லு...!"

சலிப்போடு திரும்பினாள் சௌம்யா.

ராஜேஷ்குமார்

"என்னண்ணி...?"

"போர்வையை மடிச்சு வெச்சுட்டுப் போ! இதை மடிக்கிறதுக்காக ஒஹையோவிலிருந்து மாப்பின்ளையை வரவழைக்க முடியுமா என்ன...?"

சௌம்யா தன் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு முறைக்க, கண்ணைச் சிமிட்டி விட்டு அறையினின்றும் வெளிப்பட்டாள்.

ஹால் சோபாவில் மாமனார் சிவப்பிரகாசம் தெரிந்தார். பட்டு வேட்டி, பட்டுச் சட்டை, தோளில் மினுமினுப்பாய்ப் புரளும் அங்கவஸ்திரம்.

குரல்கொடுத்தார்.

"அம்மா... யமுனா..."

"மாமா..." சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு பவ்யமாய் பக்கத்தில் போய் நின்றான். அவர் புன்னகையோடு ஏறிட்டார்.

"இன்னிக்கு பகுளதசமி சித்தயோகம். ரொம்ப நல்ல நாள்ன்னு ஜெகந்நாத ஸ்வாமிகள் எனக்கு ஃபோன் பண்ணிச் சொன்னார். சௌம்யாவோட கல்யாணப் பத்திரிகைகளை நீ லலிதாம்பிகை கோயிலுக்குக் கொண்டு போய் அம்மன் பாதத்துல வெச்சு பூஜை பண்ணிட்டு வந்துட்டா இன்னிக்குப் பன்னிரண்டு மணிக்கு மேல இன்விடேஷன் கொடுக்க ஆரம்பிச்சுடலாம்."

"நேத்திக்கு ராத்திரியே நீங்க சொன்னீங்க மாமா."

"நானும் அத்தையும் இப்ப இளம் பறோம். கார் டிரைவர் மாணிக்கம் வந்தாச்சாம்மா...?"

"அஞ்சரை மணிக்கே வந்து காரைக் குளிப்பாட்டி துடைச்சும் வெச்சாச்சு..."

"அந்த இன்விடேஷன் பண்டலை எங்கேம்மா வெச்சிருக்கே...?"

"பூஜை ரூம்ல..."

"நீயே எடுத்துட்டுப் போய் கார்ல வையம்மா..."

"சரிங்க மாமா..." தலையாட்டிய யமுனா பூஜையறைக்குப் போய் இன்விடேஷன் பண்டலை எடுத்துக் கொண்டு வெளியே வர அத்தை திலகவதி பூக்கூடையோடு வெளிப்பட்டாள். திலகவதியின் நோஞ்சலான உடம்பை, ஜரிகை தகதகக்கும் ஒரு கனமான பட்டுப் புடைவை போர்த்தியிருந்தது. மஞ்சள் பூசிக் குளித்த முகத்தில் காலைச் சூரியனாய் பிரிறடிக்காத குங்குமப் பொட்டு.

"யமுனா..." தோளில் கை வைத்தாள்.

"என்ன அத்தே...?"

"இன்விடேஷன் பண்டலை கார்க்குள்ளே வெச்சுட்டு வெளியே போய் காம்பவுண்ட் கேட் பக்கமா நில்லு. கார் புறப்பட்டுப் போகும் போது எதிர்ல வா..."

"சரிங்கத்தே..."

"வாசல்ல கோலம் போட்டிருக்கியா?"

"பெரிய மாக்கோலமாவே போட்டிருக்கேன். திருவிளக்குக் கோலம்..."

"பார்த்தீங்களா என் மருமகளை...?"

"நம்ம மருமகளைன்னு சொல்லு...." சிவப்பிரகாசம் சொல்லிவிட்டுச் சிரிக்க, பூரிப்பில் இலேசாகிப் போன மனத்தோடு வாசலை நோக்கிப் போனாள். போர்டிகோவில் மில்க் ஒயிட் அம்பாஸிடர் கார் பளபளப்பாய் நின்று கொண்டிருக்க அதை இன்னமும் தன் கையில் வைத்திருந்த மஞ்சள் பாலீஷ் துணியால் தேய்த்துக் கொண்டிருந்தார் ஐம்பத்தைந்து வயது டிரைவர் மாணிக்கம். இந்த வீட்டின் ஒரு அங்கமான அவருக்கு முப்பது வருஷ சர்வீஸ்.

"மாணிக்கம்! காரோட பேக் டோரை ஓப்பன் பண்ணுங்க..."

அவர் பாலீஷ் துணியைத் தோளில் போட்டுக் கொண்டு காரின் பின்பக்கக் கத

வைத் திறந்து வைக்க, யமுனா இன்விடேஷன் பண்டலை காருக்குள் வைத்துவிட்டு ஐம்பதடி தூரத்தில் இருந்த காம்பவுண்ட் கேட்டை நோக்கிப் போனாள்.

கிழக்கில் சூரியன் முழுவதுமாய் எழுந்து மரத்துக்குப் பின்னால் மறைந்திருக்க, எல்லாப் பக்கமும் காரட் நிற வெளிச்சம். காற்றுக்குள் ஏ.ஸி. குளிர் ஊடுருவியிருக்க சுவாசிக்கும் போது ஒரு சுகம் தெரிந்தது.

"குட்மார்னிங் மகாலட்சுமி..."

தன் முதுகுக்குப் பின்னால் குரல் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தாள் யமுனா.

ஜாக்கிங் சூட்டோடு அவள் கண்வன் அகில். முகத்தில் எண்ணெய்ப் பூசியது போல் வியர்வை. காற்றில், அடர்த்தியான கேசம் சிலும்பியிருந்தது.

கணவனைச் சிரிப்போடு பார்த்தாள் யமுனா. "இன்னிக்கு எள்ள திஹர்னு மகாலட்சுமி...?"

"உன்னைப் பார்த்ததும் காலண்டர்ல எப்பவோ பார்த்த மகாலட்சுமியோட ஞாபகம் வந்துட்டது. இந்தச் சேலையில நீ எப்படி இருக்கே தெரியுமா...?"

"வழியாமே உள்ளே போங்க! மாமாவும் அத்தையும் லலிதாம்பிகை கோயிலுக்குப் புறப்பட்டுப் போக வந்துக்கிட்டு இருக்காங்க. அவங்க போர்டிகோவிலிருந்து கார்ல வரும் போது நான் எதிர்ல போகணும்..."

"போற போக்கைப் பார்த்தா உனக்கு கோயிலே கட்டிடுவாங்க போலிருக்கு..." நோகாமல் தலையில் அடித்து சிரித்துக் கொண்டே உள்ளே போனான் அகில்.

போர்டிகோவிலிருந்து மெள்ள ஊர்ந்த கார் காம்பவுண்ட் கேட்டை நோக்கி வர, எதிரே போனாள் யமுனா. நிலவரம் வெளியே தலை நீட்டிச் சொன்னாள்.

"ஒரு மணி நேரத்துக்குள்ளே வந்துடுவோம். கேட்டைச் சாத்திக்கோம்மா..."

கார் கேட்டைக் கடந்து போக்குவரத்து இல்லாத சாலையில் வேகம் எடுத்ததும் காரையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு கேட்டைச் சாத்த முயன்றாள்.

பக்கவாட்டில் குரல் கேட்டது.

"ஒரு நிமிஷம்..."

திரும்பினாள்.

அந்த நபர் நின்றிருந்தார். நாற்பது வயது. ஒட்ட வெட்டிய க்ராப். வெள்ளை பேண்ட். வெள்ளை சர்ட். மேலுதட்டில் கெட்டியான மீசை.

அவரைக் குழப்பமாய்ப் பார்த்தாள் யமுனா.

"என்ன...?"

"உங்கிட்ட ஒரு ரெண்டு நிமிஷம் பேசணும்."

"எ... என்ன... வி... விஷயமா...?"

"நான் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். பேர் பால்பாண்டியன்...! இதோ... என் உத்தியோக அட்டை..."

அவர் காட்டிய அடையாள அட்டையைப் பயமாய்ப் பார்த்த யமுனா உலர்ந்து போன குரலில் கேட்டாள்.

"எ... என்கிட்ட என்ன பேசணும்...?"

"மொதல்ல இந்தப் போட்டோவைப் பாருங்க.."

பால்பாண்டியன் கையில் வைத்திருந்த பாலிதீன் கவர் ஒன்றைப் பிரித்து உள்ளேயிருந்த அந்த போட்டோவை உருவி யமுனாவிடம் கொடுத்தார்.

"இந்த போட்டோவில் இருக்கிறது நீங்கதானே?"

யமுனா அந்தப் போட்டோவை வாங்கினான். போட்டோவின் முன்னாலும் பின்னாலும் நிற்றல்

தீற்றலாய் ரத்தக் கறைகள். அந்த ரத்தக் கறைகளுக்கு நடுவில் யமுனாவின் முகம்!

"ஹாய்... வருண்...!"

ரெஸ்டாரண்ட் வாசலில் காத்திருந்த ஜெனீபர் தன் ரோஜா நிற ஈறுகள் தெரிய சிரித்து எதிர்ப்புற பஸ்ஸினின்றும் இறங்கிய இளைஞனைப் பார்த்துக் கையசைத்தாள். பதிலுக்குச் சிரித்து கையை ஆட்டிக் கொண்டே ஜீப்ரா வெள்ளைக் கோடுகளில் ரோட்டை க்ராஸ் செய்த அந்த வருணுக்கு முப்பது வயது இருக்கலாம். ட்ரிம் செய்த தாடி. இரண்டு பக்க கிருதாக்களோடு கச்சிதமாய் இணைத்திருந்தது. கையில் ஒரு ப்ரீப்கேஸ்.

ஜெனீபரை நெருங்கிய வருண், "ஸாரி... ஜெனீ...! கொஞ்சம் லேட்டாயிடுச்சு. பஸ் ஒரு ஜாதிக்கட்சி ஊர்வலத்துல மாட்டிக்கிச்சு" - அவன் விட்ட மூச்சுக் காற்றில் வாசனை பாக்கு மணத்தது.

ஜெனீபர் தலையைச் சாய்த்து தன் அழகான கண்களால் முறைத்தாள்.

"என்ன! சிகரெட் பிடிச்சியா?"

"இல்லையே...!"

"பின்னே எதுக்காக வாசனைப் பாக்கை போட்டிருக்கே?"

"ஸ்மோக் பண்ற இன்டென்ஷன் வந்தது. அதை அவாய்ட் பண்றதுக்காக வாசனைப் பாக்கைப் போட்டுக்கிட்டேன்."

"இது பொய் இல்லையே..."

"அக்மார்க் உண்மை."

"ஜீசஸ் பேர் சொல்லி சத்தியம் பண்ணு..."

வருண் நெஞ்சில் சிலுவைக் குறி போட்டு தலையை அண்ணாந்தான்.

"பர மண்டலத்தில் இருக்கும் ஜெனீபரின் பிதாவே நான் சொன்னது சத்தியம்."

"சரி... போன காரியம் என்னாச்சு...?"

"இன்டர்வ்யூதானே...?"

"ஆமா..."

"வா... ரெஸ்டாரெண்ட்டுக்குப் போயிடுவோம்."

"சஸ்பென்ஸ் வைக்காதே... காயா... பழமா...?"

"பூ..."

"குழப்பாதே வருண்..."

"என்னோட முகத்தைப் படி...! ரிசல்ட் தெரியும்."

"வந்ததுமே படிச்சுட்டேன். உன்னோட நாடி எல்லா உணர்ச்சிகளையும் ஃபில்டர் பண்ணித்தானே கொடுக்குது. மொதல்ல இந்தத் தாடியை எடு..."

ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழைந்தார்கள். கும்பல் இல்லாத பிற்பகல் நேரம் அது. பெரியவர் ஒருவர் பூந்தி தெளித்திருந்தத் தயிர் வடையை ஸ்பூனால் துண்டாடிக் கொண்டிருந்தார். இரண்டு கல்லூரி மாணவிகள் பெப்ஸியை உறிஞ்சி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

வருணும் ஜெனீபரும் மூலையோர மேஜை நோக்கிப் போய்ப் பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள்.

"என்ன ஆர்டர் பண்ணட்டும்?"

"மொதல்ல எனக்கு வேண்டியது ரிசல்ட். இன்டர்வ்யூ என்னாச்சு...?"

புன்னகையுடன் ப்ரீப்கேஸை அவள் பக்கமாய் நகர்த்தினான் வருண்.

"ஓப்பன் இட்..."

"என்ன இருக்கு இதுல..."

"அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர்..."

"ரியலி...?"

"ம்... திறந்து பாரு..."

ஜெனீபர் ப்ரீப்கேஸின் லாக்கர்களை விடுவித்து திறந்தாள்.

உள்ளே -

ஒரு பிஸ்டல்.

மெட்டாலிக் உடம்போடு - ஒருக்களித்து படுத்திருந்தது.

(தொடரும்)

"எந்த நம்பிக்கையில வீரப்பனைப் பிடிக்க காட்டுக்குப் போறீங்க..."

"போறவங்க வர்றவங்களெல்லாம் வீரப்பன் ரொம்ப நல்லவன். மனிதாபிமானம் மிக்கவன்னு சொல்றாங்க. அதை வைத்துதான்!"

— கருப்பம்புலம் சித்திரவேலு

புகழ் பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம. பத்மநாபன்

எனது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி

பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் பத்மநாபன்) காழியூர் ஸ்ரீனிவாச் சாரியாரின் மூத்த புதல்வரும், ஜோதிஷ மந்திர சாஸ்த்திரங்களில் 45 வருடங் களுக்கு மேலாக நன்கு தேர்ச்சியும், ஆசீர்வாதமும், பெற்றவரால் மகத்தான சக்தி வாய்ந்த, யந்திரங்கள், சக்கரங்கள் (வெள்ளியில் தயாரிக்கப்படுகின்றன) மகாலக்ஷ்மி கவசம் ரூ.275/- மகா சுதர்சன யந்திரம் ரூ.275/- லக்ஷ்மி நரசிம்ம கவசம் ரூ.375/- தனாகர்ஷண யந்திரம் ரூ.375/- மகா சுதர்சன சக்கரம் ரூ.700/- மஹாலக்ஷ்மி சக்கரம் ரூ.700/- இவை தவிர அநேக விதமான யந்திரங் களும், கவசங்களும், (விசேஷ பூஜாக்ரமப்படிக்கு) தயாரித்து அனுப்பப்படும். வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை டி.டி. மூலம் அனுப்ப வேண் டும்.தபால் செலவு ரூ.100/- B.P.O. மூலம் அனுப்பி பெறலாம்.

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழ்/ஆங்கிலம் ரூ.75/- ஜாதகத்தின் பொதுப் பலன்கள் நேரில் சொல்வதற்கு ரூ.100/- ஆயுள் பலன் (வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர்) ரூ.300/- சாதாரண தபால் மூலம் அனுப்ப ரூ.25/- பதிவுத் தபால் மூலம் அனுப்ப ரூ.30/- நேரில் சந்திக்க: **காலை 8 மணி முதல் 11 மணி வரை**

பிரபல ஜோதிஷர்

பண்டித காழியூர் பத்மநாபன்

'தபோநிதி'

நெ. 5. வித்யோதயா முதல் மெயின் தெரு

த.பெ. எண்: 1411, தி. நகர் சென்னை - 600 017. போன் : 8263814

தென் இந்தியா (கிளைகள் ஏதும் கிடையாது)

முக்கிய கவனிப்பு: தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம இரகசியமாக வைக்கப்படுகின்றன. வீட்டில் கிரகதோஷம் மற்றும் எந்த தோஷங்களும் பாதிக்காமலிருப்பதற்கு, சுதர்சன ஹோமம், மகா சுதர்சன சக்கரம் பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டுமே செய்யப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

சில்ப கலாக்ஷேத்திரம் - சென்னை

சுவாமி மலையில் ஆகம விதிப்படி தயாரான

பஞ்சலோக விக்ரஹங்கள் ஷோரூம் & விற்பனை பிரிவு

எமது குபேரன் சிற்ப கலைக்கூடத்தின் சார்பு நிறுவனமான சில்ப கலாக்ஷேத்திரத்தின் மூலம் தயாரான பஞ்சலோக விக்ரஹங்களின் ஷோரூம் மற்றும் விற்பனை பிரிவினை சென்னை, தி.நகர், 29, கண்ணதாசன் தெரு, திருப்பதி தேவஸ்தான தகவல் மையம் அருகில் இயங்கி வருகிறது. ஃபோன் : 4344216.

தங்களது வீட்டுப் பூஜைக்கு தேவையான பஞ்சலோக விக்ரஹங்கள் மற்றும் ஆலயத்திற்கு தேவையான விக்ரஹங்கள், திருவாட்சிகள், தங்கம், வெள்ளி ரதங்கள், கவசங்கள் மற்றும் கலசங்கள் அனைத்தும் ஆகம விதிப்படி செய்து தரப்படும்.

ஸ்ரீமதி சுகந்தி சேஷாத்திரி
விற்பனை மேலாளர்
ஸ்ரீ V.S. பாலசுப்ரமணி
விற்பனை & பொது ஜன தொடர்பாளர்,
போன் : 4344216 & 2312043.

S. கருணாநிதி ஸ்தபதி & சன்ஸ்
குபேரன் சிற்ப கலைக்கூடம்.
11, ராஜ வீதி, சுவாமிமலை – 612 302.
போன் : 0435 – 54464, Fax: 0435 - 54644,
Mobile: 098424 - 54464

• திருவையாறு தியாகராஜ ஆராதனை விழாவில் எங்களது ஸ்டாலில் விஜயம் செய்யுங்கள்.

VSB/KK/2001/2

KALKI SHOPPING PAGE

கோலம் முதல் கூட்டு சாதம் வரை

தங்கள்
அன்பு மகள் திருமணத்திற்கு
கவையான உயர்தர
சாப்பாடு டிபன்
வேளாவேளைக்கு காபி,
வைதீக ஏற்பாடுகள், பூ மாலை,
நாதஸ்வரம், பச்சபுடி சாமான்கள்,
சீர் பகூணங்கள்,
தாம்பூல வகையறா,
நிச்சயதார்த்தம்
பழ தட்டுகள்,

சபைக்கு தேவையான அனைத்தும்
காண்டிராக்ட் முறையில் செய்து தர அணுகவும்

S.R. RAGAVAN
SRI SAI MARRIAGE SERVICES
No.28, (Old No.35), TAYLORS ESTATE, II ST,
KODAMBAKKAM, CHENNAI 600 024.
Ph: 4840914, Mobile: 98400 40914

email: ragavan@rocketmail.Com

We undertake Catering for smaller function also

திருமண ஏற்பாடுகளை எங்களிடம் விட்டு விடுங்கள்!

சாப்பாடு, டிபன்,
காபி, சீர்வரிசைகள்,
பகூண வகைகள், புஷ்பம்,
மேளம், இன்னிசை
மற்றும் சகல விதமான
திருமண ஏற்பாடுகளையும்
காண்ட்ராக்ட் முறையில்
சிக்கனமாகவும் சிறப்பாகவும்
செய்து தர காத்திருக்கிறோம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

JEEKAY CATERING CONTRACTORS
G. கிட்டப்பா
No 5, IInd Main Road,
Flat No 10, P.A. Apartments,
Kasturiba Nagar,
Adyar, Chennai - 20.
Ph: 4404960

Delhi | Bombay | Calcutta

Yes! Yes! Yes!

We stock the very latest

CHURIDARS

from the topmost manufacturers of

Delhi - Mumbai - Calcutta

- Select from more than 2000 Churidars.
- Medium - Large - XL sizes
- Price range Rs. 250 to Rs. 2,500
- Free alterations done

134, R.H. Road,
Luz Corner. Ph: 4982347

Also: Gagra Choli - skirts - tops - Jeans - Corgos - Dungarees - Capris

SHOP ON SUNDAYS TILL PONGAL

Bring this advt and get free gift on purchases

கணக்கே இல்லாத கம்ப்யூட்டர் இன்ஸ்டிடியூட் விளம்பரங்கள்; விதவிதமான கோர்ஸ்களைப் பற்றிய தகவல்கள்; கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்து விட்டால் ஐந்து இலக்கு சம்பளம் கைக்கெட்டும் தூரம் தான் என்ற கனவு...

கம்ப்யூட்டர் மாணவர்கள் என்ன கோர்ஸ் படிக்க வேண்டும்?

– கே. ஜெயராம கிருஷ்ணன்

இந்தச் சூழலில் என்ன கோர்ஸ் படிக்க வேண்டும், எப்போது படிக்க வேண்டும், ஒரு நல்ல வேலை கிடைப்பதற்கு கோர்ஸை நன்றாகப் படித்தால் மட்டுமே போதுமா... இப்படி பல கேள்விகளுக்குச் சரியான விடை தெரியாமல் குழம்புகிறான் இன்றைய மாணவன், பாவம்!

முதலில் நாம் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸை நன்றாகப் படித்து முடித்துவிட்டால் ஒரு தரமான கம்ப்யூட்டர் ப்ரொஃபெஷனலாக வந்து விட முடியும் என்பது முற்றிலும் தவறு.

ஒரு கம்ப்யூட்டர் ப்ரொஃபெஷனுக்கு என்று சில அடிப்படை தகுதிகள் இருக்கின்றன, கம்ப்யூட்டர் அறிவைத் தவிர. அவை நம்மிடம் உள்ளதா என்று ஒரு மாணவன் தன்னைத் தானே கேட்டுக் கொள்ள வேண்டும்.

முதல் தகுதி: எப்படி என்ஜினியரிங் கோர்ஸ் படிக்க வேண்டும் என்றால் மாத்ஸ் அறிவு வேண்டுமோ, அதுபோல ஒரு கம்ப்யூட்டர் ப்ரொஃபெஷனலாக வர நினைக்கும் மாணவனுக்கு அடிப்படை என்ஜினியரிங் சென்ஸ் வேண்டும். அதாவது

டாடா கன்சல்டன்ஸி சர்வீஸஸ் கே. ஜெயராம கிருஷ்ணன் சொல்கிறார்...

என்ஜினியரிங் கோர்ஸ் படித்தே ஆக வேண்டும் என்பது அல்ல விஷயம் – என்ஜினியரிங் flair இருத்தல் அவசியம். இதை எப்படி நான் இவ்வளவு திட்டவட்டமாகச் சொல்கிறேன் என்கிறீர்களா?

எங்களிடம் வேலை செய்யும் ப்ரோக்ராமர்களை எடுத்துக் கொள்ளுங்கள். என்ஜினியரிங் படித்துவிட்டு வந்தவர்களும் இருக்கிறார்கள், மற்ற கோர்ஸ்கள் படித்துவிட்டு வந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இரு தரப்பினரின் வேலையில் இருக்கும் வித்தியாசம் இருக்கிறதே, அது மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம். அதற்குக் காரணம் சொல்கிறேன்.

ஒரு பொருளைப் பல பாகங்களாகப் பிரிப்பது பற்றியும் பிரிக்கப்பட்ட பாகங்களை ஒன்றாகச் சேர்ப்பது பற்றியும் எங்கே படிக்கிறோம்? என்ஜினியரிங்கில்தானே? இப்போது ப்ரோக்ராமிங்கில் என்ன செய்கிறோம், சொல்லுங்கள் பார்க்கலாம்?

நாம் கம்ப்யூட்டரைஸ் செய்ய நினைக்கும் வேலையை எப்படி சின்னச் சின்ன பாகங்களாகப் பிரிப்பது என்று முதலில் ஆராய்கிறோம். பிறகு அவற்றை எப்படி ஒன்று சேர்ப்பது என்று திட்டமிடுகிறோம். எவ்வளவு சீராகப் பிரிக்கிறோமோ, எவ்வளவு சீராகச் சேர்க்கிறோமோ, அவ்வளவு சீராக ப்ரோக்ராம் ஓடும். இப்போது புரிந்ததா என்ஜினியரிங்கிற்கும் ப்ரோக்ராமிங்குக்கும் உள்ள தொடர்பு?

இரண்டாவது தகுதி: அந்த மாணவன் தனக்கு அடிப்படை பிஸ்னஸ் அறிவு இருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். உதாரணத்திற்கு, ஒரு வங்கி எங்களை அணுகி கம்ப்யூட்டரைஸ் செய்து தாருங்கள் என்று சொல்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். நான் என்னதான் கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்து கோல்டுமெடல் வாங்கிய ஒரு ப்ரோக்ராமரை அனுப்பி வைத்தாலும் அவருக்கு பாங்கிங் பற்றிய அடிப்படை அறிவு இல்லாவிட்டால் கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல்தான் இருக்கும்! அதாவது, அவர் தனது ப்ரோக்ராமிங் அறிவை உபயோகப்படுத்தவே, அப்ளை செய்யவே பாங்கிங் பற்றி தெரிந்திருக்க வேண்டும் என்றாகிவிடுகிறது. அப்போதுதான் வங்கியில் எந்தெந்த வேலைகளை கம்ப்யூட்டரைஸ் செய்தால் உபயோகமாக இருக்கும் என்று வங்கியின் தலைவருக்கு அவர் அறிவுரை வழங்க முடியும். இன்னின்ன வேலைகளை ஆட்டமேட் செய்து தாருங்கள் என்று வங்கியின் தலைவரா அறிவுரை சொல்ல முடியும்?

மூன்றாவது தகுதி: குறைந்த பட்சம் ஒரு டிகிரி, அதாவது பட்டப்படிப்பை (எந்தப் பாடமாக இருந்தாலும் பரவாயில்லை) முடித்து விடுங்கள். தயவு செய்து +2 முடித்து விட்டு ஆயிரக்கணக்கில் ரூபாய்களைச் செலவு செய்து கம்ப்யூட்டர் கோர்ஸ்களில் சேராதீர்கள். ஒரு பக்குவம், ஒரு மெண்ட்டல் மெச்சூரிட்டி பட்டப் படிப்பு முடித்தால்தான் வரும். அந்தப் பக்குவம் இருந்தால்தான் ப்ரோக்ராமிங் அடிப்படைகளை உள் வாங்கிக் கொள்ள முடியும்.

நான்காவது தகுதி: எந்த பட்டப்படிப்பு படித்திருந்தாலும் படித்த விஷயங்களைப் புரிந்து கொண்டு இருக்கிறீர்களா என்பது முக்கியம். என்ன படித்திருக்கிறீர்கள் என்பது முக்கியமில்லை. எங்கள் கம்பெனி இன்டர்வியூவில் நாங்கள் சோதிப்பது இதைத்தான். நீங்கள் படித்திருக்கும் பாடத்தில் உள்ள 'கான்செப்டு'களை மனப்பாடம் செய்திருக்கிறீர்களா அல்லது நன்கு புரிந்து வைத்திருக்கிறீர்களா என்பதுதான் எங்கள் கவலை. ஏனெனில் நாளைக்கு நாங்கள் சொல்லித் தரும் விஷயத்தை நீங்கள் எப்படி புரிந்து கொள்வீர்கள், எப்படி அப்ளை செய்வீர்கள் என்று எங்களுக்குத் தெரிய வேண்டாமா?

ஐந்தாவது தகுதி, உங்களுக்கு நல்ல ஆங்கில அறிவு இருக்க வேண்டும். சாஃப்ட்வேர் ஏற்றுமதியில் இந்தியாவுக்குப் பெரிய சவலாக சைனா உருவாகிக் கொண்டு வருகிறது என்பது உண்மை. ஆனால் அவர்களால் நம்மை முந்த முடியாது – காரணம் ஆங்கில அறிவைப் பொறுத்தவரை அவர்கள் நமக்கு ரொம்பவே மட்டு. ஆங்கில அறிவு குறையும்போது நம்முடைய communication skill –ம் குறைந்து விடுகிறது.

இந்தத் தகுதிகள் இருக்கிறதா என்று பாருங்கள், இருந்தால் தைரியமாக எந்த கம்ப்யூட்டர் மொழி வேண்டுமானாலும் படியுங்கள். எப்படிப் பார்த்தாலும் எந்த மொழியும் மிஞ்சிப் போனால் 5 வருடம்தான் வழக்கில் இருக்கப் போகிறது. அதற்குப் பிறகு குப்பையில் தூக்கி எறியப்படப் போகிறது. அப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கம்ப்யூட்டர் மொழியைப் படித்துவிட்டு போங்களேன்!

தொகுப்பு: **தீபா ரமேஷ், கிருஷ்ணா**
படம்: **வெங்கடேஷ்**

விநியோகஸ்தர் மற்றும்
மொத்த விற்பனையாளர்

நிதி ஆர்ட் ஜுவல்லர்ஸ்

49, நாராயண முதலி தெரு,
சங்கர் காம்ப்ளக்ஸ்,
சௌகார்பேட்டை,
சென்னை - 600 079 (இந்தியா)
போன் : 5366907
டெலி. பாக்ஸ் : 5389516
e-mail:nidhiart@md3.vsnl.net.in
website:http://www.2nd-choice.com

Mfg.by :
ட்ரடிஷன் ஜுவல்லரி
Fax : 91-22-8818570

SECOND CHOICE IS MY FIRST CHOICE

CHENNAI : WITCO (INDIA) PVT. LTD., 82, Usman Raod, T. Nagar, Chennai-600017. Ph:4342964. ●W-09, Roundtana, Annanagar, Chennai. Ph:6211145. ●Narayana Pearls Jems & Jewels, 62, Pondy Bazaar, T.Nagar, CH-17. Ph:4322644 ● Narayana Pearls, B.23 Waikki Complex, CH-7. Ph:5328011.●Narayana Pearls, 116, Thiyagaraya Road, T.Nagar, Kasi Arcade, CH-17. Ph:8258714. ●Rajan Stores, 5, Shanmugam Road, West-Tambaram, CH-45. Ph:2366970. ●Leo Fancy, G4, Chellammall, 11, Pondy Bazaar, T.Nagar, CH-17. ●The Eves, G9, Eldorado, 112, N.H.Road, CH-34. Ph:8222444. ●Shree Balaji Gold Covering 88, Karuneegar Street, Adambakkam, CH-88. ●Ponny Fancy Stores, 14, Dasrathapuram Main Road, Saligramam, CH-93. **ARAKONAM :**Ramesh Thangamaligai, 74, Gandhi Road, Arakonam-631001. Ph:31717. **CHENGALPET :**Kannika Fancy Stores, 61, Annasalai, Chengalpet-603002. Ph:26084. **COIMBATORE :**Gavya Gold Covering, Gandhipuram and Big bazaar Street, Coimbatore. Ph:491303. ●Maheswari Fancy Stores, 724, Raja Street, Coimbatore-641001. Ph:395333. ●***Semi wholesaler:*** Madura Fancy Stores ,14, Uppukinar Lane, Raja Street, Coimbatore-641001. Ph:390923. **GUDIYATHAM:**Annapoorna Ladies Land, 1-A, G.P.M street, Gudiyatham-632602. Ph:20605. **KRISHNAGIRI:**Rani Stores, 89, Bangalore Road, Krishnagiri-635001. **MADURAI:**Banu Gold Covering, 99/1,Krishna Complex East Avani moola street, Madurai-625001. Ph:627748. ●Dasan Stores, Big bangle Street, Madurai-625001. Ph:747792. ●R.K.Gold Covering, 26-C, West Tower Street, Madurai-625001. Ph:741909. ● Sunrise Gold Covering, 31-A, Kansamettu Street, Madurai-625001. Ph:748342. **PALANI:**Margret beauty parlour, 15A, South Car Street, Palani-624601. Ph:41016. **PUDUKOTTAI:**Chidambaram Covering 3075, East Main Road, Pudukottai-622007. Ph:21132. **SALEM:**Gurantee Covering, 121, - A, First Agraharam, Salem-1. Ph:266524. **TIRUPUR:**Ajantha Novelty stores. 85, Valarmathi Lane M.O. Street Tirupur-641604. Ph:748809. ●Gavya Gold Covering, 90, New Market Street, Rajendra Complex, Tirupur-641804. ●New Lucky Stores, 78, M.O.Street, Tirupur-641604. Ph:742088. ● Priya Fancy House, Valarmathi Lane, Tirupur-641604. Ph:740485. **TIRUPATTUR:**Nalli Gold Covering, 20 Mani Street, Tirupattur-635601. Ph:20677. **ANDHRA PRADESH:** Nanda Fancies, Nanda Plaza Bazaar, Nellore, AP-524001. Ph:327929. ●New Mayuri Novelty, 11-304, Ramar Koil St, Chittoor. ●Pushpa Novelty, 7-360, Janda Street, Chittoor-517001. Ph:35158.

மேலும் முன்னணி பேன்சி ஜுவல்லரி ஷோரூம்களில் கிடைக்கும்

இல்லத்தரசிகள் மற்றும் சொந்தமாக தொழில் செய்யும் பெண்களும் எங்களின் டீலர் ஆகலாம்

ஸ்ரீ அய்யப்பா டிராவல் ஏஜன்சி

21, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 84. ✆ : 6431023

Email : sriayyappatravelagency@usa.net / sriayyappatravels@hotmail.com

கர்னாடகா-கோகர்ண க்ஷேத்திரம் : பெங்களூர், ஸ்ரீரங்கபட்டிணம், மைசூர், பிருந்தாவனம், பாகமண்டலம், தலைகாவேரி, "கர்மண்யா", தர்மஸ்தலா, கடில், உடுப்பி, முருடீஸ்வரம், கோகர்ணம், கொல்லூர் (முகாம்பிகை), சிருங்கேரி, ஹொரநாடு (அன்னபூர்ணா), பேலூர், ஹளேபீடு, சென்னை. **20.1.2001** முதல் 7 நாட்கள், வீடியோ டிலக்ஸ் பஸ், உணவு, தங்குமிடம். ரூ. **2700/-**

ஸப்த (7) ஜோதிர்லிங்கம், அஷ்ட (8) 'வினாயக்' யாத்திரை. 7.2.2001 முதல் 15 நாட்கள். சென்னை, மும்பாய், பாலி, மட், தேவூர், ரஞ்சன்காவ், சிந்தடேக், ஔரங்காபாத், வெண்யாட்டபி, மோர்காவ், பண்டரிபுரம், கோலாபுரி (மஹாலக்ஷ்மி), துல்ஜாபவானி, பரவிவைத்யநாதம், நாகநாதம், குஸ்மேஸம், த்ரயம்பகம், நாசிக், பஞ்சவடி, வீரடி, சனிசிங்கனாபூர், எல்லோரா, உஜ்ஜயினி, ஓம்காரம், சென்னை. 2-ம் வகுப்பு ரயில், பஸ், உணவு, தங்குமிடம், உள்பட ரூ. **6,300/-**

"முக்திநாத்" சாளக்கிராம நேபாள யாத்திரை. 14.3.2001 முதல் 15 நாட்கள். சென்னை, பூரி, புவனேஸ்வர், கோனார்க், கயா, புத்தகயா, வாரணாசி (காசி), போக்ரா, ஜம்ஸோம், முக்திநாத், காட்மண்டு (நேபாளம்), அயோத்யா, நைமிஷாரண்யம், அலஹாபாத், வாரணாசி, சென்னை. 2-ம் வகுப்பு ரயில், பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. **6,580/-** (ஆகாய விமானம், குதிரை கட்டணம் தனி)

துவாதச ஜோதிர்லிங்கம் 12-ம், பஞ்சத்துவாரகா 5-ம், முக்திநகரம் 7-ம் (மோக்ஷபுரி) உள்பட பாரத பூர்ணதக்ஷிண யாத்திரை. 18.4.2001 முதல் 35 நாட்கள். சென்னை, ஸ்ரீசைலம், பம்பாய், சோமசங்கரம், வீரடி, பரவிவைத்யநாதம், நாகநாதம், எல்லோரா, குஸ்மேஸம், அலஹாபாத், துவாபாரத்துவாரகை, கோமதித்துவாரகா, பேட்டித்துவாரகை (கதாமபுரி), போர்பந்தர், சோமநாதபுரம், மோக்ஷத்துவாரகை, உஜ்ஜயின், மஹாகாளம், காசிவிஸ்வநாதம் (வாரணாசி), அயோத்யா, அலஹாபாத், ஹரித்வார், ரிஷீகேசம், கேதார்நாத், பத்ரிநாத், டில்லி, ஆக்ரா, மதுரா (ஜனனத்துவாரகை), பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம், டில்லி, சென்னை, ராமேஸ்வரம், சென்னை. 2-ம் வகுப்பு பர்த், உணவு, தங்கும் இடவசதி, பஸ் உள்பட ரூ. **14,400/-**

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"

Lakshmi Ayer

திருமதி. லக்ஷ்மி ஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும், பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)** இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டீஸ் (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டீஸ் (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குறிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதியாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க. தொலைபேசி **0413-346683**

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி - 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
Fax : 91 - 0413 - 346683

இந்திய கலாசாரப்படி உண்ணுங்கள்!

VLCC - வந்தனா லூத்ராவின் டயட்டிங் சென்டர்கள். இந்தியா முழுவதும் முப்பத்தியொரு மையங்கள் வைத்திருக்கும் இவர்கள் 'விஞ்ஞானபூர்வமான டயட்டிங் உத்திகள்' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். 'விஞ்ஞானபூர்வமான....' விளக்கம் கேட்டோம். அவர்களுடைய ஸ்லிம்மிங் டைரக்டர் டாக்டர். அனிதா அகர்வால் விளக்கினார்.

ஒருவர் உடல் பருமனாக இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அவருக்கு டயட்டிங் ப்ரோக்ராம் வகுத்துக் கொடுப்பதற்கு முன் அவருடைய எடை கூடுதலாக இருப்பதற்கு என்ன காரணம் என்று கண்டறிகிறோம். பொதுவாக இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம். ஒன்று அதிகமான கொழுப்புச் சத்து, இரண்டு அதிகமான தண்ணீர் சத்து, மூன்று அவரது தசைகள்.

"ஒருவருக்குக் கொழுப்புச் சத்தால் உடல் பருத்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு வகுக்கின்ற டயட்டிங் ப்ரோக்ராம் அவருடைய உடலில் இருக்கும் தண்ணீரின் சதவீதத்தைக் குறைத்து டூ-ஹைட் ரேஷனில் கொண்டு வந்து விட்டுவிடாமல் இருப்பது முக்கியம். அதேபோல் தசைகளையும் குறைத்து விடாமல் இருப்பது அவசியம். இது போல ஒன்றைக் குறைக்க முற்படும்போது இன்னொன்று பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதைத்தான் விஞ்ஞானபூர்வமான உத்தி என்று சொல்லுகிறோம்.

கல்கியின் இளம் வாசகி களுக்கான சில பொதுவான டிரிம்மிங் உத்திகளைச் சொல்லுங்கள் என்று கேட்டோம்.

• டயட் செய்யும்போது 'என்ன உணவு வேண்டுமானாலும் உட்கொள்ளலாம், உணவின் அளவை மட்டும் குறைத்துக் கொண்டால் போதும் என்று நினைப்பது தவறு. ஏன் என்றால் இந்த மாதிரி டயட்டிங்குக்கு அசாதாரண மனவலிமை வேண்டும். பசி, அசதி, எரிச்சல் இருந்து கொண்டே இருக்கும் என்பதால்!

போதாதற்கு, தலைமுடி உதிருவது, தசைகள் வீக் ஆகி விடுவது, தோல் காய்ந்து போவது போன்ற பக்க விளைவுகள் வேறு!

● அதிக புரோட்டீன் சத்து மிகுந்த டயட்டிங் கலவைகள், 'மிக்ஸ்'கள், இவற்றை வாங்கிச் சாப்பிடாதீர்கள். காரணம், இவற்றைச் சாப்பிடும்போது உடலில் அதிகப்படியான யூரியாவும் யூரிக் ஆஸிட்டும் உற்பத்தி ஆகின்றன. இவற்றைச் சிறுநீரகங்கள் வெளியேற்றியே ஆக வேண்டும். மாதக் கணக்கில் இப்படிச் செய்யும்போது சிறுநீரகங்கள் அதிகப்படியான வேலையால் பாதிக்கப்பட்டு விடும் அபாயம் இருக்கிறது.

● பசியைக் கொல்லும் மருந்துகளின் பக்கம் போகவே போகாதீர்கள். இதில் இரண்டு கஷ்டங்கள். ஒன்று மருந்தை நிறுத்தியவுடன் எடை கூடப் போவது நிச்சயம். இரண்டு இருதயத்தைப் பாதிக்கும் அபாயம் இந்த மருந்துகளுக்கு உண்டு.

● கன்னாபின்னாவென்று உடற்பயிற்சி செய்யாதீர்கள். அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வீதம் இருபத்தி மூன்று நாட்களுக்கு நீங்கள் ஜாக்கிங் செய்தால் எத்தனை கலோரிகளை இழப்பீர்களோ அத்தனைக் கலோரிகளை ஒன்றரை பாதாம் பருப்பு சாப்பிட்டாலே திரும்பப் பெற்று விடுவீர்கள். அதோடு, அதிகமான உடற்பயிற்சி அதிக உணவைச் சாப்பிடத் தூண்டும்.

பின் எப்படித்தான் எடையைக் குறைப்பது என்கிறீர்களா?

● உங்கள் டயட்டில், தேவையான சத்துக்களை மட்டுமே கொண்ட உணவுகளை உட்கொள்ளுங்கள். தேவையான அளவு உட்கொள்ளுங்கள். உதாரணத்திற்கு ஓட்ஸ், ராகி, பெரு பருக்கையாக அரைத்த ஐட்டங்களைச் சாப்பிடுங்கள். இவற்றை ஜீரணிக்க அதிக நேரம் பிடிப்பதால் பசி சீக்கிரத்தில் எடுக்காது. மேலும் இளநீர், எலுமிச்சை ஜூஸ் (சர்க்கரை சேர்க்காமல்) பச்சை காய்கறிகள் இவற்றை அதிகமாகச் சேர்த்துக்கொண்டால் உடம்புக்குத் தேவையான அனைத்து விட்டமின்களும் மினரல்களும் கிடைத்துவிடும்.

● இந்திய கலாசாரப்படி உணவு உட்கொண்டால் பிரச்னையே இருக்காது. மேலை நாட்டு நாகரிகத்தைச் சாப்பாட்டில் புகுத்தும்போதுதான் எல்லா பிரச்னைகளும் ஆரம்பிக்கின்றன.

● நார் சத்து நிரம்பிய பொருட்களை அதிகம் சாப்பிடுங்கள். உதாரணத்திற்கு பாசிப் பயிறு, பாசிப் பருப்பு, பார்லி, காய் வகைகளில் முட்டைகோஸ், வெண்டைக்காய், பீன்ஸ், பழங்களில் ஆப்பிள், பேரிக்காய்... இப்படி. இவை உடலில் இருக்கும் கொழுப்புச்சத்தை உறிஞ்சி வெளியேற்றி விடும் இன்ஜெக்ஷன்கள்.

● டென்ஷன் இருந்தால் அதிகம் சாப்பிடத் தோன்றும். அதனால் டென்ஷனைக் குறைக்கும் வழிகளைப் பாருங்கள். சில வழிகள் இதோ..

1. காலையில் எழுந்தவுடன் ஒரு தம்ளர் லைம் ஜூஸ் சாப்பிட்டு விடுங்கள்.

2. நிறைய தண்ணீர் குடியுங்கள். எவ்வளவு தண்ணீர் குடிக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு டென்ஷன் குறையும்.

3. டென்ஷன் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் நாட்களில் விட்டமின் நிரம்பிய உணவு ஐட்டங்களைச் சற்று அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

4. ஒரு நாளைக்கு ஒரு கப் காப்பிக்கு மேல் வேண்டாம்.

5. இனிப்பு சாப்பிட வேண்டும் போல் இருந்தால் இயற்கையாகவே இனிப்புள்ள பொருட்களைச் சாப்பிடுங்கள்.

● ஹோட்டலில் சாப்பிடக் கூடாது என்று உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள். அதற்குப் பதில் உணவு ஐட்டங்களை ஆர்டர் செய்யும் முறையை மாற்றிக் கொள்ளுங்கள்.

ஹோட்டலுக்குக் கிளம்பும் முன் வெண்ணெய் தடவாத சாண்ட்விச் ஒன்றைச் சாப்பிட்டு விட்டுப் போங்கள். அகோரப் பசியுடன் போகாதீர்கள், கன்னாபின்னாவென்று ஆர்டர் செய்யத் தோன்றும்.

தென்னிந்திய உணவு என்றால் போண்டா, பஜ்ஜி, வடை என்று ஆர்டர் செய்யாமல் இடியாப்பம், இட்லி என்று ஆர்டர் செய்யுங்களேன். வடக்கத்திய உணவு என்னும் பட்சத்தில் பூரி, பரோட்டா, படூராவுக்குப் பதில் தந்தூரி ஐட்டங்களை வரவழையுங்கள்.

ஐஸ் க்ரீமுக்குப் பதில் ஃப்ரூட் சாலட் சாப்பிடலாமே?

முக்கியமான விஷயம் உணவு பழக்கங்கள் குழந்தைப் பருவத்தில் அமைந்து விடுபவை. அதனால் நிருமணமானவுடன் உங்கள் குழந்தைகளை வளர்க்கும்போது மேலே சொன்ன எல்லா விஷயங்களையும் மனத்தில் வைத்துக் கொண்டு உணவு பழக்கங்களை ஏற்படுத்துங்கள்!

“உங்கள் குழந்தைகளை வளர்க்கும்போது இந்த விஷயங்களை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!”

— கிருஷ்ணன்

லவ் ஜகாலஜி!

'லவ்ஸ்' பண்ணுபவர்களுக்கு 'லவர்' சைக்காலஜியை பேஸ் பண்ணி சில டிப்ஸ் கேட்டிருந்தோம். டாக்டர் என். ரங்கராஜனிடம்...

★ வாழ்க்கையில 'லவ்'தாங்க ருசியான விஷயம். இதுல இதுதான் சரி, தவறுன்னு சொல்றதுக்கு எதுவுமில்லை. இருந்தாலும் 'லவ்வர்ஸ்' சில விஷயங்கள்ள கவனமா இருந்தா காதல் ஸ்மூத்தா போய்ட்டிருக்கும்.

★ காதலரோட டேஸ்ட் என்னன்னு நீங்க புரிஞ்சுக்கறது முக்கியம். அவர் டேஸ்டுக்கு நம்மால போக முடியாதுப்பானு நினைத்தால் காதலைக் கழற்றிவிடறது மனசுக்கு நல்லது.

★ 'அவ என் காதலி மாமு. நான் என்ன கலர் ஸாரி/ஜீன்ஸ் போடச் சொல்றேனோ அதைத்தான் கட்டுவா' என்று சில காதலர்கள் அநித உரிமை எடுத்துக் கொள்ளலாம். ஆனா உரிமையே லவ் இல்லை மாமு.

★ சாப்பாட்டுக்குத்தான் ஊறுகாய். ஊறுகாயே சாப்பாடு ஆனா...! (இன்னா தத்துவம் பாரு)

★ ஏதோ ஸ்பெஷாலிடியைப் பார்த்துதான் லவ்வே வருது. லவ்வுக்குப் பிறகு உங்க விருப்பு வெறுப்புகளை அவங்க மேல திணிச்சா டேஞ்சர். லவ் காணாம பூடும்.

★ "நான் இல்லாத சமயத்துல அந்த ஃபங்க்ஷன்ல ஏன் கலந்துகிட்டே? அவன்கிட்ட உனக்கென்ன பேச்சு?" இப்படியான டயலாக்குகளை ஓரங்கட்டறது நல்லது.

★ 'லவ்'வைச் சொல்லும்போது எப்படியாவது லவ் பண்ணனும்ங்கறதுக்காக, "பார்த்தீங்களா நான் ரொம்ப கறுப்பு. ஏழை"ங்கற மாதிரியான சினிமா வசனங்கள் இறக்கத்தைத்தான் ஏற்படுத்தும். உண்மையான அன்பை ஏற்படுத்தாது. இந்த உறவு பின்னால நீ பெரியாளா? நான் பெரியாளாங்கற மனப்பான்மையைத்தான் உண்டாக்கும்.

★ மோதல்லதான் லவ் வரும்ங்கறது நிஜத்துல இல்லை. பரஸ்பரம் புரிந்து கொள்றதுலதான் நிஜமான லவ் வரும். பஸ் ஸ்டாண்டில் பல்லிளிப்பதோ, மணிக் கணக்கில் தவம் கிடந்து "ஹாய்" சொல்வதிலோ, நோட் புக் பகிர்ந்துக்கிறதிலயோ லவ் வராது.

★ "நீ என்னைக் காதலிப்பது உண்மைனா..."ங்கற மாதிரி பேசி காதலை டெஸ்ட் பண்ணாதீங்க. ஒரு விஷயம் பிடிக்கலைனா நேரா கூப்பிட்டுச் சொல்லிடுங்க. அதை அவங்களால மாற்ற முடியலைனா, இன்னும் அவரைப் பிடிச்சிருக்கான்னு யோசியிங்க. சட்டதிட்டங்கள் போட்டுட்டு லவ் பண்றது வேஸ்ட்.

★ உங்க 'லவ்'வர் மற்ற ஆண்/பெண்ணிடம் பழகினால், ஏகத்துக்கு



டென்ஷன் ஆகாதீங்க. முதல்ல அப்படித்தான் இருக்கும். அப்புறம் இதுவே ஒரு சந்தேகப் பேயா மாறி பிரச்னையை உருவாக்கும். ஜாக்கிரதை.

★ வாழ்க்கையில ஒரு பார்ட்தான் லவ். அதுவே வாழ்க்கையில்லை. லவ் ரொம்ப ஸ்ட்ராங்கா, நீண்ட நாள் இருக்கணும்னா உங்களோட உடல் நலம், கல்வி, தொழில் மற்ற உறவுகள்ளயும் அக்கறை காட்டுங்க. உங்க லவ்வரையும் அப்படியே செய்யத் தூண்டுங்க.

மோகம் முப்பது நாள்,
ஆசை அறுபது நாள்,
காதலோ மனமுள்ள வரைக்கும்!

தொகுப்பு : **ஏக்நாத்**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

வேளாண்மை செழித்து
தொழில் துறை வளர்ந்து
வணிக வளம் பெருக
என்றென்றும் பணி புரிகிறது
TMB

எங்களது இனிய பொங்கல்
வாழ்த்துக்கள்

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்

57, வி.சு. ரோடு, தூத்துக்குடி – 628 002

விரைவான வளர்ச்சிப் பாதையில்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

''உஜாலாவின் உன்னத வெண்மை விஞ்ஞான ரீதியிலான சாதனை.''

INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் ஆய்வுக் கூடத்தில் தொடர்ந்து நன்கு சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிருபிக்கப்பட்ட உஜாலாவின் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் (I.W.S.)™ இது தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளிலுள் ஆழ்ந்து ஊடுருவிவெண்மையின் வெளிச்சத்தை துணிகளில் உடனடியாய் வெளிக்கொணர்கிறது. துணிகள் மீண்டும் துவைக்கும்போது, அழுக்குடன் முழுவதும் வெளியே தள்ளப்பட்டு விடுகிறது. நாட்கள் பல ஆனாலும் துணிகளின் இயல்பான வண்ணம் மாறாமல் புதிது போலவே பாதுகாக்கிறது. எங்கின் இரிட்டேஷன்-ஓஸ் டாக்சிசிடி சோதனைகளில் பாதுகாப்பானது என ஆதாரபூர்வமாக கண்டறியப்பட்ட தயாரிப்பு உஜாலா ஒன்றே.

1983 முதல் அனேக கோடி உள்நாடு-வெளிநாடு வாடிக்கையாளர்களுக்கு முழுதிருப்தியை உஜாலா வழங்கிக் கொண்டிருக்கிறது. பாத நாடெங்கும் பல மாநிலங்களில் உள்ள ஜோதி லேபின் விஞ்ஞான தொழில் நுட்ப மேன்மை மூலம் கடும் தரக்கட்டுப்பாடு முறைகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உஜாலாவும் உங்களை அடைகிறது.

விஞ்ஞான ஆதாரமற்ற முறையில், இரசாயன நிறுவனங்கள் தயாரிக்கும், நூலிழைகளை பலவீனப்படுத்தும், வண்ணம் குறைக்கும் மூலப்பொருட்கள் ஏதும் இதில் இல்லை. தரங்குறைந்த, கலப்பட இரசாயனக் கலவைகள் உங்களின் துணிகளுக்கு சேதம் ஏற்படுத்த இடம் அளிக்காதீர்கள்.

உஜாலா என கேட்டு வாங்கும் போது விஞ்ஞானமற்ற எதேனும் ஒரு போலி தயாரிப்பை நீங்கள் பெறவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.

14.1.2001
இதழுடன் இலவச
இணைப்பு

கல்கி

"மனைவி முன் நடிக்க மாட்டேன்!"

– விஜய் பர்சனல் பேட்டி

பொங்கல் களிப்பு
கோ-ஆப்டெக்ஸ் பூரிப்பு

- தமிழக அரசு மற்றும் பொது நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு ஒரு மாத சம்பளம் வரை வட்டியில்லாத கடன் வசதி.
- பட்டு புடவை சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.
- பொங்கல் வரை அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு.

சிறப்புத் தள்ளுபடி

20% முதல் 60% வரை

கோ-ஆப்டெக்ஸ்

Visit us at : www.tn.gov.in / www.channaionline.com / www.aaraamthinai.com /www.southindia.com /www.webulagam.com

செ.ம.தொ.இ/2127/வரைகலை/2000/எலெக்ஸ்

ஜூனேஜ் ஜாயிண்ட

கோயம்பத்தூர் கேலரி

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ✉ மெயில் : kalkiweekly@vsnl.com

கோயம் புத்தூர் மூன் ஏஜ் களை கிரேஸி ஆக்கிக் கொண்டிருக்கிறது. 'கிரேஸி பால்ஸ்'! 'பசையுள்ள' பார்ட்டி கள் ரொம்பி வழியும் ஆர்.எஸ்.புரம் டி.பி. ரோட்டில் இருப்பதால் எந்நேரமும் 'ஜேஜே!' பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர், ஏர்-ஹாக்கி, வீடியோ கேம்ஸ், இன்டர்நெட் பிரௌஸிங் என்று ஒரே கலக்கல்ஸ்! உள்ளே நுழைந்தவுடன் கண்ணில் படுவது சுவாரஸ்யமான ஷேப்களில் இருக்கும் லைட்டுகளும் 'எவர்ஸ்மைலிங் ஹோஸ்ட்'ம்! ஹாட்செல்லர்கள் ஸ்மூரி யோவில் காதைப் பிளக்க, ஃபிரெஞ்ச் ஃபிரை, பர்கர், கோக் என்ற எல்லா 'சத் துள்ள சமா சாரம்' உம் உண்டு.

- ராஜ ராஜேஷ்வரி

KS&Co

புத்தாண்டில் அரிசி புரட்சி!

KS&Co

ஆந்திரா பொன்னி பச்சை அரிசி

தமிழ்நாடு பொன்னி புழுங்கல் அரிசி

ரூ 12 மட்டுமே!

கிலோ ரூ. 12 மட்டுமே!

ரூ 12 மட்டுமே!

✠ மற்றும் அனைத்து அரிசி ரகங்களும் குறைந்த விலையில்!

✠ 25 கிலோ மற்றும் 75 கிலோ மூட்டையில் கிடைக்கும்.

✠ ரூ. 500/- மேல் வாங்குபவர்களுக்கு சிறப்பு பரிசும் உண்டு.

கிடைக்குமிடம்:

K. சுப்ரமணியம் & கோ

47, சௌத் வெஸ்ட் போக் ரோடு, தி. நகர், சென்னை - 17. ✆ 4360580, 4360590	21, நடேசன் தெரு, தி. நகர், சென்னை - 17. ✆ 4345522, 4345590	1, சிங்கார தோட்டம் 2வது சந்து, சென்னை - 600 021. ✆ 5953822, 5953894

இன்றே முந்துங்கள்... இச்சலுகை ஜனவரி 15, 2001 வரை மட்டுமே

நீண்ட அடர்த்தியான மற்றும் அழகு மிளிரும் கூந்தலுக்கு

உபயோகிப்பீர் குணை கூந்தல் தைலம்

குணை கூந்தல் தைலம் தொடர்ந்து உபயோகிப்பதால்

- கூந்தல் நீண்டு கருமையாக இருப்பதற்கு, கூந்தலில் உள்ள மெலனின் என்ற பொருளுக்கு அதிக சக்தி அளிக்கிறது.
- கேசம் உதிர்தல், செம்பட்டை நிறம், பித்த நரை, தலை அரிப்பு, பொடுகு மற்றும் சொறிந்தால் தெறில் உதிர்வதையும் தடுக்கின்றது.
- தலைவழுக்கை ஏற்படாமல் பாதுகாக்கும் டிரிப்டோபன் சக்தியை அதிகரிக்கிறது.
- 30 வருட அனுபவமும் சித்த மருத்துவ சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்படுவதால் எந்தவித பின்விளைவுகளையும் ஏற்படுத்தாது.
- பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் உபயோகிக்கலாம்.

குணை கூந்தல் தைலம்

விபரங்களுக்கு:

Agasthiar Pharmaceuticals

Post Box No: 588, Salem - 636 005.

Bangalore Branch: No. 37, South End Road, Basavanagudi, Bangalore - 560 004 Ph : (080) 6767882

இப்பொழுது 100ml / 200ml Packing களில் கிடைக்கின்றது

என்றும் இளமையோடு மிளிர, உபயோகிப்பீர் குணை கூந்தல் தைலம்

கல்யாணபுரம் ஆராவமுதன் 24

ஸ்ரீராமபக்த ஹனுமான்

இலங்கையைப் பற்றிய செய்திகளெல்லாம் அறிந்தாயிற்று; இனி புறப்பட வேண்டியதுதான் என்கிற கட்டம்.

"சுக்ரீவா! சூரியன் இப்போது நடுப்பகலில் இருக்கிறான். இது ஜயத்தைத் தரவல்ல வேளை. உடனடியாகப் புறப்படுவோம்" என்கிறான் ஸ்ரீராமன்.

வானர சைனியங்கள் சமுத்திரக் கரையை வந்தடைகின்றன. அந்தச் சமயத்திலேதான் விபீஷணன் அங்கே வந்து சேருகிறான். எப்படி...?

ராவணன் சபையில் ஏக அமர்க்களம். காற்றும்புக முடியாத லங்கா நகரத்துக்குள் கேவ்லம் ஒரு குரங்கு புகுந்து எரித்துக் கரியாக்குவதா! என்று ராவணன் கொதித்துக் கொண்டிருக்கிறான். அத்தனை நடந்த பிறகும் ராவணன் ஆஞ்சனேயனைக் 'குரங்கு' என்றே அழைக்கும் அசுந்தையைக் கவனியுங்கள்!

இலங்கையைப் புனருத்தாரணம் செய்வது எப்படி என்று மந்திராலோசனை நடக்கிறது. ராக்ஷஸர்கள் ஒவ்வொருவரும் தலைக்குத் தலை தாறுமாறாகப் பேசுகிறார்கள். விபீஷணனுக்குப் பொறுக்காமல் போய், ராவணனுக்கு அறிவுரை கூற ஆரம்பிக்கிறான். அதனால் ராவணனின் கோபம் இன்னும் அதிகமாகிறது!

பார்த்தான் விபீஷணன், 'உன் ஊரும் வேண்டாம், உறவும் வேண்டாம்' என்று ஒரே நிமிஷத்தில் எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு, ஆகாசமார்க்கமாகப் பயணம் செய்து வந்து ராமபிரானிருக்கும் இடம் அடைகிறான்.

அவனை முதலில் காண்பவர்கள் வானர வீரர்கள்தான். அவர்கள் அத்தனை பேரும் கலவரத்துடன் போய் ராமனிடம் சொல்ல, ஸ்ரீராமன் அவர்களிடமே கேட்கிறான் :

சரணாகதி என்று வந்திருக்கும் விபீஷணனை நாம் சேர்த்துக் கொள்ளலாமா? வேண்டாமா?

சுக்ரீவன், அங்கதன், ஜாம்பவான் எல்லாருமே விபீஷணனைத் தங்கள் குழுவில் சேர்க்கலாகாது என்கிறார்கள். ஆனால் விபீஷணனைப் பற்றி நன்கறிந்த ஹனுமான் வாயே திறக்காமல் மௌனமாக இருக்கிறான்.

எல்லோரையும் விட்டுவிட்டு ஸ்ரீராமன் அவனைப் பார்த்துத்தான் கேட்கிறார்: "ஆஞ்சனேயா! நீ ஒன்றும் சொல்லவில்லையே...?"

மெலட்டூர் ஆஞ்சனேயர்

தஞ்சாவூருக்கருகில் உள்ள மெலட்டூர் என்ற ஊர் பாக்வத மேளாவுக்குப் பெயர்போன இடம் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அந்த இடத்தில் ஒரு ஹனுமான் உறைகிறார். அவர் மிகவும் சக்திவாய்ந்தவர். மனத்தில் ஏதேனும் விருப்பம் இருந்தால் இவரைப் பிரார்த்தித்து மட்டைத் தேங்காயைக் கோவிலில் கட்டுகிறார்கள். காரியம் வெற்றிகரமாக முடிந்ததும் மீண்டும் வந்து தாங்கள் கட்டிய தேங்காயை எடுத்து (அடையாளம் உண்டு) அந்தத் தேங்காயையே உடைத்து ஹனுமாருக்கு அர்ச்சனை செய்கின்றனர். அந்தத் தேங்காய் வீணாகாமல், அழுகாமல் ஹனுமாருக்குப் படைக்கப்படுகின்றது என்றால் அத்துணை விரைவாக அருள்புரிகிறார் என்று புரிகிறது.

விரோதியின் ஊரிலிருந்த வந்துள்ளவனை உடனே கொன்றுவிட வேண்டும் என்பது சுக்ரீவனின் துடிப்பு.

"பரீக்ஷித்துப் பார்க்காமல் இவனை நம் அணியில் சேர்த்துக் கொள்ளலாகாது" - இது அங்கதனின் அபிப்பிராயம்.

"வேவு பார்ப்பவர்களை அனுப்பி அவனை நோட்டம் விடுங்கள்" என்றானாம் சரபன் என்பவன்.

எல்லோரைக் காட்டிலும் மூத்தவரான ஜாம்பவான் சொல்கிறார் -

"விபீஷணன் வந்துள்ள இடம் நேரம் இதையெல்லாம் பார்த்தால் சந்தேகமாயிருக்கிறது..."

இத்தனை பேரும் விபீஷணனை ஆதரிக்காத போதிலும் ஹனுமானுக்குக் கவலையில்லை. இலங்கையிலே விபீஷணனைப் பார்த்திருக்கிறான். மற்றவர்களின் சொல்லுக்காகவும் சந்தேகத்துக்காகவும், தான் கண்டு ஏற்படுத்திக் கொண்ட அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டுவிடவில்லை அவன்.

ஸ்ரீ ராமனுக்கு ஹனுமான் இங்கே கூறும் பதில் அழகும் தீர்க்கதரிசனமும் மிக்கது :

"ஸ்ரீராமா! உன் அறிவானது தேவகுருவான பிரஹஸ்பதியினுடையதையும் விஞ்சக்கூடியது. அப்படியிருந்தபோதும் என்னிடம் நீ அபிப்பிராயம் கேட்கிறாய். சரி, சொல்கிறேன். இதுவரை உன் சகாக்கள் விபீஷணன் விஷயமாகச் சொன்ன எந்த அபிப்பிராயமுமே நியாயமானதில்லை. ராவணனுக்கு நன்மையை உபதேசிக்க முயன்ற நல்லவன் விபீஷணன்.

"தூரத்திலிருப்பவர்களைத்தான் வேவு பார்த்து எடைபோட வேண்டும். இவனோ சரணாகதி என்று நம்மிடமே வந்து விட்டான். இவனை எதற்காக வேவு பார்ப்பதாம்! அவன் முகத்தில் எவ்வித கள்ளத்தனமும் இல்லை. உன் பரிவாரங்கள் எல்லாம் அவனைத் தாக்குவதற்காக மரம் - செடி - கொடிகளை உடைத்து எடுத்துக் கொண்டு ஓடியபோது கூட அவன் அவர்களை எதிர்க்காமலிருந்திருக்கிறான். 'ஸ்ரீ ராமனிடம் என்னைப் பற்றிச் சொல்லுங்கள்' என்று வேண்டிக் கொண்டிருக்கிறான். இவையெல்லாம் அவன் உள்ளத்தின் தூய்மையைக் காட்டுகின்றன. பந்துக்களையும் செல்வங்களையும் துறந்து அவன் வந்திருப்பது உன் மேல் உள்ள பக்தியினாலும் நம்பிக்கையினாலும் அன்றோ! உன்னைச் சரணடைந்த சுக்ரீவனுக்கு நீ ராஜ்ஜியம் பெற்றுத் தந்தாய். அதைப் போல் இவனுக்காகவும் நீ போர் செய்து லங்கா ராஜ்ஜியத்தைப் பெற்றுத் தருவாயாக!"

- இது எவ்வளவு துணிச்சல் மிக்க பேச்சு! தன்னிடம் ஸ்ரீ ராமன் கேட்கும் வரை பேசாதிருந்தவன், கேட்டதும் எத்தனை தீர்மானமாக, தெளிவாக மனத்தில் பட்டதைச் சொல்கிறான்!

இந்தப் பேச்சைக் குறிப்பிடும் போது வால்மீகி ஹனுமானுக்கு இரண்டு அடைமொழிகள் தருகிறார் :

அத ஸம்ஸ்கார ஸம்பன்ன :
ஹனுமான் ஸசிவோத்தம :

ஸம்ஸ்கார ஸம்பன்ன: பல கலைகளைப் பயின்றது மட்டுமின்றி அவற்றின்படி நடப்பவர்.

ஸசிவோத்தம: ராமனிடமிருக்கும் அமைச்சர்களுள் மிக உயர்ந்தவர்; நேர்மையானவர்.

அதாகப்பட்டது, எதை எப்போது பேசலாம், பேசக் கூடாது என்று நன்கு அறிந்த அறிவாளி.

வால்மீகி சொன்னதையே கம்பனும் சொல்கிறார் 18 பாடல்களில். அவற்றில் கடைசிப் பாடலைப் பார்ப்போம் :

ஆதலால் இவன்வரவு நல்வரவே
என உணர்ந்தேன்
அடியேன் உத்தன் வேதநூல் எனத்
தகைய

திருவுளத்தின் குறிப்பறியேன் என்று
விட்டான்
காதல் நான்முகனாலுங்
கணிப்பரிய கலையனைத்துங்
கதிரோன் முன்சென்று ஓதினான்
ஓதநீர் கடந்து பகை கடிந்து
உலகை உய்யச் செய்தான்

சூரியனிடத்திலிருந்து சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்த ஹனுமான் ராமனைப் பார்த்து, 'வேத சாஸ்திரத்துக்கு நிகராகச் சொல்லத் தகுந்த, பழுதுபடாத உமது உள்ளத்திலிருப்பதை நானறியேன். ஆனாலும் விபீஷணன் வருகை நல்ல எண்ணத்துடன் வந்த வருகையே' என்று சொன்னானாம்!

அரசனின் மனத்துக்கு உகந்தவாறு பேசுபவன் நல்ல அமைச்சனாக முடியாது. இடித்துரைத்தல், எடுத்துரைத்தல் இரண்டுமே அமைச்சு குணங்கள். இவை வாய்க்கப் பெற்றவன் ஹனுமான்.

அதனால்தான் ஹனுமானின் பேச்சுடன் அதிலிருந்த நியாயத்தையும் சேர்த்து ரசித்தானாம் ஸ்ரீ ராமன்.

ரசித்து முடித்துச் சொல்கிறான் வானர சேனையிடம் :

அருள்வாக்கு

அப்பா வைத்துவிட்டுப் போகும் ஸொத்து சாச்வத மில்லை.

நாமே தேடிக் கொள்கிற ஸொத்துக்களுக்கும் இதே கதை தான்.

சாச்வதமான ஸொத்து, இழந்து போகாத, ரிப்பேர் பண்ண வேண்டாத ஸொத்து, டாக்ஸும் திருட்டும் தொடாத ஸொத்து, 'திருட்டுப் போயிடுமோ?' என்று பயப்படவும் வேண்டாத ஸொத்து, ஏமாற்று வழிகளில் போய் நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டாத ஸொத்து. அப்பா கொடுக்க முடியாது; நாமாகவும் தேடிக் கொள்ள முடியாது.

குரு என்கிற ஒருத்தர்தான் சாச்வதமான அந்த ஸொத்தைத் தருகிறவர். இது நாம் போன பிற்பாடு நம் கூட வராத ஸொத்தில்லை-நம்மையே திரும்பி வரப் பண்ணாத ஸொத்து! எது சாச்வதமோ அந்தப் பரமாத்மாவுடன் நம்மைப்பிரிக்க முடியாமல் சேர்த்து விடுகிற ஸொத்து.

ஞானம் என்ற ஸொத்தை குரு அநுக்ரஹிக்கிறார். ஸொத்து கூடிக்கொண்டே போவது, நாம் சிரமப்பட்டு அதை விருத்தி பண்ணப் பாடுபடுவது, இந்தப் பாட்டில் பாவ மூட்டையை இன்னும் பெரிசாக்கிக் கட்டிக் கொள்வது என்பதற்கெல்லாம் இடமே வைக்காமல் நாளுக்கு நாள் தானும் வளர்ந்து நம்மையும் வளர்ப்பது குரு தருகிற உபதேச ஸொத்து.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

"எனது அபிப்பிராயத்தையும் சொல்கிறேன் கேளுங்கள்.

"தஞ்சம் என்று வந்த எவரையும் அவரிடம் என்ன தோஷமிருந்தாலும் - கைவிடலாகாது."

விபீஷணனின் சரணாகதி ஏற்கப்படுகிறது.

அதன் பிறகு எல்லாம் மிக வேகமாக நிகழ்கின்றன. சமுத்திரத்தை எப்படித் தாண்டுவது என்று யோசித்து, நளனின் மகனான விச்வகர்மாவை அழைத்துச் சமுத்திரத்துக்குக் குறுக்காக அணை கட்ட உதவி கேட்கிறார்கள்.

வானரங்கள் பாறைகளை எடுத்து வர, ஐந்து நாட்களில் நூறு யோஜனை அகலமுள்ள சமுத்திரத்துக்கு அணைகட்டி முடித்து விடுகின்றனர்.

அணை கட்டி முடிந்ததும் ஆனந்த மிகுதியால் ஹனுமான் ராமனைத் தோளில் தூக்கிக் கொண்டு விட்டான். அதைப் பார்த்துவிட்டு அங்கதன் லக்ஷ்மணனைத் தனது தோளில் தூக்கிக் கொள்ள, ஒரே குதூகலமாய்க் கடலைக் கடந்து அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தனர் அனைவரும்.

இலங்கையிலே இவர்கள் வருகை அறிந்த ராவணன் சுகன் - சாரணன் ஆகியோரை அனுப்பிப் பார்த்துவரச் சொல்கிறான். அவர்கள் ராமனுடைய சேனையின் பலத்தைக் கண்டறிந்து போய் அவனிடம் வர்ணிக்கிறார்கள். ராமனின் பெருமையைச் சொல்கிறார்கள்.

தூரத்திலே சுவேல மலை மீது நிற்கிற வானர சேனையைப் பார்த்து ராவணன் யார் யார் எனறு அடையாளப்படுத்திச் சொல்லும்படி கேட்கிறான்.

சுகனும் சாரணனும் ராவணனுக்கு இருபுறமும் நின்று ராமன், லக்ஷ்மணன், சுக்ரீவன் என்று சுட்டிக்காட்டி அடையாளம் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். ராமனுக்கு அடையாளமாக ஹனுமானைக் குறிப்பிடுகிறார்கள்! அந்த சும்பன் செய்யுளின் வர்ணனை :

உவன் காண் குமுதன் குமுதாக்கனு
மூங்கவன் காண்
இவன் காண் கவயன் கவயாக்கனு
மீங்கிவன் காண்
சிவன் காண் அயன் காண் எனும்
தூதனைப் பெற்ற செல்வன்
அவன் காண் எடுங்கேசரி
யென்பவனாற்றல் மிக்கான்

ராமனைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'சிவன் காண், அயன் (பிரும்மா) காண்' என்று பார்ப்போரெல்லாம் பாராட்டக் கூடிய ஒரு தூதனைப் பெற்ற செல்வன் இந்த ஸ்ரீராமன்' என்று வர்ணிக்கிறார்களாம்.

ஹனுமானால் ஸ்ரீராமன் பெருமைபெற்றான் என்று பொருள்பட இங்கே கம்பர் பாடியிருப்பது வெறும் காவிய நயத்துக்காக மட்டும் அல்ல; ஆஞ்சனேயனின் உயர்வைக் கருதித்தான்!

(வளரும்)

Life is too Wonderful to be spent worrying

Nicco Uco Alliance Credit Ltd is part of the Rs. 600 Crores NICCO Group. This Company is one of the leading Non Banking Finance Company in India.

The Company is Primarily engaged in the business of Hire Purchase & Leasing having its Head Office in Calcutta and the Southern Divisional Office based at Chennai.

Nicco Uco Alliance Credit Ltd is the only NBFC in India having the ISO 9001 certification for all its products & services. The Company is a serious and committed player in the NBFC sector with a record of uninterrupted dividend payments since inception.

PROMOTERS	ASSOCIATE COMPANIES
Nicco Group	NICCO HELIFOSION LTD
UCO Bank	WEBEL NICCO ELECTRONICES LTD
IFC - Washington (A world bank affiliate)	NICCO PARKS & RESORST LTD

PERIOD	NON-CUMULATIVE DEPOSIT SCHEME - A				CUMULATIVE DEPOSIT SCHEME - B	
	Monthly	Quarterly	Half-yearly	Annually	Interest Rate	Effective Annual Yield
12 Months	12.00 %	12.00 %	12.50 %	13.00 %	13.00 %	13.00 %
24 Months	12.50 %	12.50 %	13.00 %	13.50 %	13.50 %	14.41 %
36 Months	13.00 %	13.00 %	13.50 %	14.00 %	14.00 %	16.05 %
60 Months	14.00 %	14.00 %	14.50 %	15.00 %	15.00 %	20.23 %
Minimum Amount (Rs.)	15000	10000	10000	10000	5000	

PERIOD	MONEY MULTIPLIER - SCHEME - C	
	Minimum Deposit Rs.	Maturity value Rs.
37 Months	10000	15000

NICCO UCO ALLIANCE CREDIT LTD.

Regd. Office : NICCO House, 2, Hare Street, Calcutta - 700 001.Tel : 248-5102 (6 Lines). Fax : (91) 33 2430783
Southern Divisional Office : **Aalim Centre, 3rd Floor, 82, Dr. Radhakrishnan Salai, Chennai - 600 004. Phone : (044) 8112446 / 8113548 / 8111651. Fax : (044) 8111959.**

Branches : • Bangalore ✆ 5580171 • Calcut ✆ 720456 • Cochn ✆ 361389 • Combatore ✆ 542376 • Hyderabad ✆ 3233806 • Madurai ✆ 630251 • Mettur ✆ 31813 • Mumbai ✆ 3723448 • Namakkal ✆ 32235 • Nasik ✆ 501807 • New Delhi ✆ 4651586 • Salem ✆ 448120 • Trichy ✆ 761168 • Tuticorin ✆ 327407 • Vellore ✆ 223006 • Vijayawada ✆ 483904

The Statutory Advertisement published in the Telegraph and Ananda Bazar Patrika on 27-9-2000

'டீன்ஏஜ்'களுடைய ஹாட் க்ரேஸ் விஜய்யின் வெற்றி கிராஃப் நடுவில் சரிந்தது உண்மை. ஆனால் திரும்ப 'குஷி'; 'ப்ரியமானவளே', 'ப்ரெண்ட்ஸ்', 'உதயா', 'பத்ரி' என்று செமை சூடு பிடித்துவிட்ட விஜய்யிடம் கல்கியின் டீன்ஏஜ் வாசகிகளுக்காக ஒரு ஸ்பெஷல் பர்சனல் பேட்டி...

மனைவி முன் நடிக்க மாட்டேன்!

சின்ன வயதிலேயே நடிக்க வந்து விட்டீர்கள். இதனால் டீன்ஏஜ் பருவத்திற்கே உண்டான சந்தோஷங்களை அனுபவிக்க முடியாமல் போய் விட்டதே என்ற ஏக்கம் எப்போதாவது வருவதுண்டா?

நிச்சயமா கிடையாது. இதுக்கு நான் இரண்டு காரணம் சொல்லுவேன்.

ஒண்ணு, இது நானே சூஸ் பண்ணிக் கிட்ட ஃபீல்டு, யாரும் என்னைப் பிடிச்சுத் தள்ளிவிடலே. சின்ன வயசில் அப்பாகூட ஷூட்டிங் ஸ்பாட்டிற்குப் போவேன். விஜய்காந்த் ஸார் படங்களில் நான்தான் ஜூனியர் விஜய்காந்த். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வம் ஜாஸ்தியாகி, ஒரு நாள் அப்பாகிட்டே போய் "என்னை ஹீரோ ஆக்குங்கப்பா!" அப்படீன்னு சொல்ற அளவுக்கு வளர்ந்திடுச்சு. அதனாலே, ஏண்டா இவ்வளவு சீக்கிரம் நடிக்க வந்தோம்னு நினைக்கறதுக்கு சான்ஸே இல்லே.

இரண்டாவது காரணம், இன்னிக்கு பொது இடங்களுக்குத் தனியாக போக முடியாத அளவிற்கு எனக்குப் புகழ் கிடைச்சிருக்கு... இது நான் டீன்ஏஜில் செய்த ஸாக்ரிஃபைஸ்னாலேதானே? ஒண்ணு கிடைக்கணும்னா, ஒண்ணை இழக்கணும்... இதுதான் லா ஆஃப் நேச்சர். அதைப் புரிஞ்சுக்கிட்டா இந்த மாதிரி

ஏக்கங்கள் ஏற்படாம ஈஸியாகப் பார்த்துக்கலாம்.

டீன்ஏஜ் ரசிகைகளின் அன்புத் தொல்லையை உங்கள் மனைவி ஸ்போர்டிவ்வாக எடுத்துக் கொள்கிறாரா?

ஷி இஸ் வெரி பிராட்மைண்டட். இந்த 'ஃபீல்டு'ஐப் பத்தி சங்கீதா நல்லாவே புரிஞ்சு வெச்சுக்கிட்டு இருக்காங்க. இன்ஃபாக்ட், ரசிகைகள் என் கூடப் பேசினாலோ ஃபோட்டோ எடுத்துக் கிட்டாலோ அந்த 'க்ரேஸ்'இல் தனக்கும் பங்கு இருக்குன்னு சந்தோஷப்படுறாங்க.

நான் ஷூட்டிங் போயிருக்கும்போது எனக்கு வரும் எல்லா கடிதங்களையும் படிச்சு, அதில் இருக்கிற சுவாரஸ்யமான லெட்டர்களைத் தனியாக எடுத்து வெச்சிடுவாங்க. எனக்கு ஃப்ரீ-டைம் கிடைக்கும்போது அதை என்கிட்ட கொண்டு வந்து கொடுத்து என் கைப்பட பதில் எழுதச் சொல்லுவாங்க. சமீபத்தில் இப்படித்தான் ஒரு டீன்-ரசிகை கைவலிக்க பக்கம் பக்கமாக லெட்டர் போட்டிருந்தாங்க. ''இந்த ரசிகை எவ்வளவு இன்வால்வ்மெண்ட்டோட எழுதியிருக்காங்க, இதுக்கு நீங்க ஒரு பத்து வரியாவது பதில் எழுதியே ஆகணும்!'' அப்படீன்னு உத்தரவே போட்டாச்சுன்னா பார்த்துக்குங்க. என்னோட எந்த ஃபேனும் டிஸ்அப்பாயிண்ட் ஆகிவிடக்கூடாது என்பதில் ரொம்பவே குறியாக இருப்பாங்க. மே பீ... அவங்களும் ஒரு காலத்தில் என்னோட ரசிகையாக இருந்ததாலே இப்படித் தோணுதுன்னு நானா நினைச்சுக்குவேன்.

உங்களைக் காதலித்த ஒரு ரசிகையைத் திருமணம் செய்திருக்கிறீர்கள். திருமணத்திற்கு முன்பு காதலிக்க உங்களுக்கு எப்படி நேரம் கிடைத்தது?

என்னோடது காதல் கல்யாணம் இல்லியே... அப்பா அம்மாவுக்கு சங்கீதாவை ரொம்பப் பிடிச்சிருந்தது. அவங்கதான் சஜ்ஜெஸ்ட் பண்ணாங்க. தொழில், சொந்த வாழ்க்கை இரண்டிலும் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்கிற பிரின்ஸிபிலைக் கடைப்பிடிக்கிறவன் நான். கொஞ்சம்கூட யோசிக்காமல் சரின்னு சொல்லிட்டேன். எல்லாம் பேசி முடிவானதுக்கப்புறம்... சங்கீதாகூட கல்யாணத்துக்கு முன்னாடியே நிறைய பேசணும் பழகணும், அவங்களைப் புரிஞ்சுக்கணும்... இதெல்லாம் ரொம்ப முக்கியம்ன்னு என் மனசுக்குப் பட்டுச்சு. அதனால் லண்டனுக்கு அடிக்கடி ஐ.எஸ்.டி. போட்டுப் பேசுவேன். ஷூட்டிங் ஷெட்யூல்களுக்கு நடுவில் எப்படியாவது ஒரு லண்டன் டிரிப்பை ஸ்குவீஸ் பண்ணி போயிட்டு வந்திடுவேன். சங்கீதாவோட நேச்சர், விருப்பு, வெறுப்பு இதெல்லாம் ஓரளவு கல்யாணத்திற்கு முன்னாடியே தெரிஞ்சு வைச்சுக்கிட்டேன். மத்தபடி காதலிக்கறது எல்லாம் இப்ப கல்யாணத்துக்கப்புறம்தான்! (வெட்கத்தோடு சிரிக்கிறார்)

மனைவி முன்பு காதல் காட்சிகளில் இயல்பாக நடிக்க முடிகிறதா?

அப்பா முன்னாடியே முடியலை, மனைவி முன்னாடி எப்படி முடியும்?

ஹீரோயினைக் கட்டிப்பிடிக்கறது முத்தம் கொடுக்கறது மாதிரியான ரொமான்ட்டிக் காட்சிகளை அப்பாவோட படங்களில் நடிக்க வேண்டிவரும்போது ரொம்ப நெளிவேன். 'நான் டைரக்டர், நீ

நடிகன், அவ்வளவுதான்!' 'அப்படீன்னு எவ்வளவோ சொல்லி என்னைக் கம்ஃபர்டபிளாக ஃபீல் பண்ண வைக்க அப்பா ரொம்ப முயற்சி பண்ணுவார். ஆனால், எனக்கு என்னவோ, அவர் அப்பா, நான் பிள்ளை அப்படீங் கறதுதான் மனசில் இருந்துகிட்டே இருக்கும்.

அதே மாதிரி, இப்போ சங்கீதா 'செட்' இல் இருக்கும்போது அவங்க என்னைப் பார்த்துக்கிட்டு இருக்காங்கங்கற ஃபீலிங் தான் என்னை டாமினேட் பண்ணுது. இயல்பா, ஸ்பான்டேனியஸா நடிக்க

சமீபத்தில் இப்படித்தான் ஒரு டீன்-ரசிகை பக்கம் பக்கமா கடிதம் போட்டிருந்தாங்க...

முடியலை. இதைப் புரிஞ்சுக்கிட்டு அவங்களே ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்திடறதில்லை... அப்படியே வந்தாலும் என் கண்ணில் படாமல் ஒரு ஓரத்தில் சேர் போட்டு உட்கார்ந்திடுவாங்க. (சிரிக்கிறார்.)

தனிக்குடித்தனம் வந்துவிட்டீர்களே, அம்மா சமையல் பிடித்ததா, மனைவி சமையல் பிடிக்குதா?

ஏதோ உங்களால் ஆன நல்ல காரியம், மாட்டிவிட்டு போகலாம்னு நினைக் கிறீங்களா? இருபது வருஷமா அம்மா சமையலை ரசிச்சு ருசிச்சு சாப்பிட் டிருக்கேன், திடீர்னு பிடிக்காமல் போயிடுமா? என் மனைவியும் நல்லா சமைக்கிறாங்க, அதில் ஒண்ணும் சந்தேகம் இல்லை. என்னோட ஃபேவரிட் மட்டன் குழம்பு, மட்டன் வறுவலை எனனுடைய டேஸ்டுக்கு ஏத்த மாதிரி சமைக்கக் கத்துக்கிட்டு இருக்காங்க. ஆனா அவங்க கத்துக்கிட்டது அம்மாவோட சமையல் ஸ்கூலில்... அதனால் அதே கைப்பக்குவம்.

உங்கள் 'பர்சனல் ஷாப்பிங்'ஐ நீங்களே செய்து கொள்வீர்களா அல்லது மனைவியுடைய சாய்ஸ்தானா?

கல்யாணத்துக்கு முன்னாடி நானே ஐடியா பண்ணி நானே ஷாப்பிங் பண்ணுவேன்! ஆனால் இப்ப அவங்க நிறைய ஐடியாஸ் கொடுக்கிறாங்க. இது உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும்... அது வேண்டாம், ஸூட் ஆகாது... பாட்டு ஸீனில் இப்படி டிரெஸ் பண்ணிக்குங்க அப்படீன்னு, காஸ்டியூமர் லெவலில் இல்லைன்னாலும் க்ரியேடிவ்வா பல ஐடியாஸ் கொடுக்கிறாங்க. நானும் அவங்க சொல்றதிலே நிறைய எடுத்துக்குவேன். ஆனால் ஐடியா எல்லாம் வீட்டில் இருந்து சொல்றதோடு சரி, கூட எல்லாம் ஷாப்பிங் வர்றது கிடையாது.

'அப்பா' ஆகிவிட்டோம் என்று தெரிந்து கொண்ட அந்த சில நிமிடங் களில் உங்கள் ரியாக்ஷன் என்ன?

லண்டனில்தான் குழந்தை பிறந்திச்சு. எனக்குப் பையன் பிறந்திருக்கான்னு ஃபோன் மூலம் தகவல் சொன்னாங்க. "அப்படியா... சரி!" - இதுதான் என்னோட முதல் ரியாக்ஷன். ஆனால் நேரில் போய் முதல் முதலில் குழந்தையைப் பார்த்த போது ஒரு இன்னர் ஃபீலிங் வந்தது பாருங்க.. என்னால எப்படி டிஸ்கிரைப் புண்றதுன்னு தெரியலை. தொட்டுத் தூக்கினதும் 'இது என்னோட குழந்தை...' அப்படீங்கற ஒரு பரவசம் வந்திச்சுப் பாருங்க... ப்பா... எந்த ஆணோட வாழ்க்கையிலும் அந்தச் சில நிமிடங்களை மறக்க முடியாதுன்னு நினைக்கிறேன், இல்லை?

குழந்தைக்கு உங்களை அடையாளம் தெரிகிறதா?

நல்லாவே தெரியுது! ஒவ்வொரு நாளும் புதுசுபுதுசா என்னன்னவோ பண்ணுறான். விதவிதமா கையை, காலை ஆட்டி ஏதேதோ பேசுறான். நான் ஏதாவது

சொன்னேன்னா ரொம்பப் புரிஞ்ச மாதிரி சிரிக்கிறான். ஷூட் டிங் எப்படா முடியும், வீட்டுக்கு ஓடிப்போய் அவனைத் தூக்கி வெச்சுக்கலாம்னு ஆசையா வரும்.

குழந்தைக்கு என்ன பெயர் வைத் திருக்கிறீர்கள்?

என் மனைவியின் பெயரில் இருக்கும் முதல் மூணு எழுத்தையும் என் பெயரில் இருக்கும் கடைசி இரண்டு எழுத்தையும் சேர்த்து "சஞ்சய்'ன்னு வெச்சிருக்கு.

குழந்தையையும் (மனைவியையும்(?)) கொஞ்சுவது போக கிடைக்கும் மீதி நேரத்தில் இன்டர்நெட், கம்ப்யூட்டர் இதெல்லாம் உண்டா?

இன்டர்நெட்டில் அப்பப்போ புது ஸைட்ஸ் பார்க்கறதுண்டு, ஆனால் 'சாட்' பண்றதுக்கெல்லாம். நேரம் கிடைக்காது. ஆனா, ஹிந்தி, இங்கிலீஷ்னு நிறைய படம் பார்ப்பேன், ஓடாத படங்கள் உட்பட... ஏன்னா அதிலே நாலு நல்ல விஷயம் கிடைச்சா கத்துக்கலாம் இல்லியா? நான் அடிக்ட் ஆன சமாசாரம் ஒண்ணு இருக்கு. அதுதான் "ஃபார்முலா கார்" அப்படீங்கற கம்ப்யூட்டர் கேம். அதில் உட்கார்ந் திட்டேன்னு வெச்சுக்கங்க, நேரம் போறது தெரியாம ஆடிக்கிட்டே இருப்பேன்.

படங்களில் பார்க்கும்போது சாஃப் டான ஆளாகத் தெரிகிறீர்களே, நிஜத்தில் எப்படி?

ரியல்-லைஃபில் நான் இன்னும்கூட ஜாஸ்தி சாஃப்டான காரெக்டர். இன் ஃபாக்ட், நான் சாஃப்ட்டான ரோல்ஸ் செலக்ட் பண்ணுகிற காரணமே அது என்னோட குணத்தோடு பிளெண்டு ஆகுது அப்படீங்கறதுக்காகத்தான். இப்போ, படத்தில் போலீஸ் டிரெஸ் போட்டுக்கிட்டு கையில் 'ஸ்டென்கன்'னோடு நான் வந்து நின்னா, நீங்க எல்லாரும் ரசிப்பீங்களா இல்லையாங்கறது அடுத்த விஷயம், முதலில் எனக்கே அது ரொம்ப அன்ஈஸியாக இருக்கும்.

'பிரண்ட்ஸ்' படத்தில் நடித்துக் கொண்டு இருக்கிறீர்கள், நிஜ வாழ்க்கை யில் உங்களுடைய நண்பர்கள் எப்படி?

என்னோட ரொம்ப க்ளோஸ் ஃபிரண்ட்ஸ் அப்படீன்னு பார்த்தா, அஞ்சு பேர் இருக்காங்க. இரண்டு பேர் ஸ்கூல்-நாட்களில் கிடைச்சவங்க, மூணு பேர் காலேஜ்-லைஃபில் அறிமுகமானவங்க. அஞ்சு பேரும், நான் நல்லா இருக்கணும்னு மனப்பூர்வமா நினைக்கறவங்க. உண்மை யான நண்பர்கள் யாரு?... நம்பளை நிறைகுறைகளோட அப்படியே ஏத்துக் கறவங்க தானே?... இவங்க எல்லாரும் என்னை 'அட் ஃபேஸ் வால்யூ' ஏத்து கிட்டவங்க. ஆனால் அதே சமயத்தில் என்னோட குறைகளைப் பத்தி நானே கேட்கும்போது வெளிப்படையா புட்டு புட்டு வெச்சிடுவாங்க. இப்போ நான் ஒரு படத்தில் நடிச்சுக்கிட்டு இருக்கேன்னு வெச்சுக்கங்க; அது ஓடுமா ஓடாதான்னு 'ஃபிராங்க்'ஆகச் சொல்லிடுவாங்க. அவங்க சொல்றது கரெக்டா இருக்கும். நான் பல தடவை பார்த்திட்டேன். அப்பா-அம்மாகிட்டே, மனைவிகிட்டே பகிர்ந் துக்க முடியாத விஷயங்களை நண்பர் கள்கிட்டே பகிர்ந்திக்கலாம்னு சொல்லு வாங்க, அது மாதிரி நிறைய விஷயங்களை அவங்ககிட்டே மனம்விட்டுப் பேசி யிருக்கேன்.

சமீபத்தில் உங்களை ரொம்ப பாதிச்ச விஷயம்...

சமீபத்தில் எச்.ஐ.வி. குழந்தைகளைப் பத்தி கல்கியில் வந்த கட்டுரையைப் படிச்சிட்டு இரண்டு நாள் தூக்கம் வராமல் தவிச்சிருக்கேன். ஃபோட்டோக் களில் இருந்த அந்தக் குழந்தைகளோட முகம் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்துகிட்டே இருந்திச்சு. அப்பா, அம்மா செய்யற பாவம் குழந்தைகளை 'இன் டைரக்ட்'ஆ பாதிக்கும்னு சொல் வாங்க, ஆனா அதுஎப்படி நேரடியாவே பாதிக்குதுன்னு படிச்சப்போ ரொம்ப அதிர்ச்சியா இருந்திச்சு. புது வருஷத்தில் ஒரு நாளாவது அந்தக் குழந்தைகளோடு செலவழிக்கணுமன்னு முடிவு செஞ் சிருக்கேன்!

- ஜெயந்தன்

மாணிக்க வாசகர் அருளிய **திருவாசகம்** (மூலமும் தெளிவுரையும்)

புலவர் கருப்பூர் **மு.அண்ணாமலை** அவர்கள் இனிய எளிய நடையில் அற்புதமான உரை விளக்கம் எழுதியுள்ளார்கள்.

விலை ரூ. 100/-

மகாகவி காளிதாசரின்

விலை ரூ. 200/-

உத்தர காலாமிர்தம்

காளி அருள் பெற்ற மகாகவி காளிதாசர் எழுதிய அற்புதமான இந்நூலில் ஜோதிட விஷயங்கள், கிரக பலாபலன்கள், பிரசன்ன ஜோதிடம், நல்லநாள் குறிக்கும் விதம், இந்து பண்டிகைகளை நிர்ணயிக்கும் விதம், தத்து எடுக்கும் சாஸ்திரங்கள், திருமண சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள், சிற்ப சாஸ்திரங்கள், தெய்வ வழிபாட்டு முறைகள், தாம்பத்திய உறவு ரகசியங்கள், திதி, திவசம், தீட்டு சாஸ்திரங்கள் மற்றும் இது போன்ற ஏராளமான இந்து சாஸ்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

மகாகவி காளிதாசர் வடமொழியில் எழுதி தமிழில் இதுவரை வெளிவராத அரிய இந்நூலுக்கு எட்டயபுரம் க.கோபிகிருஷ்ணன் விருத்தியுரை எழுதியுள்ளார்.

VPPயில் புத்தகங்களைப் பெற தெளிவான முகவரியுடன் தேவையான புத்தகங்களுக்கு எழுதுங்கள். உங்கள் ஊர் புத்தகக் கடைகளிலும் கிடைக்கின்றது.

குமரன் பதிப்பகம்

2, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார் அருகில்,
தியாகராயநகர், சென்னை–600 017, ✆ : 8264046

பொங்கல் தள்ளுபடி விற்பனை 1.1.2001 முதல் 16.1.2001 வரை

எங்களிடம் **ராணி சாரீஸ்,** மதுரை கங்கிடி புடைவைகள் (9, 9 1/2, 10 கெஜம்), பெங்கால் காட்டன் சாரீஸ், செட்டி நாடு காட்டன், நெகமம் காட்டன், உயர்தர மதுரை கைத்தறி புடவைகள், அஸ்லாம் சில்க், பாதிக் சாரீஸ், பாலிகாட் சாரீஸ், லக்னவ் சிக்கன் ஒர்க்ஸ், பெங்கால் பிரிண்டட் சில்க், காட்டன் சுடிதார் துணிகள், பாலிகாட் சுடிதார் துணிகள் 4 முழம், 8 முழம் வேஷ்டிகள், லுங்கிகள் கிடைக்கும்.

சூரத் சிந்தடிக் சாரீஸ் & சுடிதார் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.

Tailoring Attached: *சுடிதார் மற்றும் பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும்.*

வீட்டில் வைத்து விற்போருக்கு சில நிபந்தனைகளின் பேரில் கடன் வசதி அளிக்கப்படும்.

Credit allowed to those selling sarees in their residence on certain terms

MADURAI TEXTILES

மதுரை டெக்ஸ்டைல்ஸ்

No.7 (old No.2), சிவப்பிரகாசம் சாலை,
பாண்டி பஜார், சென்னை - 17. போன்: 4332197
(அகஸ்தியர் கோயில் அருகில்)

✉ என்னதான் முயற்சி செய்து 2001 புதுவருடக் காலண்டரை ஒரே பக்கத்தில் பெங்களூர் டி.ஆ. நடராஜன் உருவாக்கினாலும் மக்களின் சோம்பேறித்தனத்துக்குத் தனித்தனி மாதக் காலண்டர்கள்... இல்லையில்லை தினசரி காலண்டரே உதவும். இருந்தாலும் அவரது முயற்சிக்குப் பாராட்டு!
சென்னை - 14, அய்யாறு வாகதேவன்

✉ "அல்கோரைச் சந்தித்த லூசு" - வி.ஆரின் கற்பனை வளம் வெகு அபாரம்! அதே சமயத்தில் நம்மூர் அரசியல் நிலவரம் குறித்து வேதனையும் தோன்றியது!
நெய்வேலி - 3, சாந்திசுந்தர்

✉ நாட்டில் எத்தனையோ பிரச்னைகள் தலை விரித்து ஆடிக் கொண்டிருக்க, அயோத்தி பிரச்னையை அவசியம் இல்லாமல் இண்டி. கிளறி ஆதாயம் தேடப் பார்க்கும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளுக்குத் தலையங்கம் வாயிலாக சொன்ன அறிவுரை, சிறப்பான ஒன்றாகும்.
கும்பகோணம் - 1, எஸ்.கே. மூர்த்தி

✉ கதைகேட்டு, கம்பெனி பார்த்துத்தான் அட்வான்ஸ் வாங்கணும். மேலும் பணத்தை விட, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது தான் முக்கியம் என்பது எஸ்.வி. சேகரிடம் 2001ல் நாம் கற்றுக் கொண்ட பாடம்...!
கீழ்வேளூர், கோ. தியாகராஜன்

✉ நாடாளுமன்றத்தில் பொறுப்பின்றிப் பிதற்றிய பிரதமருக்கும், அவர் பேச்சினால் நாடாளுமன்றத்தை ரணகளமாக்கிய எதிர்க்கட்சிகளுக்கும் தலையங்கம் சரியான சாட்டையடி. பிரதமர் நாட்டு மக்களின் தலைவர் என்பதை மறந்து, ஒரு கட்சியின் தலைவர் போன்று பேசி வம்பை விலைக்கு வாங்கியது நாட்டின் துரதிர்ஷ்டம்.
திருச்சி-1, எச். கௌஸ்பேக்

✉ "ரிமோட் பகுதியில் வினோத் குறிப்பிட்டுள்ளது போல் 'மார்கழி மகா உற்சவம்' என்ற பெயரில் விஜய் டீ.வி. தினமும் ஒரு மணி நேரம் கச்சேரிக்கு ஒதுக்கியிருப்பதை 'தியாகம்' என்று சொல்லக் கூடாது. அந்த ஒரு மணி நேரமும் வேறு சேனல் பக்கம் போகாமல் ரசிகப் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டு 'சாதனை'தான் செய்கிறார்கள்!"
பொன்மலை, ஆர். பிரகாஷ்

✉ 'ஷாலினி அஜித்குமாரின்' "290க்கு என்ன அர்த்தம்" - படித்து, இதுவரையில் அவர் களிருவர் பற்றித் தெரிந்திராத பற்பல விவரங்களைத் தெரிந்துகொண்டேன்.
மதுரை - 10, கே.எஸ். ராமய்யர்

✉ 'அல்கோரைச் சந்தித்த லூசு' எனும் கட்டுரை படித்தேன். நம் நாட்டைப் பற்றி இவ்வளவு கேவலமாகச் சித்திரித்ததை நினைத்துக் கோபம் ஏற்பட்டது. ஆனால் இதுவே உண்மை நிலை என்று எண்ணும் போது, வருத்தம் ஏற்பட்டது.
கொட்டிவாக்கம், டி. மாரிமுத்துகுமார்

வாட்டமேஜை

ஆத்ரேயா

இப்பொழுது புதுப்பொலிவுடன்



நைட்டீஸ், ரெடிமேட் ரவிக்கைகள், பெட்டிகோட்ஸ் –

ATHREYA™

1. Jambulinga Street, (Entrance from Valluvar Kottam High Road), Nungambakkam, Chennai - 600 034.

Phone: 822 6586 Fax No. 5360076. Tlx: 041-6753 RAJA IN . E.Mail: ols@md3.vsnl.net.in

ஆத்ரேயா ரெடிமேட் ரவிக்கைகள் கிடைக்கும் இடம்: EVE'S Park, 108, Bharathiyar St, Karaikal. Ph:20288

Ganesa Lakshmi Textiles - 146 - Lohg bazzar - Vellore

VISIT US AT www.athreyawoman.com

All major credit cards Accepted

CHARY'S

Help Ever !

O P W H PEACE

Hurt Never !!

பிரசாந்தி முதியோர் நல்வாழ்வு இல்லம் (பதிவு)

Regd. Office : MIG Block No.38, Flat L, West Avenue,
United Colony, Thiruvanmiyur, Chennai-600 041.
Ph : 4425763, (Home) 2443626, 2449712, Pager : 9628-453177

அன்புடையீர், வணக்கம்.

ஆதரவற்றவர்களுக்கு இருக்க இடம், உடுக்க உடை , உண்ண உணவு மற்றும் மருத்துவ உதவி இலவசமாக அளித்து அவர்களை கடைசி வரை அனாதை என்ற எண்ணமே வராதபடி பராமரிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது இந்த பிரசாந்தி முதியோர் நல்வாழ்வு இல்லம். சென்னையை அடுத்துள்ள ஆதம்பாக்கம் மற்றும் மதுரவாயிலில் அமைந்துள்ள முதியோர் இல்லத்திற்கு செலவாகும் தொகையை நல் இதயம் படைத்தோரிடமிருந்து பெற்றுத்தான் இந்த இல்லத்தை நடத்தி வருகிறோம். பணமோ பொருளோ எந்த வகையிலும் உங்கள் நன்கொடை இருக்கலாம். நன்கொடைகள் Cheques/DD/ MO in favour of **Prasanthi Old Age Welfare Home & Charitable Trust** என்ற பெயரில் எடுத்து மேலே உள்ள விலாசத்திற்கு அனுப்புமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ஆதரவற்றோரின் இதயங்களிலிருந்து வரும் நல்வாழ்த்துக்கள் உங்களை என்றும் வாழவைக்கும்

நன்கொடைகளுக்கு வருமாணவரி சட்டம் 1961, பிரிவு 80G மூலம் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது

முதியோர் தொண்டில்,
ராஜகோபால பாலாஜி
(ஸ்தாபகர்)

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU SRI VENKATESWARA STEEL HOUSE

உழைப்பால் உயர்ந்த உத்தமர்
71–வது பிறந்த நாள் (30.12.2000) விழா வாழ்த்துக்கள்

SRI VENKATESWARA STEEL HOUSE
5/12 & 5/14, Ranganathan Street, Star Bazar, T. Nagar, Chennai - 600 017
Phone: 4340088

Cheapest price in all types of Stainless steel articles, Cookers, Mixies, Gas stoves, Brass, Aluminium, plastic goods & toys

குரு சுக்ர விக்னேஸ்வரரின் எதிரில் அமையப் பெற்றுள்ள நவக்கிரகங்களை வழிபடுதல் சாலச் சிறந்தது.
ஆலயம் போன்:4337181

5% தள்ளுபடி + ஒரு தெய்வீக அன்பளிப்பு!

உதித்ய மகரிஷியின் வம்சத்தில் உதித்த தேவி உபாசகர் பிரம்ம ஸ்ரீ மூக்கனூர் திரு. P. சுப்பிர மணிய ஐயர் அவர்கள் லோக நன்மைக்காக நவக்கிரக தோஷங்கள் நீக்கும் குரு-சுக்கிர விக்னேஸ்வரர் ஆலயத்தை சென்னை 24 A, அரங்கநாதன் சுங்கப்பாதை காவேரி நகர், சைதாப் பேட்டையில் ஸ்தாபித்து உள்ளார். ஓம் ஸ்ரீ குரு சுக்கிர விக்னேஸ்வராய நமः என்ற தாரக மந்திரத்தின் அட்சரங்கள் 18, சித்தர்கள் 18, கீதையின் அத்தியாயங்கள் 18, சபரி மலை தர்ம சாஸ்தாவிற்கு 18 படிகள் என அடுக்கிக் கொண்டே போகலாம். எனவே இம் மந்திரத்தை தினமும் 18/21/48/108 முறை உச்சரித்து விக்னேஸ்வரர்க்கு எதிரில் அமைந்துள்ள குரு பகவான் மற்றும் நவக்கிரகங்களை வழிபடுபவர்கள் வாழ்வில் சிறப்படைவார் என்பதில் ஐயமில்லை. மேலும் இக்கோவிலில் அவரது மகனால் கொண்டு வரப்பட்ட மானசரோவர் புனித நீர், மணல் மற்றும் லிங்க ஸ்வரூபமான மூர்த்தங்களை பிரதிஷ்டை செய்தது குறிப்பிடத் தக்கது. இவ்வாறாக இறைப்பணி, மக்கள் பணி செய்து வரும் தேவி உபாசகர் பிரம்ம ஸ்ரீ மூக்கனூர் திரு. **P. Subramaniya Iyer** தனது துணைவி திருமதி அழமேலு அம்மாளுடன் பல்லாண்டு நலமாக வாழ்ந்து எல்லோரையும் ஆசீர்வதிக்க வேண்டுமாய் வேண்டுபவர்கள் **குரு சுக்ர விக்னேஸ்வரர் பக்த கோடிகள்**

CHEAPEST PRICE SHOP SRI VENKATESWARA STEEL HOUSE

CHEAPEST PRICE SHOP SRI VENKATESWARA STEEL HOUSE

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU SRI VENKATESWARA STEEL HOUSE

டூன்ஏஜ் ஜாயிண்ட்

F1 ரேஞ்சுக்கா...

ரேஸ்காரா

கோ கார் டிங்... குட்டிக் கார் ரேஸ்! 160 ரூபாய் கட்டவேண்டியது. "உங்கள் பத்திரத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல!" என்று எழுதி நீட்டப்படும் பத்திரத்தில் 'ச்சேச்சே, நமக்கு அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது' என்று ஒரு தடவைக்கு இரண்டு தடவை சொல்லிக்கொண்டே கையெழுத்து போட வேண்டியது. ஹெல்மெட்டை மாட்டிக் கொண்டு கர்ல்-ஃபிரெண்டை பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது. கொடி அசைந்தவுடன் (காலை முழுசாக நீட்டினால் ப்ரேக்கும் ஆக்ஸிலரேட்டரும் எட்டும்) மினி ரேஸ்-காரை ரேஸ்-டிராக்கில் செலுத்த வேண்டியதுதான்! 'வருங்கால F1 டிரைவர்' கனவை சுமந்து கொண்டு திரியும் மும்பை இளசுகள் அந்தேரி - ஹீராநந்தானி கார்டன்ஸில் இருக்கும் இந்த கார்-ரேஸிங் சென்ட்டரை மொய்த்துத் தள்ளுகிறார்கள்.

— ஜெய்ஸ்ரீ ராஜ்

"டீப்பிங் ஆகட்டும், ஜெராக்ஸ் ஆகட்டும், பேஜ்மேக்கிங் ஆகட்டும், 'அவுட்புட்'இன் தரத்தைப் பொறுத்த வரை 100% உத்தரவாதம் வேண்டும் என்றால் ஸ்டூடண்ட்ஸ் ஜெராக்ஸ்தான்!"- இந்த நம்பிக்கையை ஏற்படுத்துவது சாமானியமான காரியமல்ல. எப்படிச் சாதித்தீர்கள்?

ஒரு ரூபாய்க்கு ஒரு ஜெராக்ஸ் காப்பி எடுக்க வாடிக்கையாளர் ஒருவர் வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். காப்பி எடுக்கும்போது ஒரு சின்ன குறை ஏற்பட்டு விடுகிறது. அது, வாடிக்கையாளரின் கண்ணுக்கே தெரியாத குறையாக இருக்கலாம் அல்லது அவர் அதைப் பெரிதுபடுத்தாமல் வாங்கிக்கொண்டு போகத் தயாராக இருக்கலாம். ஆனால் அந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? அவர் கையிலிருக்கும் அந்தக் காப்பியை வாங்கிக் கிழித்துப் போட்டுவிட்டு எத்தனை காப்பி வீணாகிப்போனாலும் கவலைப்படாமல் 100% குறைவற்ற காப்பியை எடுத்துக் கொடுக்கும் வரை ஓயக்கூடாது. இதுதான் நான் என் ஊழியர்களுக்கு இட்டிருக்கும் முதல் கட்டளை, முக்கியமான கட்டளை. நீங்கள் சொன்ன நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்த கட்டளையும் இதுதான்.

நானே அடிப்படையில் ஒரு 'குவாலிட்டி பெர்ஸன்'தான் என்றாலும் எனக்குத் தரத்தை போதனை செய்த புத்தர்கள் யார் தெரியுமா?

மானவர்கள் எனக்குக் கற்றுத்

தந்தார்கள்!

'ஸ்டூடண்ட்ஸ் ஜெராக்ஸ்' புகழ் நா.அருணாசலம் தம் வெற்றி ரகசியங்களை விளக்குகிறார்...

மாணவர்கள்தான்.

அடையாறில் முதல் கடையை நடத்தத் துவங்கியவுடன் என்னுடைய முதல் வாடிக்கையாளர்கள் ஐ.ஐ.டி., அண்ணா யுனிவர்ஸிட்டி, மெட்ராஸ் யுனிவர்ஸிட்டி மாணவர்கள். வேலையை ஒழுங்காகச் செய்து முடிக்கும்வரை இவர்கள் விடமாட்டார்கள். பணத்தைப் பற்றி யோசிக்காமல் மணிக்கணக்காக நேரம் விரயமாகிறதே என்று சளைக்காமல், தரம், தரம், தரம்... அது ஒன்றிலேயே குறியாக இருப்பார்கள். அவர்கள் திருப்திக்கு வேலை செய்ததே எனக்குப் பெரிய பயிற்சியாக அமைந்துவிட்டது. தரம் எவ்வளவு முக்கியம் என்று நான் புரிந்து கொண்டது அப்போதுதான்.

தரத்தோடு வேலை செய்து கொடுக்க வேண்டும் என்று உங்கள்வரை ஆசைப் படுகிறீர்கள், சரி. 24 கிளைகளிலும் இதைச் சாத்தியப்படுத்துவது நடைமுறையில் இலேசுபட்ட காரியம் இல்லையே...

உண்மைதான். இதற்கு இரண்டு உத்திகளைக் கையாளுகிறேன்.

ஜெராக்ஸ் தொழில் என்பது மெஷீன்களை நம்பிச் செய்யும் ஒன்று. வேலை தரமாக இருக்க வேண்டும் என்றால் மெஷீனின் பராமரிப்பு கச்சிதமாக இருக்க வேண்டும். இதில் நான் ரொம்பவே கண்டிப்பாக இருப்பேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்.

மெஷீனில் இருக்கும் 'டிரம்'இல் சில சமயம் புள்ளி விழுந்துவிடும். புள்ளி விழுந்துவிட்டால் அவுட்புட் கெட்டுவிடும். நியாயமாகப் பார்த்தால் இந்தப் புள்ளி 1,50,000 காப்பி எடுத்த பிறகுதான் வர வேண்டும். ஆனால் சில சமயம் 5000 காப்பி எடுத்தவுடனோ அல்லது 50,000 காப்பி எடுத்தவுடனோ வந்துவிடும். இன்னும் 1,50,000 காப்பி எடுக்கவில்லையே, எடுத்த பிறகு மாற்றிக் கொள்ளலாம் என்று நிறையபேர் புள்ளி விழுந்த 'டிரம்'மோடு மெஷீனை ஓட்டுவார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை அந்த 'டிரம்'ஐ வைத்து எத்தனை காப்பி எடுத்திருக்கிறோம் என்பது முக்கியமல்ல, புள்ளி விழுந்துவிட்டது என்பதுதான் முக்கியம். ஒரு 'டிரம்'இன் விலை 10,500 ரூபாய், இருப்பினும் செலவைப் பற்றி யோசிக்காமல் அதைத் தூக்கிப் போட்டுவிட்டு புது டிரம் பொருத்திதான் மெஷீனை ஓட்டுவேன். இது தான் முதல் உத்தி.

நான் கையாளும் இரண்டாவது உத்தி, எல்லா கிளைகளில் வேலை பார்க்கும் அனைத்து ஊழியர்களையும் ஒரே இடத்தில் தயாரித்து அனுப்புவதுதான். 24 கடைகளில் இருக்கும் டைப்பிஸ்டுகளும் சரி ஜெராக்ஸ் ஆபரேட்டர்களும் சரி கடை நிர்வாகிகளும் சரி, அடையாறு கடையில் என்னுடைய நேரடி மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டவர்கள். தயாரிக்கும் இடம் ஒன்றாக இருக்கும்போது தயாரிப்பின் தரமும் ஒன்றாகத்தானே இருக்க முடியும்?

வாடிக்கையாளர்களோடு நெருக்கமாகப் பழகும் சுபாவம், ஒரு 'கஸ்டமர்-ஃபிரெண்ட்லி அப்ரோச்', சொல்லி வைத்தாற்போல் உங்கள் எல்லா ஊழியர்களிடம் இருக்கிறதே, அவர்களை எப்படி ஊக்குவிக்கிறீர்கள்?

வேலைக்குத் தேவையான நேரடி விஷயங்களை நாம் எந்த அளவு கவனத்தோடு அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறோமோ அதே அளவு கவனத்துடன் அவர்களுக்கு நமது வாடிக்கையாளரைப் பற்றி, அவர் யார், எப்படிப்பட்டவர், எதை எதிர்பார்த்து நம்மிடம் வருகிறார் என்பதையும் விளக்க வேண்டும். வாடிக்கையாளர் தான் நமக்கு வாழ்க்கை, அவரது திருப்தி

தான் நமக்கு வியாபாரம், அதைச் செய்வதற்குத்தான் நம்மை இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள் என்று அவரை உணரச் செய்ய வேண்டும். வாடிக்கையாளரைப் பற்றி நாம் சொல்லிக் கொடுப்பது 90 சதவீதமாகவும், ஊழியர் தானாகத் தெரிந்து கொள்வது 10 சதவீதமாகவும் இருந்துவிட்டால் பிரச்னையே வராது. இதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

இதையெல்லாம் மீறி ஒரு ஊழியர் வாடிக்கையாளரிடம் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று தெரியவந்தால், அடுத்த நிமிடமே, ஈவு இரக்கமில்லாமல் அவரை வேலையிலிருந்து தூக்கிவிடுவேன்.

எலக்ட்ரானிக் டைப்ரைட்டரில் அவுட்புட் எடுத்துக் கொண்டு இருந்த காலகட்டம். அப்போதுதான் இந்தத் தொழிலுக்கே உண்டான ஒரு பெரிய புரட்சி நடந்தது- அதுதான் லேஸர் ப்ரிண்ட்டர். 6 நிமிடத்திற்கு ஒரு பக்கம் பிரிண்ட் எடுக்கும் முறை தூக்கி எறியப்பட்டு 1 நிமிடத்திற்கு 6 பக்கம் பிரிண்ட் எடுக்கும் தொழில்நுட்பம் வந்தது. இந்த லேஸர் ப்ரிண்ட்டரை ப்ளூ ஸ்டார் என்கிற கம்பெனிதான் தமிழ் நாட்டில் மார்க்கெட் செய்தார்கள். டி.வி. எஸ். லூகாஸ் முதல் மெஷீனை வாங்கியிருக்கிறார்கள், நீங்கள் அடுத்ததை வாங்குங்கள் என்று எங்களை அணுகினார்கள். என் மகன் எலெக்ட்ராளிக்ஸ் என்ஜினீயர், அவன் அபிப்ராயத்தைக் கேட்டேன். நெளிவு சுளிவுகளை அலசி ஆராய்ந்து, 'வாங்கலாம்' என்றான். 2.6 லட்சம் கொடுத்து உடனே வாங்கிவிட்டேன்.

"என்னுடைய வெற்றிக்கு அஸ்திவாரம் உழைப்பு, உழைப்பு, உழைப்பு தான்!"

ஆறு மாதத்திற்கு வியாபாரம் சக்கை போடு போட்டது. அடுத்த ஆறு மாதத்திற்கு, நீங்கள் நம்பமாட்டீர்கள் - சுத்தமாக வியாபாரம் படுத்துவிட்டது. கடையே நிசப்தமாக இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஆஹா... தவறு செய்துவிட்டோம் போலிருக்கிறது என்று முதலில் நடுங்கிவிட்டேன். ஆனால் விஷயம் மெள்ள மெள்ளப் புரிந்தது. நாங்கள் இயங்கிக் கொண்டிருந்தது மாணவர்களின் சமஸ்தானத்தில். தீஸிஸ், ப்ராஜெக்ட் ரிப்போர்ட் என்று ஆறு மாதம் எங்கள் கடையைச் சுற்றி சுற்றி வந்தவர்கள் அடுத்த ஆறு மாதம் எல்லாவற்றையும்

ஊழியர்கள் செய்யும் எந்த குற்றத்திற்கும் என்னிடம் மன்னிப்பு உண்டு, வாடிக்கையாளர் சம்பந்தப்பட்டதைத் தவிர. காரணம், 'நல்ல பெயர்' என்பது எத்தனையோ பேர் எத்தனையோ வருடம் உழைத்த பிறகு கிடைக்கும் ஒரு பரிசு, அதைப் பாழ் பண்ண ஒரே ஒரு நொடியும் ஒரே ஒரு ஊழியரும் போதுமே!

24 கிளைகள் திறந்திருக்கிறீர்கள், ஒரு குறிப்பிட்ட இடத்தில் திறக்க வேண்டும் என்று எப்படி முடிவு செய்கிறீர்கள்?

எந்த மாதிரியான இடங்களில் கடையைத் திறக்க வேண்டும் என்கிற சூட்சுமத்தை நான் தெரிந்து கொண்டது ஒரு சுவாரஸ்யமான கதை.

அப்போது அடையாறில் மட்டும் தான் கடை, XT கம்ப்யூட்டரில் ஃபீடு செய்து

மூட்டை கட்டி வைத்துவிட்டு புத்தகங்களுக்குள் அடைக்கலம் புகுந்துவிட்டார்கள். சரி, இந்தக் குறையை எப்படி நிவர்த்தி பண்ணுவது?

அலுவலகங்கள் நிறைந்த இடத்தில் இன்னொரு கடை திறக்கலாம் என்று முடிவு செய்தேன். அலுவலகங்கள் வருடம் பூராவும் இயங்கித்தானே ஆகவேண்டும்? அண்ணா சாலையில் கடையைத் திறந்தேன். நான் நினைத்தபடி வருடம் முழுவதும் கூட்டம் வந்தது. ஆனால் ஒரு புது மாதிரி பிரச்னை. காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கூட்டம் 'ஜேஜே' என்று இருக்கும், சரியாக மாலை 5.00 மணிக்கு இடங்கள் ஒன்றுகூட சோடை போகவில்லை என்பது மனத்திற்கு நிறைவான ஒரு விஷயம்.

கம்ப்யூட்டரை சர்வசாதாரணமாக எல்லோரும் வாங்க ஆரம்பித்துவிட்டார்களே, இது உங்கள் தொழிலைப் பாதிக்கவில்லையா?

நிச்சயம் பாதிக்கிறது. ஸ்டடி ரூமில் கம்ப்யூட்டரை வைத்த காலம் போய், கிச்சனில் வைத்து, சமையல் செய்து கொண்டே கம்ப்யூட்டரை ஆபரேட் செய்யும் காலம் வந்துவிட்டது. நாங்களே டைப் செய்து கொள்கிறோம் நீங்கள் ஃபிளாப்பியைப் பிரிண்ட்-அவுட் எடுத்துத் தாருங்கள்

"வாழியர்கள் செய்யும் எந்த குற்றத்திற்கும் என்னிடம் மன்னிப்பு உண்டு, வாடிக்கையாளர் சம்பந்தப்பட்டதைத் தவிர!"

எல்லாரும் காணாமல் போய்விடுவார்கள். விஷயம் இன்னும் கொஞ்சம் தெளிவாகப் புரிந்த மாதிரி இருந்தது.

அடுத்து தி.நகரைத் தேர்ந்தெடுத்தேன். காரணம், வியாபாரிகள் மற்றும் வக்கீல்கள், சார்டர்டு அக்கௌண்ட்டண்ட்டுகள் மாதிரியான ப்ரொஃபெஷனல்கள் புழங்கும் இடம் தி.நகர். இந்தத் தடவை என்னுடைய கணிப்பு தப்பவில்லை. கூட்டம் காலையிலும் வந்தது, மதியமும் வந்தது, மாலையும் வந்தது, ஏன், இரவு கூட வந்தது. கமர்ஷியல் இடங்கள்- சதா பணம் புழங்கிக் கொண்டிருக்கும் இடங்கள்தான் நம் தொழிலுக்கு ஏற்றவை என்கிற ரகசியம் புரிந்தது.

பகுத்தறிவு, 'பட்ட அறிவு' இரண்டின் அடிப்படையில் நான் பிறகு தேர்ந்தெடுத்த போதும் என்கிறார்கள். டைப்பிங் வேலை குறைந்துவிட்டதே என்று நான் சோர்ந்து போய் உட்கார்ந்துவிட முடியுமா? அந்த 'பிரிண்ட்-அவுட்'ஐ இன்னும் எப்படித் தரமாக எடுத்துத்தருவது என்று யோசிக்க வேண்டும். லேசர் பிரிண்ட்டருக்கு பதில் டிஜிட்டல் காப்பியரில் எடுத்துத் தருகிறேன், ஒரு பக்கத்திற்கு 7.00 ரூபாய்க்கு பதில் 8.00 ரூபாய் தாருங்கள் என்று வாடிக்கையாளர்

"எந்த மாதிரியான இடங்களில் கடையைத் திறக்க வேண்டும் என்ற சூட்சுமத்தை நான் தெரிந்து கொண்டது ஒரு சுவாரஸ்யமான கதை!"

கூளிடம் கேட்டேன். அவர்களும் திருப்தியாகத் தந்துவிட்டுப் போகிறார்கள், என் தொழிலும் தொய்வில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. என்ன சொல்ல வருகிறேன் என்றால், உலகம் டெக்னாலஜியை நோக்கி போய்க் கொண்டிருக்கும் போது நாமும் அதே தீரோட்டத்தில் போவதுதான் புத்திசாலித்தனம். இல்லை... எதிர்நீச்சல் போடுவேன் என்றால் நாம்தான் காணாமல் போகவேண்டும்..

உங்களுடைய இந்தப் பேட்டி 'இளமை ஸ்பெஷல்'இல் வரவிருக்கிறது. இளைஞர்களுக்கு ஏதாவது ஸ்பெஷல் மெசேஜ்...

உழையுங்கள். உழைக்காமல் ஒரு காசு வராது. 24 கடைகளுக்கு முதலாளியாக நூற்றுக்கணக்கான ஊழியர்களை வேலை வாங்கும் அதிகாரியாக இன்று என்னைப் பார்க்கிறீர்கள். இதற்கு அஸ்திவாரம் என்ன தெரியுமா? உழைப்பு, உழைப்பு, உழைப்பு தான். 250 பக்கங்களைக் கொண்ட ப்ராஜெக்ட் ரிப்போர்ட்டை ஒரு மாணவன் கொண்டு வருவான். நாளை காலை சப்மிட் செய்ய வேண்டும் எப்படியாவது அடித்துத் தாருங்கள் என்று கெஞ்சுவான். எலக்ட்ரானிக் டைப்ரைட்டரில் அவுட்புட் எடுத்துக் கொண்டிருந்தோம். டைப்ரைட்டருக்குள் 6 நிமிடத்திற்கு ஒரு முறை பேப்பரை ஃபீட் செய்ய வேண்டும். கம்ப்யூட்டரை ஆன் செய்துவிட்டு 5 நிமிடங்கள் கண் அசருவேன். டைப்ரைட்டர் அடித்து முடித்து தானாக நிற்கும். நிற்கிற சத்தத்தைக் கேட்டு மறுபடியும் எழுந்து பேப்பரை ஃபீட் பண்ணிவிட்டு 5 நிமிடம் தூங்கப் போவேன். இப்படியே 250 பக்கங்கள் அடிப்பதற்குள் ஒரு பகல் ஒரு இரவு போய்விடும். இது போல் எத்தனை ப்ராஜெக்ட் ரிப்போர்ட்டுகள் அடித்திருக்கிறேன் தெரியுமா? அதனால் உழையுங்கள், சளைக்காமல் உழையுங்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம்... புத்திசாலித்தனமாக உழையுங்கள்.

ஒரு கட்டை வண்டிக்காரரை எடுத்துக் கொள்ளுங்கள். பத்து மூட்டைகளை வண்டியில் ஏற்றி தன் பிள்ளையை அது மேல் தூக்கி வைத்து, பெண்டாட்டி வண்டியை பின்பக்கத்திலிருந்து தள்ள இவர் இழுக்கிறார்... இதைவிடவா யாரும் அதிகமாக உழைத்துவிட முடியும்? ஆனால் அவர் ஏன் முன்னுக்கு வரவில்லை? அவர் வண்டி இழுத்துக் கொண்டே இருக்க நினைக்கிறார்- இது தப்பு. முதலில் இவர் இழுக்க வேண்டும், பிறகு இரண்டு ஆள் வைத்து இழுக்க வேண்டும். பிறகு பத்து ஆட்கள் வைத்து இழுத்து, இவர் முதலாளி ஆகவேண்டும். அதுதான் முன்னேறுவதற்கு வழி. அதை விட்டுவிட்டு காலமெல்லாம் வண்டி இழுக்கிறேன், கடவுள் காப்பாற்ற வில்லை என்று புலம்பினால் எந்த கடவுளும் காப்பாற்ற வரமாட்டார். உழைப்பையும் அறிவையும் பொறுத்துதான் கடவுளின் உதவியும் இருக்கும்.

அதனால் உழையுங்கள், சளைக்காமல் உழையுங்கள், புத்திசாலித்தனமாக உழையுங்கள்!

கிருஷ்ணா சிதம்பரம்

படங்கள்: **ஸ்ரீஹரி**

புத்தகத் திருவிழா!

180க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில புத்தகக் கடைகள்

24-வது சென்னை புத்தகக் கண்காட்சி

ஜனவரி – 5-ம் தேதி முதல் 16 வரை

இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி, சென்னை – 2

பார்வை நேரம்

வேலை நாட்களில்	– மாலை 2.30 முதல் இரவு 8.30 வரை
விடுமுறை நாட்களில்	– காலை 11.30 முதல் இரவு 8.30 வரை

நுழைவுக் கட்டணம் – ரூ.2-00 மட்டும்

வாங்கும் அனைத்துப் புத்தகங்களுக்கும்

சிறப்புத் தள்ளுபடி – 10%

தினமும் மாலை 7.00 முதல் 7.45 வரை – சிறப்புப் பேச்சாளர்கள்

தேதி	தலைப்பு	பேச்சாளர்
06.1.2001	எழுத்தும் ரசனையும்	திலகவதி, I.P.S.
07.1.2001	அரசியலில் இலக்கியம்	குமரி அனந்தன்
08.1.2001	இதுவரையில் இலக்கியம்	விக்ரமன் (எழுத்தாளர்)
09.1.2001	எலக்ட்ரானிக் மீடியாவும் இலக்கியமும்	சுஜாதா
10.1.2001	பத்திரிகை இலக்கியம்	மாலன்
11.1.2001	வெளிநாட்டுத் தமிழர்களின் புத்தக ஆர்வம்	லேனா தமிழ்வாணன்
12.1.2001	படிப்பும் உடல் நலமும்	Dr. G. சிவகுமார்
13.1.2001	கவிதைகள் அன்றும் இன்றும்	கவிஞர் வாலி
14.1.2001	சின்னத்திரையும் இலக்கியமும்	பி.என். பரசுராமன்
15.1.2001	இலக்கியமும் நேர நிர்வாகமும்	Dr. R. கார்த்திகேயன்
16.1.2001	படிக்கும் வழக்கம்	வாஸந்தி

Programmes sponsored by : Eagle Diaries, Chennai

BAPASI

The Book Sellers' and Publishers' Association of South India

Canteen by : அறுசுவை அரசு நடராஜ ஐயர்

Advt. by - Tamil Nadu Book House, Chennai - 600 005.

தெய்வம்

பே சு கி ற து

தை பிறக்கும் போது
பிறக்கும்
தெய்வக்குழந்தை

❖

மாதம் தோறும்
உங்கள் இல்லங்களில்
பரவசமூட்டும் பக்தி இதழ்

❖

ஆன்மிக இதழ்களில்
இது ஓர் அற்புதம்

ஒவ்வோர் இதழிலும்
பத்மவாசனின்
தெய்வீகத் திருப்படங்கள்

ஒவ்வோர் இதழிலும் அரிய
திருத்தல யாத்திரை

ஒவ்வோர் இதழிலும்
ஜோதிடம், மருத்துவம்

ஒவ்வோர் இதழும்
தெய்வீகம்

மதி நிலையம் பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ், 4 (39),தணிகாசலம் சாலை, தி.நகர்,
சென்னை- 600 017 ✆ 4311 838 e-mail: mathinilayam@eth.net

S.V.முதியோர் இல்லம்

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Exemption) உண்டு

S.V. HOME FOR AGED

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org

பூர்வ கதை

இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் விஜயாலய சோழன் இரண்டாவது சோழ சாம்ராஜ்யத்துக்கு அடிகோலினான். அதைத் தொடர்ந்து பல்வேறு சோழ மன்னர்கள் ஆட்சியில் சோழ சாம்ராஜ்யம் படிப்படியாக வலுவடைந்து விரிவடைந்தது. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் காலத்தில் பாண்டிய குலத்தின் கடைசிப் பிரதிநிதியான வீர பாண்டியன் கொல்லப்பட்டான். பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தில் ஐக்கியம் அடைந்தது.

சுந்தர சோழரின் மூத்த புதல்வனும் வீரபாண்டியன் தலைகொண்ட வீராதி வீரனுமான ஆதித்த கரிகாலன் சோழ சாம்ராஜ்யத்தின் இளவரசனாகப் பட்டம் சூட்டப் பெற்றான்.

சுந்தர சோழரின் அருமைப் புதல்வி குந்தவை மற்றொரு புதல்வன் அருள்மொழிவர்மன் ஆகியோர் நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்றிருந்தார்கள்.

சுந்தர சோழரின் அரசில் முக்கியப் பதவிகள் வகித்த பழுவேட்டரையர்களுக்கும் இதர சிற்றரசர்களுக்கும் முரட்டுச் சுபாவமுள்ள ஆதித்த கரிகாலனிடம் வெறுப்பு. எனவே எல்லோரும் சேர்ந்து சுந்தர சோழரின் பெரியப்பா மகனான மதுராந்தகத் தேவனே சோழ நாட்டின் அடுத்த சக்கரவர்த்தியாக வேண்டும் என முடிவு செய்து, ரகசியமாகத் திட்டம் தீட்டினார்கள். மதுராந்தகனோ, தனது அன்னை செம்பியன் மாதேவியால் சிவனேசச் செல்வனாக வளர்க்கப்

அமரர் கல்கி

பட்டவன். சிற்றரசர்கள் தூபம் போட்டதால் நாடாளும் ஆசை அவனுக்குள் வளர்ந்தது.

இந் நிலையில்தான் காஞ்சியிலிருந்த ஆதித்த கரிகாலன், தனது நெருங்கிய நண்பனான வாணர்குலத்து வீரன் வந்தியத்தேவனிடம் தஞ்சையிலிருந்த சுந்தர சோழருக்கு ஓலை ஒன்று கொடுத்தனுப்பினான். சந்தர்ப்பவசமாக சிற்றரசர்களின் சதி பற்றித் தெரிந்துகொண்டான் வந்தியத்தேவன். குந்தவை தேவியைச் சந்தித்தான். தனது அனுபவங்களைக் கூறினான். இருவரும் காதல் வயப்பட்டனர். குந்தவை அவனிடம் ஓலை கொடுத்து, இலங்கையில் போர் புரிந்து கொண்டிருந்த அருள்மொழியை அழைத்து வர அனுப்பினாள்.

வந்தியத்தேவன் பல சாகசங்கள் புரிந்து பூங்குழலி என்ற ஓடக்காரப் பெண்ணின் துணையுடன் அருள்மொழியைச் சோழ நாட்டுக்கு அழைத்து வந்தான்.

இதற்கிடையில், வீரபாண்டியனின் ஆபத்துதவிகளான ரவிதாஸன், சோமன் சாம்பவன் முதலோனர் சோழ குலத்தை அடியோடு அழித்துவிட்டு மீண்டும் பாண்டிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கச் சதித் திட்டம் தீட்டினார்கள். அவர்களுடன் சதியில் ஈடுபட்டிருந்தவள், பழுவேட்டரையர்களுள் மூத்தவரான பெரிய பழுவேட்டரையரின் இளம் மனைவி பேரழகி நந்தினி.

நந்தினி குழந்தைப் பருவத்தில் பழையாறை ஆலயபட்டர் வீட்டில் வளர்ந்தவள். ஆதித்த கரிகாலர் அவளிடம் ஈடுபாடு கொள்வதை உணர்ந்து செம்பியன்மாதேவி அவளைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பிவிட, அங்கு வீரபாண்டியனிடம் அன்பு கொண்டாள். சில காலம் சென்று ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனின் தலையைத் துண்டிக்கவே, கரிகாலனைப் பழிவாங்கும் நோக்குடன்தான் பழுவேட்டரையரை மணந்து சிற்றரசர்களின் சதிச் செயல்களை ஊக்குவித்து, பாண்டியனின் ஆபத்துதவிகளுக்கும் உதவி வந்தாள் நந்தினி.

வந்தியத்தேவன் இலங்கையில் ஊமைச் செவிட்டுப் பெண்மணி ஒருத்தியைக் கண்டான். அருள்மொழிவர்மர், அந்த மாதரசிதான் தன்னைக் குழந்தைப் பருவத்தில் காவிரி நதியில் மூழ்காமல் காத்தவள் என்று நினைவு கூர்ந்தார். இருவரும் அந்த ஊமைப் பெண்ணுக்கும் பழுவூர் நந்தினிக்கும் உள்ள உருவ ஒற்றுமையைக் கண்டு வியந்தார்கள். பூங்குழலி அவளைத் தனது அத்தை என்று அழைத்தாள். சோழ நாடு திரும்பி குந்தவையிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அந்த ஊமைப் பெண் உண்மையில் சுந்தர சோழருக்கு மிக நெருக்கமானவள் என்பது ஊர்ஜிதமாகியது.

இளமைப் பருவத்தில் சுந்தர சோழர் ஒரு தீவில் சிறிது காலம் அப் பெண்ணுடன் வாழ்க்கை நடத்தியிருந்தார். பிறகு அவளைக் கைவிட்டு சோழ நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றிருந்தார். அவளுக்குத் துரோகம் செய்த குற்ற உணர்வு அவரை வாட்டியது. ஏற்கெனவே பாரிச வாயுவால் தாக்கப்பட்டவர் இன்னும் தளர்ந்து போனார்.

உளமைப் பெண் மந்தாகினிக்கும் சுந்தர சோழருக்கும் பிறந்தவளே நந்தினி, என்று குந்தவை ஊகித்தாள். அப்போது ஆதித்த கரிகாலன் நந்தினியைச் சந்திக்க கடம்பூர் சம்புவரையர் அரண்மனைக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனுக்கு நந்தினி பேரில் உள்ள மோகத்தால் நேரக் கூடிய அசம்பாவிதங்களைத் தடுக்க வேண்டும் என்பதற்காக, இலங்கையிலிருந்து திரும்பிய வந்தியத்தேவனுக்கு ஆதித்த கரிகாலரைக் காப்பாற்றும்படி கட்டளையிட்டு அனுப்பினாள் குந்தவை. மந்தாகினியைச் சுந்தர சோழரிடம் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தாள்.

இந்தச் சமயத்தில், வீர பாண்டியனின் ஆபத்துதவிகளுடைய சதியின் உச்சகட்டமாக, ஒரே நாளில் சுந்தர சோழர், ஆதித்த கரிகாலன், அருள்மொழி வர்மர் ஆகிய மூவரையும் கொல்லத் தீட்டம் தீட்டப்பட்டது. அருள்மொழி வர்மர் சதியிலிருந்து தப்பி, தஞ்சை அரண்மனையை அடைந்தார். சுந்தர சோழருக்கு வைக்கப்பட்ட குறியைத் தான்

ஏற்றுக்கொண்டு உயிர்த் தியாகம் செய் தாள் மந்தாகினி. கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் இருந்த ஆதித்த கரி காலனைக் காப்பாற்ற வந்தியத்தேவனும் அவனிடம் காதல் கொண்ட சம்புவரையர் மகள் மணிமேகலையும் முயன்றார்கள். ஆனால் அவர்கள் முயற்சி தோல்வியுற்றது. கரிகாலனைக் கொன்றது யார் என்று சரியாகத் தெரியாத நிலையில் கொலைப் பழி வந்தியத்தேவன் மீதும் விழுந்தது.

சோழ நாட்டு முதன்மந்திரி அநி ருத்த பிரம்மராயர், இவருடைய சீடன் - ஒற்றன் ஆழ்வார்க்கடியான், பெரிய பழு வேட்டரையர்தான் நந்தினியின் பேரில் சந் தேகங் கொண்டு அவளைக் கொல்ல நினைத்துத் தவறுதலாக ஆதித்த கரி காலனைக் கொன்றார் என்பதாக இவன் எண்ணினான். ஆனால் உண்மையில் நடந்தது என்ன என்பது குழப்பமாகவே இருந்தது. நந்தினி குதிரை ஏறி சோழ நாட்டை விட்டே வெளியேறினாள். பிறகு திரும்பவேயில்லை.

ஆதித்த கரிகாலனின் மரணம் சோழ நாட்டில பெரிய கொந்தளிப்பை ஏற்படுத் தியது. மக்கள் அருள்மொழிவர்மரே பட்டத்துக்கு வர வேண்டும் என்று விரும் பினர். அருள்மொழியின் தாய்வழிப் பாட் டனார் மலையமானும் அவன் மீது காதல் கொண்டிருந்த கொடும்பாளூர் வானதி யின் குலத்தவரும் அருள்மொழியை ஆதரித்தார்கள். ஆனால் மதுராந்தகத் தேவனுக்குத் தான் சிம்மாசனம் ஏற வேண்டும் என்று ஆசை.

அப்போதுதான் செம்பியன் மாதேவியும் முதன்மந்திரி அநிருத்தரும் மதுராந் தகனுக்கு அவனது பிறப்பைக் குறித்த உண்மையைச் சொன்னார்கள். மதுராந் தகன் செம்பியன்மாதேவியின் வயிற்றில் பிறந்த பிள்ளை அல்ல. குலப் பெருமை யற்ற ஒரு செவிட்டு ஊமைப் பெண்ணுக் குப் பிறந்தவன் அவன் என்பதே அந்த உண்மை!

இவ்வுண்மையை மதுராந்தகனுக்குச் செம்பியன்மாதேவி தெரிவிக்க அவன் ஆடிப் போகிறான். அச்சமயம் யதேச்சை யாக அங்கு வரும் அருள்மொழிவர்மர் தமக்கும் குந்தவைக்கும்கூட ஈழநாட்டு ஊமை ஸ்த்ரீ மூலமாக அவ்வுண்மை தெரியும் என்று கூறுகிறான். மதுராந்தகரே ஆட்சிப் பொறுப்பை ஏற்கட்டும். தமக்கு அது வேண்டாம் என்று அவன் கூற, முதன் மந்திரி அநிருத்தர் இது விஷயமாக அவ சரப்படாமல் ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்று சொல்லி விடுகிறார்.

கொலைப் பழி சுமத்தப்பட்டுப் பாதாளச் சிறையில் இருக்கும் வந்தியத் தேவனைப் பற்றிய வருத்தமும் குழப்பமும் குந்தவையை வாட்டுகின்றன. அச்சமயம் வானதி வந்து குந்தவையைக் காண மணி மேகலை வந்திருப்பதாகச் சொல்கிறாள்.

ஐம்பத்து ஒன்றாம் அத்தியாயம்

மணிமேகலை கேட்ட வரம்

திகைத்தப் பிரமை கொண் டவளைப் போல் அப் படியும் இப்படியும் பார்த்துத் திருதிரு வென்று விழித்துக் கொண்டு மணிமேகலை உள்ளே வந்தாள். வானதி கூறியதைப் போல் அவளுடைய தோற்றம் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அழுது அழுது அவளுடைய முகமும் கண்ணிமைகளும் வீங்கிப் போயிருந்தன.

ஆயினும் எக்காரணத்தினாலோ குந் தவைக்கு அவள் மீது இரக்கம் உண் டாகவில்லை. சமீப காலத்தில் சோழ

குலத்துக்கு ஏற்பட்ட விபத்துக்களுக் கெல்லாம் கடம்பூர் சம்புவரையர் மாளி கையிலே நடந்த சதியாலோசனைதான் ஆதி காரணம் என்பதை அவளால் மறக்க முடியவில்லை. கடைசியாக, வீராதி வீரனான தன் தமையன் கரி காலன் அவளுடைய வீட்டிலேதான் கொலையுண்டு மாண்டான் என்னும் எண்ணமும் அவளுக்கு ஆத்திரமூட்டிக் கொண்டிருந்தது.

சட்டென்று, இன்னொரு விஷயம் ஞாபகம் வந்தது. இவளுடைய தமை யன் கந்தமாறனும் வாணர்குலத்து வீர ரும் பழைய சிநேகிதர்கள். அந்த சிநே கிதத்தை முன்னிட்டுத்தான் வந்தியத் தேவர் கடம்பூர் மாளிகைக்குச் சென்றிருந்தார். அங்கே நடந்த சதியா லோசனையைப் பற்றி அறிந்து வந்து சொன்னார். கந்தமாறன் தன் சகோ தரியை வல்லத்து இளவரசருக்கு மணம் செய்து கொடுக்கும் உத்தேசமும் ஒரு காலத்தில் கொண்டிருந்தான். அந்தப் பெண் இவளாகத்தான் இருக்க வேண் டும்...!

இந்தச் செய்தி நினைவு வந்ததும், குந்தவைக்கு மணிமேகலையின் மீது ஒரு புதிய சிரத்தை உண்டாயிற்று. ஆகா! இவள் எதற்காகத் தன்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறாள்? தந்தைக் காகவும் தமையனுக்காகவும் முறை யிடுவதற்கு வந்திருக்கிறாளா? சம்பு வரையர் மாளிகைக்குத் தன் தமையன் கரிகாலனை அழைத்தபோது, அவ னுக்கு இப்பெண்ணை மணம் செய்து கொடுக்கும் பிரஸ்தாபமும் செய்யப் பட்டது. கரிகாலனிடம் ஒருவேளை இந் தப் பேதைப் பெண் தன் உள்ளத்தைச் செலுத்தியிருப்பாளா? தான் மணக்க நினைத்தவன் அகால மரணமடைந்த தால் இவள் சித்தம் கலங்கி விட்டதா? அதைப் பற்றி ஏதேனும் சொல்ல வந்திருக்கிறாளா? அல்லது... அல்லது... ஒருவேளை அப்படியும் இருக்கக் கூடுமா? கந்தமாறன் தன் சிநேகிதனைப் பற்றி இவளிடம் சொல்லித்தானிருக்க வேண்டும். வந்தியத்தேவர் இவள் வீட்டில் தங்கியிருக்கிறார். முன்னால் ஒரு தடவை இருந்திருக்கிறார். இப் போது அதிக நாள் தங்கி இருந்திருக் கிறார். இவள் மனம் ஒருவேளை வந்தியத்தேவரிடம் ஈடுபட்டிருக்குமோ? அப்படியானால், அவர் இவளை நிரா கரித்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இல்லாத பொல்லாத பழி களையெல்லாம் அவர் மீது சுமத்த வந் திருக்கிறாளா...?

இவ்வளவு எண்ணங்களும் அதி விரைவாகக் குந்தவையின் உள்ளத் திரையில் தோன்றி மறைந்தன.

மணிமேகலையின் நெஞ்சத்தை ஊடுருவி அதில் உள்ளதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவள் போல் குந் தவை உற்றுப் பார்த்தாள். அந்தப் பார் வையைத் தாங்க முடியாமல் மணி மேகலை தலை குனிந்தாள். அவளு டைய கண்களிலிருந்து இரண்டு கண் ணீர்த் துளிகள் தரையில் சிதறி விழுந் தன.

"பெண்ணே! நீ ஏன் கண்ணீர் விடு கிறாய்? உன் தமையன் இன்னும் உயி ரோடுதானே இருக்கிறான்? என் தமையன் அல்லவா உங்கள் மாளிகை யில் படுகொலை செய்யப்பட்டு இறந்தான்? அழுதால், நான் அல்லவோ அழ வேண்டும்? ஆனால், என்னைப் பார்! நான் அழவில்லை; கண்ணீர் விட வும் இல்லை. மறக்குலத்து மாதர்கள் வீர மரணம் அடைந்தவர்களைக் குறித்து அழுவது வழக்கமில்லை!" என் றாள் குந்தவை.

மணிமேகலை இளையபிராட் டியை நிமிர்ந்து நோக்கி, "தேவி! என் அண்ணன் வாள் முனையில் இறந்திருந்தால் நானும் அழ மாட்டேன். ஆனால், இறந்தவர்... இறந்தவர்..." என்று மேலே சொல்லத் தயங்கி விம்மி னாள்.

குந்தவை தான் முதலில் சந்தேகித்தது தான் உண்மையாயிருக்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கினாள். இவள் ஆதித்த கரிகாலரிடம் தன் நெஞ்

சைப் பறி கொடுத்திருக்கக் கூடும். அதைச் சொல்லத் தயங்குகிறாள் போலும்! ஐயோ, பாவம்! அப்படியானால் இவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியதுதான். "பெண்ணே! நெஞ்சைத் திடப்படுத்திக் கொள். மனத்தில் உள்ளதைத் தைரியமாகச் சொல்லு! இறந்து போனவன் உன் தமையன் அல்ல; என் அண்ணன்தான். அதற்காக நீ ஏன் அழ வேண்டும்? ஒருவேளை உங்கள் வீட்டில் விருந்தாளியாக வந்திருந்த போது இப்படியாகிவிட்டதே என்று நினைத்து வருந்துகிறாயாக்கும்! அதற்கு நீ என்ன செய்வாய்? வீட்டில் பெரியவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். பொறுப்பு அவர்களுடையதே..."

"இல்லை, தேவி, இல்லை! பொறுப்பு என்னுடையதுதான்! அதனாலேயே எவ்வளவு அடக்கிப் பார்த்தும் என் துயரத்தை அடக்க முடியவில்லை. என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுவதும் நிற்கவில்லை. இந்தக் கையில் பிடித்த கத்தியினால் அந்த வீராதி வீரரைக் கொன்றேன் என்று எண்ணும்போது என் நெஞ்சம் வெடித்துச் சிதள் சிதளாகி விடும்போல் இருக்கிறது..."

குந்தவை தேவி திடுக்கிட்டவளாய், "பெண்ணே! இது என்ன பிதற்றுகிறாய்? உனக்குச் சித்தப் பிரமை பிடித்து விட்டதா?" என்றாள்.

"இல்லை; இல்லை! எனக்குச் சித்தப் பிரமை இல்லை. பிடித்தால் இனிமேல் தான் பிடிக்க வேண்டும். உண்மையில் நடந்ததையே சொல்கிறேன். ஆதித்த கரிகாலரைக் கொன்றவள் இந்தப் பாதகிதான். தங்களிடம் உண்மையைச் சொல்லித் தக்க தண்டனை பெறுவதற்காகவே வந்தேன்..."

"சீச்சி! இது என்ன அவதூறு? வீராதி வீரனாகிய என் தமையன் ஒரு பெண்ணின் கையால் கொலையுண்டதாக என்னை நம்பச் சொல்கிறாயா? இம்மாதிரி சொல்லும்படி உனக்கு யார் கற்பித்துக் கொடுத்தார்கள்...?"

"ஒருவரும் கற்பித்துக் கொடுக்கவில்லை, தேவி! நான் சொல்லுவதை

யாரும் நம்பக்கூட மறுக்கிறார்கள். என் தமையனும் தந்தையும்கூட நான் சொல்வதை ஒப்புக் கொள்ளவில்லை...''

''ஏன் வீண் கதை சொல்லுகிறாய்? அவர்கள்தான் உனக்கு இவ்விதம் சொல்லும்படி கற்பித்திருக்க வேண்டும். அல்லது நீயே உன்னுடைய தந்தையையும் தமையனையும் காப்பாற்றுவதற்காக இப்படிக் கற்பனை செய்து கொண்டு வந்தாய் போலும்...!

''தேவி! அவர்களை ஏன் நான் காப்பாற்ற முயல வேண்டும்! என் விருப்பத்துக்கு விரோதமாக அவர்கள் என்னை மணம் செய்து கொடுக்கப் பார்த்தார்கள். முதலில், மதுராந்தகத் தேவரைக் கட்டிக்கொள் என்றார்கள். பிறகு திடீரென்று ஆதித்த கரிகாலரை அழைத்து வந்து 'இவரைத்தான் நீ மணந்து கொள்ள வேண்டும். மணந்து கொண்டால் சோழ சிங்காதனம் ஏறுவாய்!' என்றார்கள். அப்படி என்னைப் பலி கொடுக்கப் பார்த்தவர்களுக்காக நான் பரிந்து ஏன் வர வேண்டும்? அவர்கள் செய்த குற்றத்தை நான் செய்ததாக ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்? இல்லவே இல்லை!'' என்று கூறினாள் மணிமேகலை.

''பெண்ணே! நீ சொல்லுவது ஒன்றைவிட ஒன்று விசித்திரமாயிருக்கிறது. என் தமையன் கரிகாலனை மணந்து கொள்ளும் பாக்கியத்துக்காக எத்தனையோ ராஜாதி ராஜர்களின் குமாரிகள் தவங் கிடந்தார்கள். அப்படியிருக்க, உன் தந்தையும் தமையனும் உன்னைப் பலி கொடுக்க விரும்பியதாக நீ சொல்லுவது ஏன்? சோழர் குலத்தில் வாழ்க்கைப் படுதல் அவ்வளவு பயங்கரமான துன்பம் என்று நீ கருதியது ஏன்?''

''தேவி! எனக்குக் கூடப் பிறந்த தமக்கையோ, தங்கையோ, யாரும் இல்லை. தங்களையே என்னுடைய உடன் பிறந்த சகோதரியாக நினைத்துச் சொல்கிறேன்...'' என்றாள் மணிமேகலை.

''என் தமையனைக் கொன்றதாகச் சொல்லுகிறாய்; என்னுடன் சகோதரி உறவு கொண்டாட எப்படித் துணிகிறாய்?'' என்று இளையபிராட்டி சற்றுக் கடுமையாகக் கேட்டாள்.

''எனக்கு அந்த உரிமை உண்டு. தங்கள் சகோதரர் கரிகாலர் என்னைக் கூடப் பிறந்த சகோதரியாக எண்ணினார். அவ்வாறு தம் கைப்பட எழுதியும் இருக்கிறார். அதை நினைக்கும் போதுதான் அவரை நான் கொல்லும் படி நேர்ந்தது குறித்து என் உள்ளம் துடிக்கிறது. அதற்குப் பிராயச் சித்தம் என்னவென்று கேட்பதற்காகவே தங்களிடம் வந்தேன்!'' என்று கூறிவிட்டு மீண்டும் விம்மினாள் மணிமேகலை.

இளையபிராட்டி வானதியிடம் மெதுவான குரலில், ''பாவம்! இந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே சித்தப் பிரமைதான் போலிருக்கிறது. இந்தச் சமயத்தில் இவளை அழைத்துக் கொண்டு வந்தாயே? திடீரென்று வெறி முற்றிவிட்டால் என்ன செய்கிறது?'' என்றாள்.

வானதி ''அக்கா! எனக்கும் கவலையாகத்தானிருக்கிறது. தயவு செய்து கோபமாகப் பேசாதீர்கள். நல்ல வார்த்தையாகப் பேசி அவளைத் திருப்பி அனுப்பிவிடுவோம்!'' என்றாள்.

குந்தவை மணிமேகலையைப் பார்த்து, ''பெண்ணே! நடந்தது நடந்து விட்டது. எல்லாம் விதியின் செயல்! வருத்தப்படாதே! என்னை உன் தமக்கையாகவே நீ பாவித்துக் கொள்ளலாம். ஏதோ சொல்ல வேண்டும் என்றாயே? அது என்ன? அல்லது நீ விரும்பினால் இன்னொரு சமயம் வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்!'' என்றாள்.

''இல்லை, இல்லை; இப்போதே சொல்லி விடுகிறேன். அக்கா! தாங்கள் பெண்ணாய்ப் பிறந்தவர்கள். ஆகையால், நான் சொல்வதைத் தெரிந்து கொள்வீர்கள். புருஷர்களிடம் எவ்வளவு சொன்னாலும் அவர்களால் தெரிந்து கொள்ள முடியாது. ஒரு பெண் தன் உள்ளத்தை ஒருவருக்குக் கொடுத்து விட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்டவர் கையில் ஆயுதம் ஒன்றுமின்றி நிராதரவாக இருக்கும்போது, இன்னொருவன் கையில் பெரிய வாளை எடுத்துக் கொண்டு அவரைக் கொல்லப் போகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அப்போது அந்தப் பெண் உண்மையான அன்புள்ளவள் என்றால், என்ன செய்வாள்? பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாளா...?"

குந்தவைக்கு உடனே மந்தாகினியின் நினைவு வந்தது. அவளுடைய கண்களில் கண்ணீர் துளித்தது.

"அது எப்படிச் சும்மா பார்த்துக் கொண்டிருப்பாள்? குறுக்கே சென்று தன் உயிரைக் கொடுத்தாவது தன் காதலனுடைய உயிரைக் காப்பாற்ற முயன்றிருப்பாள்!"

இதைக் கேட்ட மணிமேகலை, "ஆகா! இந்த மாதிரி யோசனை சொல்ல எனக்கு யாரும் இல்லாமற் போய் விட்டார்களே? அந்தப் பாதகி பழுவூர் நந்தினியின் யோசனையைக் கேட்டல்லவா மோசம் போய்விட்டேன்? என்னைத் தன் உடன் பிறந்த சகோதரியாகப் பாவித்து என் காதலருக்கு மணம் செய்து வைக்கவும் எண்ணியிருந்த உத்தமரை இந்தப் பாவியின் கைகளால் கொன்றுவிட்டேனே?" என்று சொல்லி விம்மினாள்.

இளையபிராட்டி குந்தவை தேவி திரும்பி வானதியைப் பார்த்து, "வெறி முற்றிக் கொண்டு வருகிறது!" என்று மெல்லிய குரலில் கூறினாள்.

பின்னர், மணிமேகலையை நோக்கி, "பெண்ணே! அழ வேண்டாம்! நடந்தது என்னவென்று சொல்லு! இல்லாவிட்டால், இன்னொரு சமயம் சொல்லுகிறாயா?" என்றாள்.

"இல்லை, இல்லை. இப்போதே சொல்லிவிடுகிறேன், அக்கா! என் தமையன் கந்தமாறன் வெகு காலமாகத் தன் சிநேகிதர் ஒருவரைப் பற்றி எனக்குச் சொல்லிவந்தான். அவர் சில மாதங்களுக்கு முன்னால் ஒருநாள் கடம்பூரில் உள்ள எங்கள் மாளிகைக்கு வந்தார். அவரைப் பார்த்தவுடனேயே என் நெஞ்சம் 'இவர்தான் என் நாயகர்' என்று தீர்மானித்து விட்டது..."

"இளையபிராட்டி குரலில் சிறிது நடுக்கத்துடனேயே அப்படி உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பாக்கியசாலி யார்?" என்று கேட்டாள்.

"அவரைப் பாக்கியசாலி என்றா சொல்கிறீர்கள்? இல்லை, இல்லை. என் உள்ளம் அவரிடம் சென்றபோது, என் துரதிர்ஷ்டமும் அவரைப் பிடித்துக் கொண்டது. இன்று இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையின் பாதாளச் சிறையில் அவர் அடைபட்டுக் கிடக்கிறார். அக்கா! பழுவேட்டரையர் வீட்டுப் பெண்கள் சொன்னார்கள். இந்தக் கோட்டையிலுள்ள பாதாளச் சிறை ரொம்பப் பயங்கரமாக இருக்குமாமே? அதற்குள் அடைபட்டவர்கள் திரும்ப உயிரோடு வருவதில்லையாமே?" என்றாள்.

"அதெல்லாம் பொய், பெண்ணே! நானும் இதோ நிற்கும் வானதியும் பாதாளச் சிறைக்குச் சில காலத்துக்கு முன்பு கூடப் போயிருக்கிறோம்..."

"தேவி! நான் பாதாளச் சிறைக்குப் போக முடியுமா? ஒரு தடவை அவரைப் பார்க்க முடியுமா?"

"அவர் யார் என்று நீ இன்னும் சொல்லவில்லை, பெண்ணே!"

"அவர் வாணர் குலத்து இளவரசர்; பெயர் வந்தியத்தேவர்!"

குந்தவையும் வானதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வானதி இப்போது குறுக்கிட்டு, "அவரைப் பற்றி உனக்கு ஏன் இவ்வளவு கவலை? அவருக்கும் உனக்கும் என்ன உறவு?" என்று கேட்டாள்.

மணிமேகலை வானதியைப் பார்த்து, "நீ யார் அதைக் கேட்பதற்கு?" என்று ஆத்திரமாய்க் கூறினாள்.

உடனே தணிவடைந்து, "கோபித்துக் கொள்ளாதே, அம்மா! நீ கொடும்பாளூர் இளவரசி வானதி அல்லவா? உன்னுடைய பெரிய தகப்பனார்தானே இன்று இக் கோட்டையின் அதிபதியாக இருக்கிறார்? உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். எனக்கு ஒரு வரம் கொடு! உன் பெரிய தகப்பனார் பெரிய வேளாரிடம் சொல்லி வந்தியத்தேவரைப் பாதாளச் சிறையிலிருந்து விடு

தலை செய்! அவருக்குப் பதிலாக என்னைப் பாதாளச் சிறையில் போடச் சொல்லு! இளவரசர் கரிகாலரைக் கொன்ற பாதகி நான்! என் குற்றத்தை நானே ஒப்புக்கொள்ளும்போது, இன்னொருவர் பேரில் குற்றம் சுமத்துவது என்ன நியாயம்...? தேவி! தங்களையும் அடிபணிந்து கேட்டுக் கொள்கிறேன். கொடும்பாளூர் பெரிய வேளார் நியாயம் செய்யாவிட்டால், தங்கள் தந்தை சக்கரவர்த்தியிடம் நேரில் முறையிட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்!" என்றாள் மணிமேகலை.

நந்தவனையின் உள்ளம் பல உணர்ச்சிகளால் அலை கடல் போலக் கொந்தளித்தது. வந்தியத்தேவரைப் பாதாளச் சிறையில் போய்ப் பார்ப்பதற்குக் கூட அவள் தயங்கிக் கொண்டிருந்தாள். இந்தப் பெண்ணோ வந்தியத்தேவரிடம் கொண்ட காதல் நிமித்தமாகக்

கொலைக் குற்றத்தையே ஒப்புக்கொள்ள முன் வந்திருக்கிறாள்.

ஆனால் இவள் கூறுவதில் எவ்வளவு உண்மை? எவ்வளவு கற்பனை? காதலனைக் காப்பாற்றுவதற்காக இப்படிக் கற்பனை செய்து கூறுகிறாளா? ஒரு வேளை நந்தினியின் துர்ப்போதனையைப் பற்றிக் கூறினாளே, அதனால் மதி மயங்கி இவளே அக் கொடிய செயலைச் செய்திருக்கவும் கூடுமா?

இல்லை, இல்லை: இவளால் அந்தப் பாதகத்தைச் செய்திருக்க முடியாது. வந்தியத்தேவரைக் கொலைக் குற்றத்திலிருந்து தப்புவிப்பதற்கே இவ்விதம் சொல்லுகிறாள். இவள் பேசும் விதத்திலிருந்தே இது நன்கு தெரிகிறது. இவள் பேச்சை யாரும் நம்ப மாட்டார்கள். இவள் பேச்சை நம்பி வந்தியத்தேவரை விடுதலை செய்யவும் மாட்டார்கள்.

ஆனாலும், இவளிடமிருந்து இன்னும் ஏதேனும் தெரிந்து கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். கரி

காலனுடைய அகால மரணத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது என்பது நிச்சயம். அதை இந்தப் பெண்ணின் மூலமாக வெளிப்படுத்த முடியுமா?

''மணிமேகலை! உன் நெஞ்சின் உறுதியைப் பாராட்டுகிறேன். உன் காதலனைக் காப்பாற்றும் பொருட்டு நீ உன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொள்ள முன் வந்ததைப் பாராட்டுகிறேன். இம் மாதிரி அரிய செயல்களைக் கதைகளிலும் காவியங்களிலும் தான் கேள்விப் பட்டிருக்கிறோம். உன்னைப் பற்றிக் கவி பாடுவதற்குச் சங்கப் புலவர் யாரும் இந்த நாளில் இல்லாமற் போய் விட்டார்கள். ஆனால் உன் வார்த்தையை நான் நம்பினாலும், மற்றவர்கள் நம்ப வேண்டுமே? கரிகாலனுடைய உயிரற்ற உடம்புக்குப் பக்கத்தில் வந்தியத்தேவர் இருந்ததாக உன் தந்தையும் தமையனும் சொல்லுகிறார்களே? அவர்கள் பேச்சை நம்புவார்களா? உன் வார்த்தையை நம்புவார்களா? உன் வார்த்தையை நம்புவதற்கு இன்னொரு தடையும் இருக்கிறது. வல்லத்து இளவரசரை நான்தான் அவசரமாக என் தமையனிடம் அனுப்பினேன். கடம்பூருக்குப் போகாமல் தடுத்து விடும்படி சொல்லி அனுப்பினேன். அப்படிப் போனாலும், கரிகாலனை விட்டு ஒருகணமும் பிரியாமலிருந்து அவனுக்குப் பாதுகாப்பாயிருக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினேன். அன்றியும் கரிகாலனின் மெய்க் காவற்படையைச் சேர்ந்தவர் வல்லத்து இளவரசர். கரிகாலன் மரண மடையும்போது இவர் அருகில் இருந்திருக்கிறார். அப்படியிருந்தும் அவனைக் காப்பாற்றவில்லை. ஆகையினால் கடமையில் தவறிவிட்டவராகிறார். தம் உயிரைக் கொடுத்தாவது கரிகாலனுடைய உயிரை இவர் காப்பாற்றியிருக்க வேண்டும். இவரே கொல்லவில்லை என்று ஏற்பட்டாலும், கடமையில் தவறியதற்குத் தக்க தண்டனை உண்டல்லவா?''

''தேவி! அவர் தமது கடமையில் சிறிதும் தவறவில்லை.''

''அதற்கு உன் வார்த்தையைத் தவிர வேறு என்ன அத்தாட்சி இருக்கிறது?''

''இதோ அத்தாட்சி இருக்கிறது! தங்கள் தமையனாரின் எழுத்து மூலமான அத்தாட்சியே இருக்கிறது!'' என்று கூறிக்கொண்டே மணிமேகலை தன் இடையில் செருகியிருந்த ஓலை ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

ந்தவை அளவில்லா ஆர்வத்துடன் அந்த ஓலையைப் படித்தாள். ஆம்; ஆதித்த கரிகாலனின் சொந்தக் கையெழுத்துத்தான் அது. வேறு யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக அவனே எழுதியிருக்கிறான். குந்தவைக்குத்தான் முகவரியிட்டு எழுதியுள்ளான் –

''என் அருமைச் சகோதரியார், சக்கரவர்த்தித் திருமகளார், இளைய பிராட்டியார் குந்தவை தேவிக்கு, ஆதித்த கரிகாலன் எழுதியது.

''எத்தனையோ காலமாக எனக்கு இரவில் தூக்கம் கிடையாது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கொடிய பாவம் செய்தேன். சரணாகதி அடைந்த பகைவனைக் கொன்றேன். அவனும் அவனுக்காக உயிர்ப்பிச்சை கேட்டவளும் என்னை வருத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னை நிம்மதியாகத் தூங்க விடுவதில்லை.

''இன்று அதிகாலையில் தூக்கமில்லாமல் வெளி வந்தபோது வால் நட்சத்திரம் விழுந்து மறைவதைக் கண்டேன். என் உடம்பிலிருந்து ஏதோ அச்சமயம் போய்விட்டது. இப்போது வெறும் கூடுமாத்திரமே இருக்கிறது. சகோதரி! இந்தத் துர்நிமித்தம் என்னோடு போகட்டும். நம் அருமைத் தந்தைக்கும் அருள்மொழிக்கும் ஒன்றும் நேராமல் ஏகாம்பர நாதர் காப்பாற்றட்டும். ''நானும் நீயும் நம் இளம்பிராயத்தில் சோழ ராஜ்யத்தின் உன்னதத்தைப் பற்றி எவ்வளவோ கனவு கண்டோம். அவற்றை என்னால் நிறைவேற்றக்கூடவில்லை. என் தம்பி நிறைவேற்றுவான். அவன் மூன்று உலகையும் ஆளப் பிறந்தவன்.

அவனுக்கு வல்லத்திளவரசன் வந்தியத் தேவன் துணைவனாக இருப்பான்.

"தேவி! வந்தியத்தேவன் நீ இட்ட பணிகளை நன்கு நிறைவேற்றினான் என்று அறிந்து திருப்தி அடைந்தேன். இல்லாவிடில் அவனை இங்கே இவ் வளவு முக்கியமான காரியத்துக்கு அனுப்பியிருக்க மாட்டாய். என்னை, என் விதியிலிருந்து, காப்பாற்ற அனுப்பி யிருக்க மாட்டாய்.

"சகோதரி! இங்கே எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அதற்கு என் விதியும் என் பிடிவாதமும்தான் பொறுப்பே தவிர வந்தியத்தேவன் பொறுப்பு அல்ல. நீ சொல்லி அனுப்பியபடி அவன் என்னை இந்தக் கடம்பூர் மாளிகைக்கு வராமல் தடுக்க எவ்வளவோ முயன் றான். இந்த மாளிகைக்கு வந்த பிறகு நிழலைப் போல் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். அதற்காகவே இந்த வீட்டுப் பெண் மணிமேகலையைச் சிநேகம் பிடித்து வைத்துக்கொண்டிருக் கிறாள். அவளுடைய உதவியினால், நான் போக உத்தேசித்திருக்கும் இடத் துக்கு முன்னதாகவே போய் ஒளிந்து கொண்டிருக்கிறான். எல்லாம் என் னைக் காப்பாற்றுவதற்காகத்தான்.

"ஆனால் விதியிலிருந்தும் வினை வசத்திலிருந்தும் ஒருவர் இன்னொரு வரைக் காப்பாற்ற முடியுமா?

"படம் எடுத்து ஆடும் நாக சர்ப்பத் தின் மோகன சக்தியினால் கவரப்பட்ட சிறிய பிராணிகள் தாங்களே வலியச் சென்று அப் பாம்புக்கு இரையாகி மடி யும் என்று கேள்விப்பட்டிருப்பாய்.

"அம் மாதிரியே நானும் நந்தினியிடம் போகிறேன். அவள் நம் சகோதரி என்று எனக்கு எச்சரிக்கை அனுப்பியிருக்கிறாய். அதை நம்ப முடியவில்லை. ஆயினும் அவள் விஷயமான மர்மம் ஏதோ ஒன்று இருக்கிறது. அதை அறிந்து கொள்வதற்கே போகிறேன். எப்படியும் இன்று உண் மையை அறிந்து கொள்வேன்.

"என் விதி என்ன ஆனாலும் வந் தியத்தேவன் பேரில் குற்றம் யாது மில்லை. அவன் உன் கட்டளையைச் சரிவர நிறைவேற்றி வருகிறான். சகோ தரி! அந்த மாய மோகினி நந்தினியின் வலையில் கந்தமாறனும், பார்த்திபேந் திரனும் அடியோடு விழுந்து விட்டார் கள். அப்படி விழாமல் தப்பிப் பிழைத் தவன் வந்தியத்தேவன் ஒருவன்தான்.

"அவனுக்கு என்ன பரிசு கொடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. இந்த வீட்டில் மிகச் சுட்டிகையான பெண் ஒருத்தி இருக்கிறாள். என் உடன் பிறந்த சகோதரியைப் போல் அவள் பேரில் எனக்குப் பிரியம் உண்டாகி விட்டது. மணிமேகலையை வந்தியத்தேவனுக்கு திருமணம் செய்வித்தால் அவனுக்கு நல்ல பரிசாக இருக்கும். ஆனால், சகோதரி, உனக்கு இது சம்மதமாக இருக்குமோ, என்னமோ தெரியாது."

"என் அருமைத் தங்காய்! இந்த ஓலையை அந்தப் பெண்ணிடந்தான் ஒப்புவிக்கப் போகிறேன். நல்லவேளை யாக அவளுக்குப் படிக்கத் தெரியாது. அவளைக் குறித்து உன் விருப்பம் எப் படியோ அப்படிச் செய்! நம் குடும் பத்தில் நீயே மிகச் சிறந்த அறிவாளி. உன் வார்த்தையை நான் தட்டி நடந் தேன். அதன் பலனை அநுபவிக்கப் போகிறேன். தம்பி அருள்மொழியாவது உன் யோசனைப்படி நடந்து சோழ சாம்ராஜ்யத்தை மகோந்நத நிலைக்குக் கொண்டு வருவானாக..."

ந்த இடத்தில் எழுத்து நின்று போயிருந்தது. ஓலையைப் படித்து முடிக்கும்போது குந் தவையின் கண்களிலி ருந்து கண்ணீர் சொரிந் தது.

கண்களைச் சட்டென்று துடைத் துக்கொண்டு மணிமேகலையைப் பார்த்து, "பெண்ணே! இந்த ஓலை உன் னிடம் எப்படி வந்தது? யார் கொடுத் தார்கள்?" என்று கேட்டாள்.

"தேவி! இளவரசரே என்னிடம் கொடுத்தார். அவரைப் பற்றி நந்தினி என்னவெல்லாமோ தவறாகச் சொல்லி யிருந்தாள். ஆகையால் எனக்குத்தான், காதல் ஓலை எழுதியிருக்கிறார் என்று முதலில் நினைத்துக்கொண்டேன். இதைத் தீயில் போட்டுப் பொசுக்கிவிட

பில்ராத்

மருத்துவமனை

வயிறு சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும்
ஓர் முழுமையான தீர்வு.

அல்ட்ராசானிக் முறையுடன்
லேப்ராஸ் கோப்பி சிகிச்சை

மூல நோய்க்கு அறுவை இல்லா

☆ லேசர் சிகிச்சை,
☆ கிரையோ சிகிச்சை
மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை

℞

சிறப்பு சிகிச்சைகள்:

- அல்சர்
- அபண்டிஸைடிஸ்
- கர்ப்பப்பை நோய்
- பித்தப்பை கற்கள்
- குடல் இறக்கம் (Hernia)
- ஓவரியில் கட்டி எடுத்தல்
- குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை

சிறப்பு அம்சங்கள்

- ரத்த இழப்பு இல்லை
- தழும்பு ஏற்படாது
- உடனே பழைய நிலைக்குத் திரும்பலாம்

BILLROTH HOSPITAL

24 HOURS SERVICE

43, லட்சுமி திரையரங்க சாலை, செனாய் நகர், சென்னை-600030. போன் : 6440020 / 6441777.

எண்ணினேன். பிறகு, என்னதான் எழுதியிருக்கிறார் என்று பார்க்கலாம் என்று நினைத்துப் பத்திரப்படுத்தி வைத்தேன். என் தோழி சந்திரமதியிடம் கொடுத்துப் படித்துக் காட்டச் சொன்னேன். என்னைத் தம் உடன்பிறந்த சகோதரி என்று எழுதியிருக்கும் வீர புருஷரை இந்தக் கைகளினால் கொன்று விட்டேன் என்று எண்ணும்போது என் நெஞ்சு துடிக்கிறது தேவி! படுகொலை செய்த பாதகிக்கு என்ன தண்டனை உண்டோ அதை எனக்குக் கொடுக்கும் படி செய்யுங்கள்!'' என்று வேண்டினாள் மணிமேகலை.

அவளுடைய பரபரப்பும், அவள் பேசியவிதமும், அவள் இதைக் கற்பனை செய்து சொல்லுகிறாள், வந்தியத் தேவரைக் காப்பாற்றுவதற்காகச் சொல்லுகிறாள் என்பதை நன்கு வெளிப்படுத்தின. குந்தவை அதை அறிந்துகொண்டாள். ஆயினும் அவள் கொண்டு வந்த ஓலை கற்பனை அல்ல. அது கரிகாலரின் சொந்த எழுத்து. வந்தியத்தேவரைச் சிறை மீட்கவும் பயங்கரமான கொலை குற்றம் அவர் மீது சாராமல் தடுக்கவும் இந்த ஓலையே போதும். இந்தப் பெண் வாயை மூடிக் கொண்டிருந்தால் ரொம்ப அநுகூலமாயிருக்கும். ஆனால் எப்படி இப் பெண்ணைச் சும்மா இருக்கப் பண்ணுவது?

''மணிமேகலை! இன்னமும் கரிகாலரை நீதான் கொன்றதாகச் சாதிக்கிறாயா!'' என்று கேட்டாள்.

''ஆம், தேவி!''

''இந்த ஓலையைப் படிக்கச் சொல்லிக் கேட்டதாகச் சொல்கிறாய். இதில் உன்னை உடன் பிறந்த சகோதரி என்று கரிகாலன் குறிப்பிட்டிருக்கிறான். அவ்வளவு உன்மேல் பிரியம் வைத்திருந்த வனை நீ எதற்காகக் கொல்ல வேண்டும்?''

''ஓலையை முன்னதாகப் படித்திருந்தால் அந்தப் பயங்கரமான காரியத்தைச் செய்திருக்க மாட்டேன். அவருடைய மனத்தை அறியாமல் செய்து விட்டேன். அந்த வஞ்சகி நந்தினியும் என் மனத்தைக் கெடுத்து வைத்திருந்தாள்.

''எந்த விதத்தில் கெடுத்திருந்தாள்?''

''வந்தியத்தேவர் மீது கரிகாலர் துவேஷம் கொண்டிருப்பதாகவும், அவரைக் கொன்றாலும் கொன்று விடுவார் என்றும் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாள். அதற்குத் தகுந்தாற்போல கரிகாலரும் கையில், வாளைத் தூக்கிக் கொண்டு, 'எங்கே அந்த வந்தியத் தேவன்? அவனை இதோ கொன்று விடுகிறேன்!' என்று கூத்தாடவே, நான் உண்மையென்று நம்பிவிட்டேன். உடனே என் கையிலிருந்த கத்தியினால்...''

''பெண்ணே! இந்தப் பேச்சை விட்டு விடு. வீராதி வீரனாகிய ஆதித்தகரி காலனை ஓர் அபலைப் பெண் கொன்றாள் என்பதை நான் நம்பினாலும் உலகம் நம்பவே நம்பாது.''

''தேவி! வேறு யார் கொன்றிருக்க முடியும்? கரிகாலருடைய உடல் கிடந்த இருட்டறையில் வந்தியத்தேவரும் நானும் மட்டுமே இருந்தோம். அவர் கொல்லவில்லை. பின்னே, நான்தானே கொன்றிருக்க வேண்டும்?''

''நீ இப்படிச் சொல்வதினால் இறந்த போன என் தமையனுக்கு அபகீர்த்தி உண்டாக்குகிறாய். மேலும் இன்னொன்று யோசித்துப் பார்! வாணர் குலத்து இளவரசர் நீ கொலைக் குற்றம் செய்தாய் என்பதை ஒப்புக்கொண்டு சும்மா இருப்பாரா? நீ அவரைக் காப்பாற்ற விரும்புவது போல் அவர் உன்னைக் காப்பாற்ற விரும்ப மாட்டாரா? நீ பிடிவாதமாகச் சொல்வது போல் அவரும் 'நான்தான் கொன்றேன்' என்பார். நீ பெண் என்பதற்காக உன்னை ஒருவேளை மன்னித்து விடுவார்கள். அவரை மன்னிக்க மாட்டார்கள். இராஜ குலத்தினரைக் கொன்ற துரோகிகளுக்கு எவ்வளவு பயங்கரமான தண்டனை விதிக்கப்படும் என்று உனக்குத் தெரியும் அல்லவா? நாற்சந்தியில் நிறுத்தி வைத்து ...''

இதைக் கேட்ட மணிமேகலை 'ஓ'வென்று அழுதுவிட்டாள். தேம்பி அழுதுகொண்டே ''அக்கா! தாங்கள் தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று கதறினாள்.

(தொடரும்)

Wish you all a happy & prosperous New Year 2001

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 434 4442, 432 7764 TUESDAY HOLIDAY

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R.ஜுவல்லரி. எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-க்கு வாங்கிப் பயன்பெறுங்கள். உடனடியாகக் கிடைக்கும். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். தங்கத்தில் 2 கிராம் முதல் 8 கிராம் வரை ரூ. 1500/- முதல் ரூ. 5000/-ம் வரை உடனடியாகக் கிடைக்கும். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

குறிப்பு : 21–ம் நூற்றாண்டை வெற்றிகரமாக்க அவரவர் ராசிக் கல்லை அணிந்து முயற்சி செய்து வெற்றி பெறுங்கள்.

இன்டெர்நெட்

"ஓ, நிஜமான பத்திரிகை இப்படித்தான் இருக்குமாம்மா?"

"ஈமெயிலில் நிறைய பேருக்கு இன்விடேஷன் அனுப்பினியே, ஒருத்தரும் வரலியா?"

"'வெப்-காம்'இல் ஒளிபரப்பு, இன்டர்நெட்டிலிலேயே பார்த்துக்கறோம்னிட்டு எல்லாரும் பதில் ஈமெயில் அனுப்பிட்டாங்க!"

ஒவ்வோ!

"டிபன் ரெடி!"
"என்ன டிபன்?"

"அடுத்த வீட்டில்
இருக்கோம்ன்னு பேரு,
பேசி நாள் கணக்கா
ஆச்சு..."

"ஈமெயில் அட்ரஸ் வாங்கிடுங்க,
மணிக்கணக்கா பேசலாம்!"

பிரஹ்லாத்
படம்: மகேஷ்

உங்கள் சமையல் சுவையானதாக மட்டுமில்லாமல்

தரமாகவும் இருக்க

ஆவின் நெய்

AGMARK
SPECIAL GRADE

ஆவின்

Naturally Nutritious

ஆவின் – தமிழ்நாடு அரசு கூட்டுறவு நிறுவனத்தின் தரமான தயாரிப்பு

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com /
www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com

செ.ம.தொ.து./2052/மலைகள்/2000/MOULDS

குமுதி எழுதாமாதிரி

நாலு வயசு புஜ்ஜிக்குட்டிதான் இன்னும் எழுத வில்லை. எனக்கு ஜோடியாக இருப்பவள் அவள் ஒருத்தி தான்.

எழுத்து விஷயத்தில், எங்கள் வீட்டில் பிள்ளையார் சுழி போட்டது என் மனைவி. வாழைப்பழத்தில் மோர்க்குழம்பு செய்வது முதல் வாஜ்பாயின் அமெரிக்கப் பயணம் வரை ஏகப்பட்ட துணுக்குகளைப் பத்திரிகையில் எழுதி விட்டார்.

தான் பெற்ற இன்பம் பெறுக நம் மாமியாரும் என்று என் தாயாரின் எழுத்துத் திறமையைக் கண்டுபிடித்து அதில் ஈடுபட வைத்து விட்டாள்.

என் அம்மாவும், கூட்டுக் குடும்பம் வேண்டும் என்று ஒரு பெண்கள் பத்திரிகை நடத்திய கட்டுரைப் போட்டியில் ஜெயித்து பேட்டியெல்லாம் கூட கொடுத்து விட்டாள். (ஒரு பேட்டிக்கே எங்கள் லீலா அபார்ட்மெண்ட்ஸின் எல்லா ப்ளாட்வாசிகளும் என்னவோ அவர்களே பேட்டி கொடுப்பதுபோல் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தது வேறு விஷயம்)

அப்பா பேச ஆரம்பித்தாலே, "இந்த வாரம் லெட்டர்ஸ் டு த எடிட்டர்ல..." என்றுதான் பேச ஆரம்பிப்பார். ஆர்.எஸ். நடராஜன் என்று இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் எல்லாவற்றிலும் பார்த்திருப்பீர்களே, அப்பா தான்.

போதாததற்கு மணிப்பயல் சின்னு, தான் வரைந்த படத்தை கோகுலத்திற்கு அனுப்பி விட்டான். ஏதோ கேள்வி பதிலில் பரிசும் வாங்கி விட்டான்.

வேலைக்காரி, பூக்காரி, இஸ்திரி செய்பவன் என்று தொடங்கி பேப்பர்காரன், போஸ்ட்மேன், அடுத்த ப்ளாட்காரர், கோவிலில் சந்திக்கும் மாமி மாமாக்கள், தாத்தா பாட்டிகள், உறவினர், நண்பர், எல்லோரும் இவர்களைப் (எங்கள் வீட்டுச் சதிக்கும்பலை) பார்த்தவுடன், இந்த வாரம் என்ன எழுதியிருக்கீங்க என்றுதான் பேசவே ஆரம்பிப்பார்கள்.

அப்பா இரண்டு நாள் ஊருக்குப் போயிருந்த போது பக்கத்துக் காய்கறிக் கடைக்கு ரொம்ப நாள் கழித்துப் போனேன்; தெரிந்தவன்தான். ''வாங்க சார்'' என்று பல் இளித்தவன், ''நம்ம அம்மா எளுதற வீட்டுக் குறிப்பெல்லாம் நல்லாயிருக்குன்னு என் பொண்டாட்டி சொன்னா சார், அவங்க துக்ளக்ல குப்பரா கேள்வி எல்லாம் கேக்குறாங்க'' என்று என்னைத் திருப்திப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு கடுப்பேற்றினான்.

இன்னொரு நாள் ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்து விட்டேன். அம்மா அப்பா கோவிலுக்குக் கதை கேட்கப் போயிருந்தார்கள்.

''கொஞ்சம் குழந்தைகளைப் பாத்துக்குங்க, நான் பக்கத்து ஸ்டூடியோல பாஸ்போர்ட் போட்டோ எடுத்துட்டு வந்துடறேன். ஏற்கெனவே இருக்குறது நிறைய பத்திரிகைல வந்தாச்சு''... வசந்தி போன வுடன் கார்ட்டூனைத் திருகிவிட்டு சின்னு, புஜ்ஜியை உட்கார்த்தி வைத்துவிட்டு வராந்தாவில் நின்று கொண்டிருந்தேன்.

''ஸ்கூல்ல இங்லிஷ்

கே. மாதங்கி

கட்டுரைப் போட்டி இருக்கு; கொஞ்சம் பாயிண்ட்ஸ் கேக்கலாம்னு நெனைச்சேன். தாத்தா இருக்காரா அங்கிள்?" இது எதிர் ப்ளாட் நேகா. சன்னல் கம்பி வழியாகக் கேட்டாள்.

(ரேகா சரி, இது என்ன நேகா? அழகிப் போட்டியில் கலந்து கொள்ளத்தான் இப்படிப் பெயர் வைக்கிறார்களோ?)

"தாத்தா கோவில் காலட்சேபத்திற்குப் போயிருக்கிறார் நேகா!"

"ஐ சீ, லேட்டாகுமில்ல, அப்ப ஆன்ட்டி இருக்காங்களா அங்கிள்? எனக்கு நாளைக்கே எழுதிக் கொடுக்கணும்" - இழுத்தாள்.

"வெளிய போயிருக்கா நேகா. அரைமணி நேரம் ஆகும்."

"இட்ஸ் ஓகே அங்கிள், அரை மணி நேரம் கழிச்சு வர்றேன்."

நானும்தான் ஒரு போஸ்ட் கிராஜுவேட்; என்னைப் பார்த்தால் பொது அறிவு இருப் பவனாகத் தோன்றவில்லையா? என்னைக் கடுப்பேற்றவென்றே இப்படி ஏதாவது அவ்வப்போது நடக்கும்.

வெளியே, அக்கம் பக்கம் இந்தத் தொல்லை என்றால், வீட்டில் இருக்கும் போது அது வேறு மாதிரி ஆகிவிடுகிறது.

வீட்டுக்குள் அவ்வப்போது நுழையும் விருந்தாளிகள், சொந்தக்காரர்கள் காப் பியைக் குடித்து விட்டு நிமிர்வதற்குள் வீட்டில் உள்ளவர்கள் அவர்களைச் சும்மா விடுவார்களா என்ன?

அப்பா, அம்மா, வசந்தி யாராக இருந்தாலும் நைசாக, நீங்க என்ன பத்திரிகை படிப்பீங்க என்று சாமர்த்தியமாக முன் பெல்லாம் ஆரம்பிப்பார்கள்.

இப்போதோ, 'ப' பத்திரிகையில் கூப்பன் வெட்டி அனுப்புங்கள் தங்கச் சங்கிலி கிடைக்கும். 'பு' பத்திரிகையில் எல்லா கேள் விக்கும் பதில் சொன்னால் விமான டிக் கெட்டைக் கையில் கொடுத்து விடுவார்கள், 'பை' பத்திரிகையில் படங்களை எல்லாம் வெட்டி ஒட்டினால் ஆயுள் சந்தா இலவசம் என்றெல்லாம் ஆசை காட்டி பத்திரிகைப் பேச்சை நுழைத்து விடுவார்கள்.

அப்புறம் என்ன? இவர்கள் ராஜ் யம்தான்.

அப்பா மூக்குக் கண்ணாடியை அவ சரமாக ஒரு தடவைக்கு இரண்டு தடவை சரிசெய்து கொண்டு அம்மாவின் பரிசுக் கட்டுரையையோ வெல்ல அடை ரகசியத் தையோ காட்டுவார். (ஒரு கட்டுரையையே

ஆறு மாசமாகக் காட்டிக் கொண்டிருக் கிறார்கள்)

அம்மா தன் பங்குக்கு வசந்தியின் பரிசுக்குரிய கேள்வி பதில் அல்லது துணுக்கு, இல்லாவிட்டால் சென்ற மாதம் பெண்கள் பத்திரிகை நடத்திய ரங்கோலிப் போட்டியில் எடுத்த போட்டோ என்று காண்பித்துவிட்டு, கூடவே கொசுறாக என் மருமகள் ரொம்ப கெட்டிக்காரி. எங்களுக்கு இதில் ரொம்பப் பெருமை என்று கூறுவாள்.

வசந்தி சும்மாயிருப்பாளா? பேப்பரில் வந்த என் அப்பாவின் கடிதங்களை, எடுத்து ஃபைல் பண்ணியதைத் தூக்கி வருவாள். "அம்மா, உங்க பத்திரிகைப் பேட்டி, நீங்க கூப்பன் வெட்டி பரிசு வாங்கிய வைரத் திருகாணி எல்லாம் காட்டுங்க என்று என் அம்மாவைச் செல்லமாக விரட்டுவாள்.

ஏற்கெனவே எல்லாம் பேசி வைத்துக் கொண்ட மாதிரி நடந்து கொள்வார்கள். யாரும் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ள மாட்டார்கள். அடுத்தவரின் சாதனைகளை ஒவ்வொருவரும் அடுக்குவார்கள். தற் பெருமை என்று நான் ஒருமுறை கமெண்ட் அடித்ததன் விளைவு!

ஆகா என்ன ஒற்றுமையான குடும்பம் என்று வந்தவர்கள் வாயைப் பிளப்பார்கள். திறந்த வாயை மூடக்கூட அவர்களுக்கு அவகாசம் கொடுக்க மாட்டார்கள் இவர்கள்.

"எல்லாரிடமும் நாங்கள் இதெல்லாம் சொல்றதில்லை; சிலருக்கு மட்டும்தான்

இதுபோன்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஆர்வம் இருக்கும். அதனால் உங்களைப் போன்று பொறாமை இல்லாமல் நல்லதை எங்கு பார்த்தாலும் பாராட்டும் மனது இருப்பவரிடம் மட்டும்தான் நாங்கள் காட்டுவோம்" என்று வசந்தி ரகசியமாக வந்த விருந்தினரிடம் கூறுவாள்.

இது போதாதா, வந்தவர்களுக்கு வாயெல்லாம் பல்லாகிவிடும். அவர்களும் இந்த ஜஸில் குளிர்ந்து கரைந்து உருகி தங்களைத் தாராள மனதுடையவராக காண்பித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் இடையே பேச அவகாசம் கிடைக்கும் சில வினாடிகளில் தூள் கிளப்பி விடுவார்கள்.

இதற்கிடையில் அம்மா, வந்தவர்களிடம் காண்பிக்காமல் விட்டுப் போன பத்திரிகைக் குறிப்பு, கேள்வி, விமர்சனம், போட்டோ, துணுக்கு, கடிதம், கட்டுரை என்று முடிந்தவரை எல்லா ஒரிஜினல்களையும் சுற்றுலாவுக்குப் போயிருக்கும் பத்திரிகைகளின் நகல்களையும், போதாததற்கு வைரத் திருகாணி, தங்கச் சங்கிலி, ப்ளாஸ்டிக் வாளி, பாலியஸ்டர் புடவை, கலர் பென்சில், ப்ரஷர் குக்கர், போட்டோ ஆல்பம் என்று இதுவரை வாங்கிய பரிசுக் குவியலையும் கடை பரப்புவாள்.

எதைப் பார்ப்பது எதைப் புகழ்வது என்று விருந்தாளிகள் மலைத்துப் போவார்கள்.

போட்டி, பரிசு, கூப்பன், தங்கம், பணம், மணியார்டர், காசோலை, பத்திரிகை, போட்டோ, வீடியோ என்ற வார்த்தைகள் மட்டுமே ஒலிக்கும்.

வந்தவர்கள் இதைத் தவிர வேறு எதைப் பற்றியும் பேசவோ சிந்திக்கவோ முடியாதவர்களாக ஆகியிருப்பார்கள்.

சரி, இதில் எனக்கென்ன கடுப்பு என்றால் 'தேமே' என்று இருக்கும் என்னைப் பார்த்து, "ஸார், இதெல்லாம் தடை சொல்லாமல் என்கரேஜ் பண்ணுவார் போலிருக்கிறதே," என்று போகிற போக்கில் வந்தவர் ஏதோ என்னைப் பற்றி நல்லதாக நாலு வார்த்தை சொல்ல வருவார்.

நானும் இலவசப் பெருமையை (கும்மாவா ஐயா! எங்கள் வீட்டில் நாட்டின் அந்தனை பத்திரிகைகளும் வாங்குகிறோம் – என் தயவில்தானே?) ஜம்பத்துடன் எதிர் பார்த்தால்,

இந்தச் சதிக்கூட்டம், "அவரா, அவர் ஒண்ணும் சொல்ல மாட்டார், அதுவே பெரிய உபகாரம்" என்று நல்லவர்கள் போல வஞ்சப் புகழ்ச்சி பண்ணும்.

மனுஷனை வெறுப்பேத்த இது போதாதா?

இவர்கள் ஜம்பத்தை அடக்கி ஒடுக்க ஒரே வழி இவர்கள் யாரும் கைவைக்காத இடத்தில் கை வைப்பது, கை என்ன தலையையே வைப்பது என்று முடிவு செய்து

இனிய 2001ம் ஆண்டில்
எப்போதும் வாழ்வில்
வெற்றி காணுங்கள்!

- உங்கள் பிள்ளைகள் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற வேண்டுமா?
- தீராத பணப்பிரச்சனையா...? தொழிலில் முன்னேற்றமில்லையா...? (அ) வேலை வாய்ப்பில்லையா...?
- வாழ்க்கையில் நிம்மதியில்லையா...?
- நீண்டநாள் திருமணத்தடையா...?
- நிம்மதியற்ற, மகிழ்ச்சியற்ற வாழ்வா...?
- சொல்ல முடியாத கோளாறுகளா...?

உங்கள் வீட்டை அல்லது கடையை இடிக்காமல் அல்லது உடைக்காமல் வாஸ்து முறைப்படி அமைத்து தருகிறோம்

இனி கவலையை விடுங்கள்

உங்கள் அனைத்து பிரச்சனைகளையும் எளிய முறையில் தீர்க்க நமது

"விஞ்ஞான வாஸ்து மையத்தை"

இன்றே அணுகி....
இனிதே தீர்வு காண்பீர்.....!

SCIENTIFFIC
VAASTHU CENTtRE

Traditional Vaasthu &
Feng-Shui Vaasthu Consultants.
PLANNER & DESIGNER
AS PER VAASTHU

2/940, (New No.45), West Mugappair,
Chennai - 600 058. Ph : 635 9104
E-mail: scientifficvaasthu@rediffmail.com

'ப' பத்திரிகையில் கூப்பன் வெட்டி அனுப்புங்கள், தங்கச் சங்கிலி கிடைக்கும், 'பு' பத்திரிகையில் எல்லா கேள்விக்கும் பதில் சொன்னால் விமான டிக்கெட்டைக் கையில் கொடுத்து விடுவார்கள், 'பை' பத்திரிகையில் படங்களை வெட்டி ஒட்டினால் ஆயுள் சந்தா இலவசம்...

விட்டேன்.

என்ன செய்யலாம் என்று ஒரு ஞாயிற்றுக் கிழமை மூளையைக் கசக்கிக் கொண்டபோது, 'ஆ', சட்டென்று நீப்பொறி எனக்குள் பரவியது.

ஒரு சிறுகதையை எப்பாடுபட்டாவது சுயமாக எழுதி விடுவது. அதை ஒரு பிரபல பத்திரிகைக்கு அனுப்பி விடுவது.

கஷ்டப்பட்டு எழுத வேண்டும். நோ ஆபாசம். அரசியல் எனக்குத் தெரியாது. இரண்டும் ரூல்டு அவுட். பிறந்ததிலிருந்து சிங்காரமில்லாத இடத்தில் சென்னை வாசம். கிராமத்தைப் பார்த்தது பாரதிராஜா படத்தில்தான். மண் வாசனை வசனங்கள் இலோ என்ன விலை என்பேன். மெட்ராஸ் பாஷையில் வெளுத்துக் கட்டலாம் என்றால்... அதுவும் உதைக்கும்.

சரி, வீட்டில் பேசும் தமிழிலேயே எழுதி விடுவது என்று நிர்மானித்தேன். காதல் கதை எழுதலாமா? எழுதலாம், ஆனால் கொஞ்சம் கற்பனை இருந்தால்தானே எடுபடும்?

காதல் பேச்சில் எத்தனை தூரம் எனக்குப் பரிச்சயம் என்று யோசித்துப் பார்த்தேன்.

''பொண் பாக்க வந்தப்போ, நீங்க டீஷர்ஸ்ல என்னைப் பார்த்துக்கிட்டே எழுந்ததும் என்கிட்ட தனியா பேசணும்னு சொல்லுவீங்கன்னு நினைச்சால், இன்னும் கொஞ்சம் போண்டா வைக்கறீங்களான்னு கேட்டீங்களே, இப்படிக் கேட்ட ஒரே ஆள்

இந்த ஜெனரேஷன்ல நீங்களாகத்தான் இருக்கும்.''

வசந்தியின் குரல் செவியில் மீண்டும் ஒலிக்க அதை ஒதுக்கித் தள்ளினேன்.

காமெடி வசனம்தானே எடுபடும். ஆனால் ஹாஸ்யத்திற்கும் எனக்கும் இடைவெளி அதிகம். ஒன்றுமில்லாததற்குச் சிரிப்பவர்கள் கூட சீரியஸாகி விடுவார்கள். சே, முதலில் எதிர்மறை எண்ணத்தைத் தொலைத்துக் கட்ட வேண்டும். என்ன கதை எழுதுவது?

ஆ, சிக்கிவிட்டது! என் அனுபவங்களையே எழுதி விடுவது என்று முடிவு செய்தேன்.

எனக்காகவே கம்ப்யூட்டர் ஒன்று காத்துக் கொண்டிருந்தது.

வலையிலிருந்து தமிழ் ஃபாண்ட்டை இறக்கிக்கொண்டேன். ஆங்கில எழுத்துக்களையே தமிழ்ப்படுத்தி டைப் அடிக்க வேண்டும். அடித்து விடலாம். திரையில் அழகுத்தமிழ் கொஞ்சும். அடித்தல் திருத்தல், அசிங்கங்கள் இல்லாமல் அழகாக எடிட் செய்து அப்படியே ஈமெயில் அனுப்பி விடலாம்.

ஒருவழியாக எழுதி அனுப்பி விட்டேன்.

சரியாக இரண்டு வாரம் கழித்து, 'அடுத்த இதழில் உங்கள் கதை வருகிறது' என்று ஈமெயிலிலேயே பதில் வந்து விட்டது. அன்றைய தேதியில் அலுவலகத்திலிருந்து வருகையில் பத்திரிகையை வாங்கிவிட்டேன். பிரசுரமான கதையைப் பார்த்தவுடன் பரவசமாகி, அவசர அவசரமாக வீடு வந்து சேர்ந்தேன்.

அட, வீட்டுக்கு அடிக்கடி வரும் விருந்தாளிகள் வந்திருக்கிறார்களே!

அவர்களிடம் பெருமையுடன் காட்டி, வீட்டினர் முகத்தில் கரியைப் பூச வேண்டும், என்று நினைக்கையில், வசந்தி, ''நீங்க சொல்லாட்டாலும் உங்க கதையைக் காலையிலேயே படிச்சுட்டோம், போன் பண்ணிப் பார்த்தால் நீங்க இன்னிக்கு பூரா சீட்டுலயே இல்லை'' என்றவாறு வந்தவர்களிடம் கதையைக் காட்டிக் கொண்டிருந்தாள்.

அவர்களில் ஒருவர் உரத்த குரலில், ''பேஷ், பேஷ்! நீங்களும் எழுத ஆரம்பிச்சுட்டீங்களா? சரியாத்தான் சொன்னாங்க கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்னு!'' என்றாரே பார்க்கலாம்! ○

PAY NO INCOME TAX UPTO Rs.1,82,000/-

NSC, NSS, PPF, LIC, ULIP, ICICI & IDBI BONDS, 11% P.O. MIS, COMPANY DEPOSITS, MEDICLAIM & HOUSING LOANS

JEEVAN SHREE, JEEVAN SURAKSHA & OTHER LIC POLICIES AND LIC GROUP INSURANCE SCHEMES

1)To get maximum return under Sec.88 investments

2)To Invest in children's LIC money back policy and get guaranteed return (investment of Rs.2652/-p.a. upto age-18 grow Rs.2,06,000)

3)To Invest for first 4-years and without any further investment, get I.T. rebate, Life cover and huge return .

4)To Get 100% tax exemption and get more than 20% return with life cover. (invest Rs.10,123/- p.a. and get back commutation of Rs. 4,16,875/- and Rs.9,359/-p.m. as pension till death and again return of capital of Rs. 12,50,625/-

For full details Please fix appointment over phone (4850078 / 4850539) and meet us either at your place or at our offices.

COLLECT FREE PAMPHLET

SPN ENTERPRISES
E-mail: rsn40@yahoo.com

Investment consultants

West Mambalam Office:
40/32, Govindan Road, West Mambalam, Chennai - 33.(Near Srinivasa Theatre)
Phone: 4850078, 4850539

T. Nagar Office:
23, Rameswaram Road, T. Nagar, Chennai - 17. (Near Ranganathan Street),
Phone:4345101 & 4345263

பௌல் அண்ட் பி மெரி!

டீன்ஏஜ் ஜாயிண்ட்

பௌலிங்... "ஹாட் இஸ்ஃப் ஆஃப் டிஸ்கோ யா!" என்று சிணுங்கும் டீன்ஏஜ்களுக் காகவே பிரபலப்படுத்தப்பட்ட ஒரு கேம். பந்து 'பின்'களைப் பந்தால் வீழ்த்த வேண் டும் - விஷயம் யே ஹி ஸை! ஆனால் சிறுக கள் போட்டி போட்டுக் கொண்டு 'பின்' களை அடித்து நொறுக்குவதும் "ஸாஸ... யே!" என்று 'ஹை-பிச்' இல் கத்துவதும் ஒ... இது இவ்வளவு உற்சாகமான சமா சாரமா என்று ஆச்சர்யப்பட வைக் கிறது. அடிக்கும் பந்து சுய்ங்ங்ங்ங்.... என்று கன்வேயர் பெல்ட்டில் திரும்ப வந்து விடுவது க்யூட்! ஒருவர் விளை யாடி முடித்தவுடன் விழுந்து கிடக்கும் 'பின்'களை உடனே அப்புறப்படுத்தி ஒரு புது செட் 'பின்' களை மெஷீன் அடுக்கி விடுவது டபுள் க்யூட்!

ஞானகி

படங்கள்: ஸ்ரீஹரி

கேட்கவேண்டிய கேசட்டுகள்!

'டீன் ஏஜ்'கள் மத்தியில் ஃபாஸ்ட்–மூவிங் காசெட்டுகள் என்ன?... ஒரு பிரபல மியூசிக் ஸ்டோர் காசெட்டுகளை எடுத்துத் தர, அவற்றை விமர்சிக்கிறார்கள் இசைப் பிரபலங்கள், க்ராஸ் – கோர்ட் டிலிருந்து.

ப்ளாக் அண்டு ப்ளூ :
பேக்ஸ்ட்ரீட் பாய்ஸ்

'More than that' ... வாய்ஸ் சிங்க்ரனைசேஷன் பிரமாதம்!
'backing vocals'ம் சூப்பர்!
'How did I fall in love' ... ரொம்ப பாஷனேட்!
'Shining star... பீட் மெலிசாக இருந்தாலும் வலுவாக இருக் கிறது!
'It's true... வெகு அழகு!
'Shape of my heart...' 'கார்ட் ப்ரோக்ரெஷனும் 'ஸ்கேல் சேஞ் சஸ்'ம் அருமை!

'கடம்' கார்த்திக் (கர்னாடிக்)

மின்னலே (தமிழ் சினிமா)

★ ஹாரிஸ் ஜெயராஜின் ஒரிஜினல் ட்யூன்களுக்கு அமோக வரவேற்பு தந்து அவரை மேலே ஒரு தூக்கு தூக்கி விட்டு விடுவார்கள் 'மன் ஏஜ்'கள்!

★ 'அழகிய தீயே'.... 'வெஸ்டர்ன் + கன்ட்ரி+பாப்' இன் இனிமையான மிக்ஸ்ச்சர்!

★ 'வெண்மதி'.... காலனை டாப் செய்ய வைக்கிறது!

★ ஒரு ஃபால்ஸ் மாடுலேஷன் கூட இல்லாத பாம்பே ஜெய்ஸ்ரீயின் 'வசிகரா' கேசட்டின் வசிகரம்!

★ 'ஒரே ஞாபகம்'... இனிமை, ஆனால் சிக்ரெம் முடித்து விடுவது சோகம்!

★ 'ஓ மாமா'... நியூஜெனரேஷன் ஸ்பெஷல்!

வீணை காயத்ரி (கர்னாடிக்)

தொகுப்பு : **சித்தார்த்**

பார்வை (தமிழ் பாப்)

* எட்டு பாட்டுகள், ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு தீம்!
* ''ஓ நெஞ்சமே''... கலல் மாதிரி இருக்கு... விரிக்ஸ்லோட மூடுக்கு ஸ்ரீனிவாஸ் குரல் ரொம்ப மாட்சிங்!
* ''சங்கீதமே''வுக்கு நடுவில் வயலின் குழைவது இனிமை!
* காசெட்டின் லைலைட் – ''மூகுத்திக் கல்லு'' – நாடோடி டைப் பாட்டு!
* ''ஆராரிராரோ''.... பாட்டுக்கு நடுவில் குழந்தையின் குரல் ரிகார்டு செய்யப்பட்டிருக்கும் விதம் சாமர்த்தியம்!
* ''வாழ்வை வாழ்ந்து விடு... பாப் ஆல்பத்தில் தத்துவப் பாடலைச் சேர்த்திருப்பது புதுமை!
* ப்ரவீண்மணியின் மியூஸிக் டைரக்ஷன் ஒஹோ!

ப்ரியா சகோதரிகள் (கர்னாடிக்)

அலைபாயுதே (கர்னாடிக்)

* ஒன்பது பாட்டுகளும் made me sit up and listen!
* சுதாவோட குரல் எவ்வளவு 'சாஃப்ட்' ஆ, இனிமையா இருக்கு?
* ரெக்கார்டிங்கும் மிக்ஸிங்கும் எக்ஸலெண்ட்!
* வெல், எனக்கு என்ன பாட்டு பிடிச்சிருந்துன்னு குறிப்பாச் சொல்ல முடியலை... மொத்தத்தில் சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்ட மாதிரி இருக்கு!

ஷாலினி (தமிழ் பாப்)

டாப் ஃபாஷன்ஸ்
'ஊர்வசி' - உடலில்
செல்ஃப்-டிசைனாக
பிரொக்கேடு வேலையும்
பார்டரில் சிவப்பு பச்சை
கலந்த வெள்ளி ஜரிகை
யும் ஒரு ரிச்-லுக்
கொடுப்பது உண்மை...
புடைவைகள் : போத்தீஸ்,
குமரன் சில்க்ஸ்

'சௌத்'

'அனுராதா' - கரையில் ஜரிகையின் ஊடே ஓடும் ஆரஞ்சு நூல், புடைவையின் 'கெட்-அப்'பையே மாற்றி விடுகிறதே...

'டிவின்-சில்க்' - புடைவையின் ஒரு பக்கம் வழக்கமான டிசைன் இருக்க அதன் மறுபக்கத்தின் (ரிவர்சிபிள்) டிசைனை நாமே வடிவமைத்துக் கொள்ளலாமாம். 15 நாட்களில் புடைவை ரெடி-

'தீபிகா' - மாங்காய் புட்டாக்களுடன் குறுக்கே பரவும் ஜரிகைக் கொடிகளையும் 'ரிச்' முந்தியையும் அடக்கிவாசிக்க வைத்து அழகாக்கிவிடுகிறது சீ-கிரீன் உடல்...

தொகுப்பு : கி.சித

மகா கும்பமேளா - 2001

அன்னதானத்தை அரும்பணியாக ஆற்றிவரும்

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் - க்கு

மற்றும் ஒரு பெரும்பணி செய்ய ஆன்மீக அன்பர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில்

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை அலகாபாத் - திரிவேணி சங்கமத்தில் நடைபெறும் "மகா கும்பமேளா 2001 - ல்" அன்னதானம் செய்ய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

அன்புடையீர், வணக்கம்!

புண்ணியம் சேர்க்கும் அலகாபாத் - திரிவேணி சங்கமத்தில் 14.1.2001 முதல் தொடங்கி ஒரு மாத காலத்திற்கு அன்னதானப்பணியை நலம்தரும் இறைபணி சேவையாக மேற்கொள்ளவிருக்கிறோம்.

மகா கும்பமேளாவில் நீராடுபவர்களுக்கும், அன்னதானத்தில் பங்குபெறுபவர்களுக்கும் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த புண்ணியம் கிட்டும் என்கிறது நம் சாஸ்திரங்கள்.

பாற்கடலை கடைந்து அமிர்தம் வெளிப்பட்டதும் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடைபெற்ற போட்டியில், அமிர்தத்தை எடுத்துக்கொண்டு ஓடி வரும்போது அமிர்தத் துளிகள் 12 இடங்களில் விழுந்தது. அதில் 8 இடங்கள் தேவலோகத்திலும், 4 இடங்கள் பூலோகத்திலும் விழுந்தன. இந்த 4 இடங்கள்தான் அலகாபாத், உஜ்ஜயின், நாசிக், ஹரித்வார் ஆகும். இதில் முதன்மையான அலகாபாத்தில்தான் இந்த முறை மகா கும்பமேளா நடைபெறவிருக்கிறது.

இந்த மகா கும்பமேளா சேவையில் பங்குபெற விரும்பும் அன்பர்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

அன்னதான சேவையில் ஈடுபடும் சிவநேசச்செல்வர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D.D / M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக அலகாபாத் - திரிவேணி சங்கமத்தில் தழைத்திட உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax: (044) 4616311 E-Mail:siva siva@vsnl.net

மகா கும்பமேளாவில் அன்னதானம் செய்தால் அதன் பலன் பத்தாயிரம் மடங்காகப் பெருகும்!

அக்னி சர்மா பக்கம்



கன்னி

உத்தியோகஸ்தர்களுக்கு முன் னேற்றமான பாதை தெரியும். சுயபலம், தன்னம்பிக்கை ஜாஸ்தியாகும். குடும்பத்தில் சுப காரியம், கல் யாணம்னு தடபுடலா நடக்கும். பண நடமாட்டம் சீராக இருக்கும். வீண் அலைச் சலைத் தவிர்த்திடுங்க!

மேஷம்

உங்க செல்வாக்கும், அந்தஸ்தும் மதிப்பும் உயரப் போற காலம் வந்தாச்சு. இனிமே, தொட்டதெல்லாம் பொன்தான். கொடுக்கல், வாங்கல், ஸ்பெகு லேஷன் ஆஹா ஓஹோ. புனிதப் பயணம் போவீங்க. உற்சாகமா இருப்பீங்க.

சிம்மம்

லாபம் கொண்டு வரும் வாரம். இளைஞர்கள் பெரும் புகழ் அடைவாங்க. பெண்கள் மகிழ்ச்சியாக இருப்பாங்க. திறமை பளிச்சிடும். உழைப்புக்கான பலன் கட்டாயம் கிடைக்கும். அலுவல கத்தில் சிறு சிறு பிரச்னைகள் வரும். சுலபமா சமாளிச்சுடுவீங்க.

ரிஷபம்

உடல் ஆரோக்கியத் துல கவனம் தேவை. உஷ்ண சம்பந்தமான பாதிப்பு ஏற்படும், உஷார். எந்தக் காரியத்திலும் நிதானமா செயல்பட றது நல்லது. பதறிய காரியம் சிதறிப் போகும். மாணவர்கள் திறமை, உழைப்பு வீண் போகாது. கடுமையா உழைச்சா, பலன் தானா கனியும்.

கடகம்

பொருளாதார நிலைமை 'கிடுகிடு'னு உயரப் போகுது. அதனால் உங்க கையில எப்பவும் பண நடமாட்டம் திருப்தியா இருக்கும். அரசு விவகாரங்களில் அனு கூலம் ஏற்படும். புதிய பதவி, பட்டம்னு ஜமாய்க்கப் போறீங்க. குடும்பத்தில மகிழ்ச்சிக்குக் குறையே இருக் காது.

மிதுனம்

கலைத் துறைக்காரங்களுக்கு சூப்பர் வாரம். எதிர்ப்புகள் குறைஞ்சு, நல்ல எதிர்காலம் தென் படும். வெளி நாட்டுத் தொடர்பால் அதிகம் அனுகூலம் இருக்காதுன்னாலும், நீங்களே சமாளிச்சுடுவீங்க. வாழ்க் கைத் துணையால அளவான நன்மைகள் கிடைக்கும்.

ஜனவரி 10 முதல் 16 வரை

தொடர்ச்சி : 126ம் பக்கம்

டாப் ஃபாஷன்ஸ்

❶ ஸாட்டின் சில்க், ஃப்ளாரல் தாமன் எம்பிராயிட்ரியுடன்...

❷ பிளாக் - பிரிண்ட்டோடு ஹாண்டு - எம்பிராயிட்ரி செய்யப்பட்ட பிக் அண்டு பிக் டிசைன்...

உடைகள் : லேடி ஹாக், ரேணூஸ் காலரி

'நார்த்'

❸ மெஷீன் எம்பிராயிட்ரி செய்யப்பட்ட கிரேப் - ஷிஃபான்...

❹ இத்தாலியன் கிரேப், ஜார்தோஸி எம்பிராயிட்ரியுடன்...

❺ 'சில்வர் படாலா' எம்பிராயிட்ரியுடன் கிரேப் லைனிங் செய்யப்பட்ட டிஷ்யூ...

❸

❹

❺

தொகுப்பு : கி.சித



ஜனவரி 10 முதல் 16 வரை

அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்

• சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஜெய்சங்கர்-மாரியம்மாள் தம்பதிகள்

நாங்கள் திருமணமாகி 6 வருடமாகியும் குழந்தையில்லாமல் பல மருத்துவமனைகள் ஏறி இறங்கினோம். **டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்** அவர்களிடம் சிகிச்சை பெற்ற 3 மாதத்திலேயே கர்ப்பம் அடைந்து இப்போது அழகிய ஆண் குழந்தை பிறந்துள்ளது.

S. Ravi, BHEL SPD.CP. P.Box.No.1245, Bangalore, Ph: 3346392

• S. Ravi

எனக்கு உடலில் உப்பு அதிகமாக இருப்பதாகச் சொல்லி பெங்களூரில் பல மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று, பின் பரிசோதனை செய்ததில் என் கிட்னி பெயிலியர் ஆகி இருப்பதும், அதை அறுவை சிகிச்சை செய்து மாற்றுவதுதான் ஒரே வழி என்றும் அறிவுறுத்தப்பட்டேன். பின் நண்பர்களின் ஆலோசனைப்படி **ரப்பானி வைத்யசாலா** வந்து சிகிச்சை பெற்றேன். படிப்படியாக என் உடலில் இருந்து யூரியாவின்அளவு குறைந்து இப்போது கிட்னி மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

E. இராமு

நான் (E. இராமு 51/60, மாணிக்க விநாயகர் கோவில் தெரு, பெரம்பூர், சென்னை – 39)

கடந்த 10 ஆண்டு காலமாக சோரியாசிஸ் நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு பல வைத்தியங்கள் செய்தும் பலனில்லாமல், 12.8.99 அன்று ரப்பானி வைத்யசாலா சென்று சிகிச்சை பெற ஆரம்பித்தேன். தீவிர சிகிச்சையின் பலனால் இன்று புதிய தோலுடன் புதிய மனிதனாக மாறியுள்ளேன்.

(D.ராணி, 518 N.V.N. நகர், திருமங்கலம், அண்ணாநகர் மேற்கு, சென்னை – 40.)

D.ராணி

எனக்கு சுமார் 5 வருடமாக முதுகு மற்றும் கை, கால்களில் ஜாய்ன்ட்டுக்கு ஜாய்ன்ட் வலி ஏற்பட்டு மிகவும் அவதிப்பட்டேன். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் என் முதுகு எலும்பு நகர்ந்திருப்பதாயும் ஆபரேஷனே வழி என்றும் கூறப்பட்டேன். பின் பல அனுபவசாலிகளின் ஆலோசனைப்படி ரப்பானி வைத்யசாலா சென்றேன். ஒரே மாதத்தில் நம்ப முடியாத அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டு இன்று நன்றாக நடமாடுகிறேன்.

(தமிழ்ச் செல்வி சென்னை காரம்பாக்கம், போரூர், 3/143 அண்ணா சாலை)

• தமிழ்செல்வி

அடிவயிற்றில் வலி என்று மூன்று வருடங்களாக சென்னையில் பிரபல பெரிய மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்கு சென்ற நான் தொடர்ந்து சிகிச்சை பெற்றும் கடைசியில் ஆபரேஷன் செய்து கர்ப்பப்பையை நீக்க வேண்டும் என்று கூறி விட்டார்கள். முடிவில் **ரப்பானி வைத்தியசாலாவிற்கு** வந்து சிகிச்சை பெற்ற இரண்டு மாத காலத்திற்கு பின் ஆபரேஷன் செய்யச் சொன்னவர்களிடம் சென்று மீண்டும் பரிசோதனை செய்ததில் இனி ஆபரேஷன் வேண்டாம் எல்லாம் நார்மலாக உள்ளது என்று கூறிவிட்டார்கள்.

மேலும் அல்சர், கை கால் வாதம், மூளை வளர்ச்சி குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.)

(15.12.2000 அன்று யுனானி மருத்துவ மாத இதழை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் வழங்க மாண்புமிகு அமைச்சர் ஆற்காடு வீராசாமி பெற்றுக் கொண்டபோது எடுத்த படம்)

டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா
73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,
மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 8510969, 8410874

டாப்

'ஸ்பார்க்லிங்' - மேலைநாட்டு + டிரெடிஷனல் ஃபாஷனை மிக்ஸ் செய்து பிளவுஸ், டிரௌசர்...

'பெர்ஃபார்மர்' - ஆபீசுக்கு உடுத்தும் எக்ஸிகியூடிவ் வேர்... (வாங்கி உடுத்த ஆபீஸில் அட்வான்ஸ் தருவார்களா?)

தொகுப்பு : கி.சித
உடைகள் : நடாலியா

,பாஷன்ஸ் -'வெஸ்ட்'

'ஷிம்மர்' - 'சிக்'கான டிரவுசரும் 'ஸ்லீவ் லெஸ் டாப்'உம் காதல் அவுட்டிங் குக்குக் குட் சாய்ஸ்...

'கிரிஸ்டல் பால்' - கியூரியோ செய்வதற்கு உபயோகப் படுத்தப்பட்ட ஸ்வரோவ்ஸ்கி கிரிஸ்டல்கள் இப்போது 'ஈவினிங்-கௌன்' இல்...

US EMBASSY
ராவணா கேட்டரிங் சர்வீஸ் காண்ட்ராக்ட் எடுத்திருக்காங்களாம்!
RAVANA CATERING SERVICE
மறந்துபோய் விட்டுட்டு வந்த டாக்குமென்ட்களை எடுத்துட்டு ஹோம்-டாக்ட் கூரியர் சர்வீஸ் ஓடுறாங்களாம்!
தாங்க யூ
DART RIER
- மெய்யம்மை

வாங்கலையோ விசா!

விசா கிடைத்த சந்தோஷத்தில் அவங்க கையில் திளைக்கிறார்கள்- தளாம் தலைமுறை பிள்ளைகளுக்கு கொண்டாட்டம் சொல்லி!
தின்னு வயசுல விசாவுக்காக இங்கே வந்து நின்னேன்.. இப்போதான் கிடைத்தது!
ன்னே வேட்கப்பட்ட
ன்விகளையும் இவர்க
ான்ன பிள்ளைகளையும்
த்தவங்களுக்காக உழைத்திடன்
ரே செய்யுதும் விசா ப்ளஸ்
புகி!

என்னவளே

போஸ்டரைப் பார்த்து ஏமாந்து போனீர்களானால் அது உங்கள் தப்பு.

மாதவனின் இரண்டாவது படம் என்கிற எதிர்பார்ப்புடன் கோக் குடி தேடி வரும் ஜீன்ஸ், டீ ஷர்ட் ரசிகர்களுக்குக் கோலி சோடா 'என்னவளே'!

ஒரிரண்டு மேம்போக்கான மாற்றங்கள் நீங்கலாக அரதப் பழசான காதல் கதை - கதாநாயகி விவாகரத்தானவர் என்ற துணிச்சலான ஆண்டி சென்டிமென்ட்டுக்குப் பொருந்தாத வகையில் கதையம்மப்பும் காட்சியமைப்பும் வளர்ந்துகொண்டே போய் கடைசியில் சுபம் என்கிறபோது கோலி சோடாவிலும் காரமில்லை!

காது கேளாத நண்பர் (சார்லி) காரணமாக காதலர்கள் ஒருத்தரையொருத்தர் தவறாகப் புரிந்துகொள்ள நேர்கிற சோகம் மட்டுமே ரசிகர்களை நிமிர்ந்து உட்காரச் செய்யும். மற்றப்படி காட்சிகள் பழைய நியூஸ் பேப்பர் போல் இலோ கணக்கில் போர் அடிக்கின்றன.

இதில் மாதவன் ஒரு சுயம்பு இசைக் கலைஞர். சாதனையாளராக வர கனவு வேறு.

ஆனால் இதே குறிக்கோளுள்ள கதா நாயகர்கள் தோன்றும் அரை டஜன் படங்களுக்கு ஏற்கனவே இசையமைத்து விட்டதாலோ என்னவோ... இசையமைப்பாளர் எஸ்.ஏ. ராஜ்குமார், வேலை பார்க்க வேண்டிய இடங்களில் ஐஸ்க்ரீம் சாப்பிடப் போய்விட்டார்.

நல்ல சாம்பார் சாதத்தில் நறுக் கென்று கல் அகப்படுகிறமாதிரி அனந்த் பாத் திரப்படைப்பில் எதிர்பாராத முரண் பாடு.

குடும்பத்தோடு போனாலும் நெளியாமல் பார்க்கலாம் என்பது தவிர வேறு ஆறுதல் தேடினால், மாதவன் ஸ்னேகா நடிப்பை மட்டும் சொல்லலாம்.

— விஷ்ணுவல்தாசன்

"என் குழந்தைக்கு, சரியான அளவில், இன்றியமையாத ஊட்டச்சத்து அளிக்கப்படவேண்டும்.
அதனால்தான், நான் ஸெரிலாக்கை நம்புகிறேன்."

"என் குழந்தைக்கு, 4 மாதங்கள் முடிந்தவுடன், அவனுக்கு எந்த திட உணவைப் புகட்டத் தொடங்குவது என்று, உண்மையிலேயே நான் யோசிக்கலானேன். வெறுமனே திட உணவு மட்டும் போதுமானது ஆகாது. குழந்தை ஆரோக்கியமாகவும், வலுவாகவும் வளர்ச்சியடைய, சமச்சீரான அளவில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த திட உணவு தேவைப்படுவதால், என் மருத்துவர் கூறினார். எனவேதான், நான் ஸெரிலாக்கைப் புகட்டத் தொடங்கினேன்."

ஸெரிலாக் எளிதில் சீரணிக்கத்தக்க, சமச்சீரான போஷாக்கு :

ஸெரிலாக் தேவையான ஊட்டச் சத்துக்களை, சரியான அளவில் வழங்குகிறது. இயற்கையான புரதச்சத்துக்கள் நிறைந்த, பால் மற்றும் கோதுமை கொண்டு தயாரிக்கப்பட்ட ஸெரிலாக்கில், கார்போஹைட்ரேட்டுகளும், கொழுப்புச் சத்துக்களும் கூட அடங்கியுள்ளன. அத்துடன், அத்தியாவசியமான விடமின்களும், தாது' பொருட்களும் இதில் நிரம்பியுள்ளன. இதனால் உங்கள் குழந்தைக்கு, ஒவ்வொரு முறையும் சமச்சீரான உணவு கிடைக்கிறது.

சீரணிப்பது எளிது, விதவிதமான பல சுவை உணவுகள் :

நெஸ்லேயின் புரட்சிகரமான 'ஜெட்-லைன் என்னைமேடிக் தொழில்நுட்பம், கார்போஹைட்ரேட்டுகளை எளிதில் சீரணிக்க உதவுகிறது. இதனால் மிருதுவான ஸெரிலாக்கை, உங்கள் குழந்தை, எளிதில் சீரணிக்க முடிகிறது.

ஸெரிலாக்கின் சுவையை, குழந்தைகள் மிகவும் விரும்புகின்றன. 4 மற்றும் 6 மாதங்களுக்கு இடையேயான காலத்தில், ஸெரிலாக் ரீட் மற்றும் ஸெரிலாக் ரைஸ்-ஆகியவற்றிலிருந்து ஒன்றைத் தெரிந்தெடுங்கள். பின்னர் பார்த்து மகிழுங்கள் உங்கள் குழந்தையின் மகிழ்ச்சிக் கும்மாளத்தை!

* குழந்தைக்கு 6 மாதம் முடிந்தவுடன், ஸெரிலாக் ஆப்பிள், ஸெரிலாக் ஆரஞ்சு, ஸெரிலாக் வெஜிடபிள், ஸெரிலாக் முனி மற்றும் ஸெரிலாக் மல்டி தான்யம் இவற்றிலிருந்து ஒன்றைத் தெரிந்தெடுக்கவும்.

உங்கள் குழந்தைக்கு ஸெரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.

IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.
महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें

Mudra NES-1543 Tam (R)-1

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 • Registered No. TN / Chief PMG-141 / 2000 •
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 • Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 14.1.2001

A Godrej Product

To ensure it tastes as good,
simply chill it.

Most foodstuff lose their flavour when they are put in a deep freezer. Chicken is no different. Which is why Real Good Chicken, once cut, is refrigerated to retain its freshness and nutrition. Giving you the convenience of hygienic, clean and dressed chicken. With no thawing required. And, there, you're ready to cook up the juiciest, tastiest chicken ever!

Real Good CHICKEN

Fresh chicken in a bag!

* Available in Bangalore, Chennai, Cochin and Mangalore.

Rediffusion-DY&R/Bom/GA/612a